கோகுலம்

GOKULAM


மார்ச் '92 ரூ. 3/-






அருமைக் குழந்தைகளே!
உங்களால் ஜானி ஜோக்கரை
ஆட வைக்க முடியுமா?
முடியும்!
கோரஸ் ப்ரிட்
பவர் கொண்டு
இது எடுப்பானது!
இது சுத்தமானது!
கோரஸ்
Pritt
Glue Stick
Kores
இலவசம்! ஜானி ஜோக்கர் செய்யும் வழிகாட்டி: இன்றே 1 ரூபாய் தபால் கவரை சொந்த முகவரி எழுதி அனுப்பவும்.
கோரஸ் (இந்தியா) லிட்., தபால் பெட்டி எண். 6558, வொர்லி, பம்பாய் 400 018

கோகுலம்



1992 - மார்ச் மாத இதழ்
மலர் : 10 இதழ் : 2





அருமைச் சிறுவர் சிறுமியரே,

கோகுலம் தனது பத்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருப்பதை ஒட்டி, எத்தனை பேர் பிறந்த நாள் வாழ்த்து அனுப்பியிருக்கிறீர்கள்! பெரும்பாலான மாவட்ட ஆசிரியர் சங்கங்களும், சிறுவர் அமைப்புகளும் கூடத் தங்கள் வாழ்த்தை அனுப்பி அன்பு வெள்ளத்தில் திக்குமுக்காட வைத்திருக்கிறார்கள். சென்னை நகரக் குழந்தைகள் ஒருசிலர் தொலைபேசியில் வாழ்த்தினார்கள். இவர்கள் எல்லோருக்கும் மனமார்ந்த நன்றி. கோகுலத்தில் இன்னும் என்னவெல்லாம் புதுமைகள் செய்யலாம்; புதுப் பகுதிகள் சேர்க்கலாம்; புதுப் போட்டிகள் வைக்கலாம் என்று பலரும் ஆக்க பூர்வமான சில கருத்துகளையும் கூறியிருக்கிறார்கள். கோகுலத்தின் வளர்ச்சிக்கு இவர்கள் கூறிய கருத்துக்களுக்காக இவர்களுக்கெல்லாம் மனமார்ந்த நன்றி. இவை பரிசீலனை செய்யப்பட்டு தகுந்த நேரத்தில் ஆவன செய்யப்படும்.

'எங்கள் ஊரில் நடந்தது' பகுதிக்கு ஏராளமானவர்கள் எழுதியிருக்கிறார்கள். இவை வரும் இதழ்களில் ஒவ்வொன்றாக வெளிவரும்.

கோகுலத்திற்கு அனுப்பப்படும் கதை; பாடல், கட்டுரைகளில் பெரும்பாலானவர்கள் தங்கள் முகவரியைக் குறிப்பிடுவதே இல்லை. இதைப் பற்றி எத்தனையோ முறை எழுதியாகி விட்டது. முழு முகவரி இல்லாது வரும் எதுவும் ஏற்கப்பட மாட்டாது. பதினைந்து வயதிற்கு உட்பட்டவர்கள் எழுதும் போது தங்கள் வயதைக் குறிப்பிட்டால் நல்லது.

இது மார்ச் மாதம். உங்களில் பெரும்பாலானவர்களுக்கு ஆண்டுத் தேர்வு தொடங்கி விடும். திட்டமிட்டுப் படிப்பவர்களுக்குக் கவலை இல்லை. கோகுலம் வாசகர்கள் அனைவருமே திட்டமிட்டுப் படிப்பவர்கள்தான் என்கிறீர்களா? அதுவும் உண்மைதான்!

இடமில்லாக் காரணத்தால் இந்த இதழில் 'உங்கள் நூலகம்' இடம்பெறவில்லை. மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.




இந்த இதழில்...




ஈ புராணம்! பக்கம் 16

பொன்னாடை! பக்கம் 17




கழுதை விழா! பக்கம் 82






முட்டை பக்கம் 85




கிளி பேசுமா? பக்கம் 69

அக்பரை வென்ற துளசிதாசர்! பக்கம் 41



தலைகீழ் தம்புசாமி! பக்கம் 32





பூனைக்குச் சிறை! பக்கம் 21



☛ பக்த துருவன் கதை அரங்கேற்றம்

காலட்சேபக் கலைக்கு ஒரு தீபிகா!

நான்கு வயதுப் பேத்தி தீபிகாவைத் தூங்க வைக்க பாட்டி இந்திரா செய்த முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை.

''பாட்டி என்னை ஏமாத்தாதே. ஏதாவது கதை ஒன்னு சொல்லு. சின்னதா இருந்தாக் கூடப் போதும். நான் கேட்டுக்கிட்டே தூங்கிடறேன்'' என்று உடன்படிக்கைக்கு இறங்கி வந்தாள் பேத்தி.

பாட்டி சிரித்துக் கொண்டே ''பக்த துருவன்'' கதையை சுருக்கமாக, சுவையாக, குழந்தைகள் சுவைக்கும் நடையில் சொல்லி முடித்தாள். கதை முடிந்ததும் வழக்கப்படி தனது சந்தேகங்களைக் கேட்டு, விளக்கம் பெற்று, தூங்கி விட்டாள் தீபிகா.

பாட்டிக்கு தன் நான்கு வயதுப் பேத்தி தீபிகாவைப் பற்றி அளவில்லாத பெருமை. அதற்குக் காரணமும் இருந்தது. பிறந்த ஆறு ஏழு மாதங்களிலேயே அதிசயக் குழந்தையாக தீபிகா மழலையில் பேச ஆரம்பித்து விட்டாள். மற்றவர்கள் பாடுவதையும், பேசுவதையும் அப்படியே தனது மழலையில் செய்து காட்டுவாள்! பாட்டி சொல்லும் பக்திக் கதைகளை அப்படியே மனதில் வாங்கிக் கொண்டு தன் வயதுக் குழந்தைகளுக்கு அவள் சொல்லி மகிழ்விப்பாள்.

தீபிகாவை எல்.கே.ஜி.யில் சேர்த்தார்கள். அவள் கூறும் கதைகள் பாட்டுக்களைக் கேட்க எப்பொழுதும் அவளைச் சுற்றி ஒரு கூட்டம் இருக்கும்! இவள் படித்து வந்த வில்லிவாக்கம் பாலகிருஷ்ண ஜோஷி குருகுலப் பள்ளியில் ஆண்டு விழா. தீபிகாவுக்கு ராதையாக வேடம் போட்டு, நடிக்க பாட பேசச் சொல்லிக் கொடுத்தாள் பாட்டி. மேடையில் ராதையாக ஏறிய தீபிகா, ''கண்ணா, ராதை வந்திருக்கிறேன். வா விளையாட'' என்று கூறி ஆட வேண்டும். அப்படித்தான் பாட்டி சொல்லிக் கொடுத்திருந்தாள். ஆனால், தீபிகா என்ன சொன்னாள் தெரியுமா? ''கண்ணா, நான் தீபிகா வந்திருக்கிறேன். வா என்னோடு விளையாட'' என்று தானாகவே மாற்றிச் சொல்லி எல்லோரையும் அசத்தி பரிசைத் தட்டிக் கொண்டாள்.

பேத்தியின் அதிசயிக்கத்தக்க கதை கூறும் திறமை பாட்டிக்கு ஒரு புதிய

ஐடியாவைக் கொடுத்தது. தீபிகாவுக்கு கதாகாலட்சேபம் செய்யக் கற்றுக் கொடுத்தால் என்ன?

கதாகாலட்சேபம் என்பது பாட்டும் கதையும் கலந்த ஒரு நிகழ்ச்சி. புராணங்கள் இதிகாசங்களை, பாமர மக்களுக்கும் எளிதில் புரியும்படி மிக எளிய நடையில், கதை கூறுவது போல் கூறி, இடையிடையே சோர்வு தட்டாமல் பாடல்களைப் பாடி கேட்பவர் மனத்தில் நிலைக்கும்படி சொல்வது.

பாட்டி, தீபிகாவிற்கு மிகவும் பிடித்திருந்த பக்த துருவன் கதையை கதாகாலட்சேப நிகழ்ச்சியாகச் செய்து, பேத்தியைத் தயார் செய்ய முயன்றாள். எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. தீபிகா அதில் ஆர்வம் காட்டவில்லை. காரணம், அது தீபிகாவுக்குப் புரியாதபடி, கடின நடையில், பெரியவர்களுக்கானதாக அமைந்திருந்ததுதான்! பாட்டியின் நோக்கமும் பெரியவர்களை மகிழ்விக்க வேண்டும் என்பதில்தான் இருந்தது.

தவறு தன்மேல்தான் என்பதை உணர்ந்து கொண்ட பாட்டி, பக்த துருவனை, குழந்தைகளை மகிழ்விக்கும் நிகழ்ச்சியாக, சிறுமி தீபிகா புரிந்து மகிழ்ந்து கூறும் எளிய நடையில், மாற்றிக் கொடுத்தாள். எதிர்பார்த்தபடியே தீபிகா, அளவில்லாத ஆர்வம் காட்டி, அதற்குத் தன்னுடைய மழலையிலேயே மேலும் மெருகூட்டி, தடலடி அடித்தாள்! அவளுக்கு ஏற்றதாக தாத்தாவும் பாட்டியுமாகச் சேர்ந்து சலங்கை கோர்த்த சிறிய சிப்ளாக் கட்டையையும் தாங்களே செய்து கொடுத்தார்கள்!

பள்ளி ஆண்டு விழா. சிப்ளாக் கட்டையுடன் மேடையேறிய தீபிகா, பக்த துருவன் கதையைப் பதினைந்து நிமிஷங்களில் கதாகாலட்சேபமாகப் பொழிந்து முடித்தாள். அதிகம் ரசித்தவர்கள் நூற்றுக்கணக்கான குழந்தைகளே! அதற்குக் காரணமும் இருந்தது.

துருவன் தவம் செய்யக் காட்டிற்குப் போகிறான். கடுமையாகத் தவம் செய்கிறான். எ ப் ப டி என்பதைக் குழந்தைகளுக்கு விளங்க வைக்க வேண்டாமா? இதோ :

"துருவன்
மம்மு சாப்பிடவில்லை!
பால் சாப்பிடவில்லை!
பழம் சாப்பிடவில்லை!
ஒன்றுமே சாப்பிடவில்லை! "

கடுமையான விரதம் என்பது என்ன என்பதை இதைவிடவும் தெளிவாக விளக்க முடியுமா?

குழந்தைகளுக்கென்று அ வ ர் க ள் சுவைக்கும் வகையில் தனியாகப் பத்திரிகைகள், கதைகள், பாடல்கள், நாடகங்கள் இருப்பது போ ல், குழந்தைகளுக்கென்று தனி பாணியில் கதாகாலட்சேபத்தையும் தர முடியும் என்பதை அன்றைய பதினைந்து நிமிட

← தமிழிசைச் சங்கப் பரிசு - மேடையில் ஆளுநர் மற்றும் இசைப் பேரறிஞர்களுடன் தீபிகா



The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication : Madras
2. Periodicity of Publication : Monthly
3. Name of printer : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040
4. Name of publisher : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040
5. Name of Editor : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras - 600 034
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital : Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras - 600 032.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Murali
Publisher

1.3.1992

நிகழ்ச்சியில் நிரூபித்துக் காட்டினாள்
சிறுமி தீபிகா.

தீபிகாவின் புகழ் மெதுவாகப்
பரவத் தொடங்கியது. ஏராளமான
பள்ளி விழாக்கள், ஆலய திருவிழாக்
களில் பங்குகொள்ள அழைப்பு வரத்
தொடங்கியது. பக்த துருவன் பாணி
யிலேயே பாட்டி அவளுக்கு பக்த
பிரகலாதன் கதையையும் சொல்லி
வைத்தாள். அதுவும் பதினைந்து
நிமிடங்களில் முடிந்து விடும்! அதற்கு
மேல் குழந்தைகளுக்குப் பொறுமை
இருக்காது இல்லையா?

தீபிகாவின் தந்தை ஏ. ஆர். ராஜ
கோபாலன் ஒசூரில் அலுவலராக
இருக்கிறார். தாய் மஞ்சுளாவும் ஒசூரில்
கணவருடன் இருக்கிறார். தீபிகா
வளர்வது சென்னையில் அம்மாவழிப்
பாட்டி தாத்தாவிடம். பாட்டி முறை
யாக இசை பயின்றவர். அம்மா இசைக்
கல்லூரியில் பட்டம் பெற்று, இசை
அறிஞர்களான சுகுணா வரதச்சாரி, எம்.
எஸ். அனந்தராமன் ஆகியோரிடம்
முறைப்படி இசைப் பயிற்சி பெற்றவர்.
தீபிகாவுக்கு இசையில் ஆர்வம் இருப்
பது அதிசயம் இல்லையே?

பள்ளிப் பாடங்களை எழுத்துக்
கூட்டியே படிக்கும் மழலை மாறாத
தீபிகா, பதினைந்தே நிமிடங்களில்
பக்த துருவன் கதையையும், பக்தபிரக
லாதன் கதையையும் எளிய மழலை
நடையில் இசை கலந்து கதாகாலட்
சேபம் செய்யும் புதுமையை அறிந்து
பல அமைப்புகளும் அவளை வர
வழைத்துக் கேட்டு பரிசளித்து மகிழ்ந்
தன. குறிப்பிடத்தக்கவை எம். எல். வி.
நினைவு இசை விழா, புவனேஸ்வரி
சுவாமிகள் பூஜை, கபாலி ஃபைன்
ஆர்ட்ஸ் இசை விழா போன்றவை.
தொலைக்காட்சியிலும் தீ பி க ா
கண்மணிப் பூங்காவில் நிகழ்ச்சி தந்து,
கடந்த ஆண்டின் மறக்க முடியாத
நிகழ்ச்சிகள் என்று ரசிகர்கள் தந்த
பட்டியலில் இடம்பெற்றாள்.

தமிழிசைச் சங்கம் இளம் இசைக்
கலைஞர்களை ஊக்குவிக்க ஆண்டு
தோறும் போட்டிகளை நடத்திப்
பரிசளித்து வருகிறது. கடந்த ஆண்டு,
போட்டிகள் அறிவிக்கப்பட்ட போது,
அதில் கதாகாலட்சேபமும் இருந்ததை
தீபிகாவின் தாத்தா ரங்கன் அறிந்தார்.
பேத்தியை அழைத்து வந்து போட்டி
யில் பங்குகொள்ள வைத்தார். முதல்
பரிசு தீபிகாவுக்குக் கிடைத்தது.

கடந்த டிசம்பர் மாதம் தமிழிசைச்
சங்கத்தின் 49வது இசை விழா நிகழ்ச்
சியில் இதற்கான பரிசு வெள்ளிக்
கோப்பையை ஆளுநர் பீஷ்மநாராயண்
சிங் வழங்கி இந்த அதிசயச் சிறு
மியைப் பாராட்டியிருக்கிறார். இவளது
திறமைகளை அறிந்த அறிஞர்கள்,
இவளை அழைத்துக் கொஞ்சி
மகிழ்ந்து தங்கள் பாராட்டைத் தெரி
வித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதிசயிக்கத்தக்க திறமைகளைப்
பெற்றுள்ள சிறுமி தீபிகா, வருங்
காலத்தில் இந்தத் துறையில் மேல்
மேலும் வளர்ந்து புதிய சாதனைகளை
படைப்பாள் என்று கண்டிப்பாக எதிர்
பார்க்கலாம். 'கோகுலம்' படிக்கும்
ஆயிரக்கணக்கான குழந்தைகள் வாசகர்
சார்பில் நமது அட்வான்ஸ் வாழ்த்
துகள்!

அட்டை வண்ணப்படம் : யோகா

எது பொருந்தும்? - போட்டி முடிவு

விடை

முதல் பிரிவில்

கால்களில் அணிவது 1. செருப்பு, 2. சலங்கை.

2வது பிரிவில்

கைகளில் அணிவது :
1. கைக்கடிகாரம், 2. வளை, 3. மோதிரம்.

3வது பிரிவில்

கூந்தலுடன் தொடர்புடையது :
1. ரிப்பன், 2. குஞ்சலம், 3. பூச்சரம், 4. ஹேர் ஆயில், 5. சீப்பு.

4வது பிரிவில்

எதிலும் சேராது தனித்து நிற்பது
நெக்லஸ்

இந்தப் போட்டிக்கு மலை மலையாக விடைகள் வந்தன! கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்தைக் கடந்து இந்தப் போட்டி சாதனை படைத்து விட்டது. பரிசீலனை செய்வதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. பாதிப் பேருக்கு மேல் சரியான விடை எழுதியிருந்தார்கள். அதனால் வழக்கப்படி குலுக்கிப் போட்டு எடுக்கும்படி ஆயிற்று.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. என். விநாயகராம், கோவை - 38.
2. எம். முபாரக்கான், பாரதி புரம்.
3. ஆர். நப்பின்னை, பழனி.
4. கே. கண்ணன் குமார், தாயம்பாளையம் அஞ்சல்.
5. என். ஜாகிர் உசேன், கொடிக்கால்பாளையம்.
6. எஸ். பாரதிப்பிரியா, வேலூர்.
7. பி. சுவாமிநாதன், டோம்பிவி - 421 202.
8. ஜி. வைஷ்ணவி, சென்னை - 79.
9. ஜி. ஷிபுமோன், கே. ஜி. சாவடி.
10. ஏ. முகமது யூசுப், கோட்டுச்சேரி.
11. பி. அஸ்வத், பவானி - 2.
12. மு. நெல்லையப்பன், மேலகரம்.

போட்டியில் உற்சாகமாகக் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு நன்றி. பரிசு பெற்றோர்க்கு வாசகர் சார்பில் பாராட்டுகள்!

சரியான தீர்ப்பு!

முயல் வேட்டைக்குப் போன ராஜாபாதர், மாலையில் ஒரு கோணிப்பை நிறைய முயல்களைப் பிடித்து வந்தார். மான் வேட்டைக்குப் போன கங்காராம், நான்கு புள்ளிமான்களை வேட்டையாடி வந்தார். புதிதாகக் கட்டில் பீரோ செய்ய, வைரம் பாய்ந்த பெரிய மரங்களை லாரியில் கொண்டு வந்தனர்.

அன்று இரவு அந்த மலைப்பகுதி கிராமம் அமளிதுமளிப்பட்டது. இரண்டு கரடிகள் தங்கள் குட்டிகளுடன் ஊருக்குள் புகுந்து, கோவில் தோட்டத்திற்குள் நுழைந்து தாரோடு வாழைப்பழங்களைத் தின்றன. யானை ஒன்று தனது கூட்டத்தினருடன் ஊருக்குள் வந்து, வாழைக் கொல்லையைச் சூறையாடி தண்ணீரைக் குடித்து விட்டுப் போனது. ஒரு சிறுத்தையும் நரியும் பட்டிக்குள் புகுந்து நாலைந்து கோழிகளை இழுத்துக் கொண்டு போய் விட்டன. ஓநாய் ஒன்று சலவைத் தொழிலாளி சின்னானின் கொட்டகைக்குள் புகுந்து கழுதைக் குட்டியைக் கவர்ந்து கொண்டு போய் விட்டது! இது தொடர்ந்து இரண்டு நாட்கள் நடைபெற்றன.

அடுத்த நாள். ஆட்சித் தலைவர் வந்து முகாம் போட்டார். கிராம மக்கள், வனவிலங்குகள் செய்யும் அட்டூழியங்களைக் கூறி முறையிட்டனர்.

''எல்லோருக்கும் துப்பாக்கி வைத்துக் கொள்ள அனுமதி கொடுங்கள்'' என்றார் மளிகைக் கடை பாலுசாமி.

''தினமும் ஊரைச் சுற்றி நெருப்பு எரிக்கலாம்'' என்றார் கோவில் குருக்கள்.


''தமுக்கு அடித்து ஓசை எழுப்பியபடி நாலைந்து பாராக்காரர்கள் இரவில் ஊரைச் சுற்றி வரட்டும்,'' என்றார் லாரி ஓனர் சின்னதுரை.

தலைக்குத் தலை எல்லோரும் வனவிலங்குகளை ஊருக்குள் வர விடாது தடுத்து விரட்டத் தங்கள் யோசனைகளைக் கூறினார்கள்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள் தலைமை ஆசிரியரின் மகள் உமா.

''அப்பா நானும் ஏதாவது சொல்லட்டுமா?'' என்று கேட்டாள் தந்தையிடம்.

எல்லோருடைய யோசனைகளையும் கேட்டுக் குழம்பி மண்டை கனத்திருந்த ஆட்சித் தலைவர் பரிவோடு உமாவைப் பார்த்தார்.



''வாம்மா, நீயும் உன்னுடைய யோசனைகளை தாராளமாகச் சொல்லலாம்'' என்று அழைத்தார்.

அவள் குழந்தை. அவளுக்கு ஒன்றும் தெரியாது. ஏதாவது பேத்துவாள் என்று அவளைத் தன் பக்கம் இழுத்தார் ஆசிரியர்.

''இல்லை சார். அவளும் பேசட்டும். அவளுடைய அணுகுமுறை புதிய கோணத்தில் இருக்கலாமே'' என்று உமாவை அழைத்தார் ஆட்சித் தலைவர்.

உமா தயங்கியபடி முன்னே வந்தாள்.

''எல்லோரும் வனவிலங்குகள் வருவதைத் தடுக்கத்தான் யோசனை சொல்றாங்க. ஆனால், அவை ஏன் காட்டை விட்டு வருகின்றன என்பதை யாருமே யோசிக்கவில்லை. அவைகளுக்கு உணவாக வேண்டியவைகளை இவங்களெல்லாம் வேட்டையாடிக் கொண்டு வந்து விடுகிறார்கள். அவை உணவுக்கு எங்கே போகும்? அதுதான் கிராமத்துக்குள் புகுந்து இரை தேடுகின்றன. இவர்கள் காட்டுக்குள் போய் மான்களையும், முயல்களையும் வேட்டையாடாமல் இருந்தால் கரடியும் நரியும் ஊருக்குள் இரை தேடி வராது. பீரோ, கட்டில் செய்ய மரங்களை வெட்டாமல் இருந்தால் யானை வாழைக் கொல்லைக்குள் வராது. அவைகள் உயிர் வாழத் தேவையானதை இவர்கள் எடுத்து வராமல் இருந்தால், இவைகள் ஊருக்குள் வரவே வராது'' என்றாள் உமா.

எல்லோரும் திகைத்துப் போனார்கள்.

''சிறுமியாக இருந்தாலும் சரியான கோணத்தில் உமா இந்தப் பிரச்னையைப் பார்த்திருக்கிறாள். நீங்கள் வேட்டையாடுவதையும், மரம் வெட்டுவதையும் நிறுத்தினால், காட்டு விலங்குகள் ஊருக்குள் வராது. இதுதான் சரியான தீர்ப்பு'' என்று உத்தரவிட்ட ஆட்சித் தலைவர் உமாவைப் பாராட்டினார்.

- ஜே. ஜுலியட் குளோரி,
தூத்துக்குடி - 6.

பிருந்தாவனக்

யாரம்மா?

அடிமை விலங்கை அறுத்திட்ட
அற்புத மனிதர் யாரம்மா?
மடமை என்னும் தீண்டாமை
மடியச் செய்தவர் யாரம்மா?

சத்தியம் அகிம்சை வழியினிலே
சுதந்திரம் கேட்டது யாரம்மா?
புத்தர் ஏசு கொள்கைகளை
பற்றி உயர்ந்தவர் யாரம்மா?

கலங்கா இளத்தார் வெள்ளையரை
கலங்கி இளகிட வைத்தவர் யார்?
விளக்கம் தந்திடும் விடையதனை
வேண்டின் சொல்வேன் காந்திமகான்

– ஜி. தேவன், சென்னை – 2.



சின்ன யானை!

சின்ன யானை பாருங்க
சிறிய துதிக்கை பாருங்க
தின்னக் கரும்பு தாருங்க
துதிக்கை வணக்கம் போடுங்க!

பல்லு பெரிசு தாலுங்க
பசையும் பிரஷ்ஷும் வேணாங்க
வெல்லக் கட்டி தாருங்க.
விரும்பிச் சுவைக்கும் பாருங்க!

மட்டைத் தேங்காய் தாருங்க!
முழுசாய் முழுங்கும் பாருங்க!
ஓட்டைச் சீரணம் பண்ணுங்க!
ஓரக் கண்ணால் சிரிக்குங்க!

– கே. ஓம். சி. மோகன்,
சென்னை – 3.



பாப்பா!

காலையில் எழுவோம் பாப்பா
கடவுளைத் தொழுவோம் பாப்பா
வேளையில் படிப்போம் பாப்பா
வெற்றிகள் குவிப்போம் பாப்பா.

மாலையில் கூடுவோம் பாப்பா.
மகிழ்ந்தே ஆடுவோம் பாப்பா
நாளை என்றே எதனையுமே
நீட்டிப் போடாதே பாப்பா

சோம்பலை விலக்கிடு பாப்பா
சிரிப்புடன் உழைப்பாய் பாப்பா
நம்மைக் காத்திடும் தெய்வம்
நன்மையே செய்திடும் பாப்பா!

– எம். சி. பாலு, செம்பேடு.



கவியரங்கம்!



எங்கள் பசு!

எங்கள் வீட்டுப் பசுவிற்கு
எத்தனை மதிப்புரை பாருங்கள்!
மங்கலச் சின்னம் என்றதனை
மனையில் உள்ளோர் மதிக்கின்றோம்

தினமும் பாலைத் தருகிறது
தாயெனத் தன்னை எண்கிறது
என்றே அம்மா நினைக்கின்றாள்
எல்லாம் அதற்குச் செய்கின்றாள்

புட்டிப் பாலின் வாடையில்லை!
பாலில் சுவையும் குறையவில்லை!
கெட்டிக் காரப் பசுவென்றே
கொஞ்சி அப்பா புகழுகிறார்!

எந்த வேளை வந்ததோ
எனக்கு வேலை கூடித்து!
என்றே, முனியன் கரிக்கின்றான்!
எரிந்து எம்மேல் விழுகின்றான்!

- ஜெ. வெங்கடேசன், பனங்குடி.

பகலில் வாராயோ?


நீலக் கடலின் கோடியிலே
நீந்தி உயரும் அழகினையே
காலம் முழுதும் கண்டிடுவோம்.
கண்டு போற்றி மகிழ்ந்திடுவோம்.

பாலின் வெண்மை வண்ணத்தை
பெற்றுத் தந்தவர் பெயரென்ன?
வானில் ஒட்டிக் கொண்டிடவே
வினோதப் பசையை யார்தந்தார்?

விண்ணில் நீந்தி ஒளிகின்றாய்
விடிந்ததும் எங்கோ மறைகின்றாய்
என்னுடன் ஓடி விளையாட
ஒருநாள் பகலில் வாராயோ?

- என். சாந்தா, திருவரங்கம்.







காக்கையின் கல்யாணம்!

காக்கைக்கும் காக்கைக்கும் கல்யாணமாம்!
காட்டில் எங்கும் கும்மாளமாம்!
ஆமை ஓட்டின் முதுகினிலே
அமர்ந்தே மாப்பிள்ளை ஊர்வலமாம்!

முயலும் வாத்தும் வரவேற்க
மயில்கள் நாட்டியம் ஆடினவாம்!
மந்திகள் மத்தளம் கொட்டினவாம்
மகிழ்ந்து கரணங்கள் போட்டனவாம்!

மான்கள் விருந்து சமைத்திடவே
முள்ளம் பன்றி பரிமாற
சிங்க ராஜா தலைமையிலே
சிறப்பாய்த் திருமணம் நடந்ததுவாம்!

- எஸ். ராமன், பேயன்விளை.



பிருந்தாவனக்

பிரார்த்தனை!

மொகலாய மன்னர் ஔரங்கசீப், ஒருமுறை பள்ளிவாசலுக்கு தொழ சென்றிருந்த போது, மூலையில் இளைஞர் ஒருவர் தன்னந்தனியாக அமர்ந்திருப்பதைக் கண்டார். அவரருகில் சென்று, "நீ இறைவனிடம் என்ன முறையிடுகிறாய்?" என்று கேட்டார் மன்னர்.

''என் கண்பார்வை மீட்சிபெறப் பிரார்த்திக்கிறேன்!'' என்றார் அவர்.

'எவ்வளவு நாட்களாய்க் கோருகிறாய்?''


"பனிரெண்டு வருடங்களாகக் கேட்கிறேன்" என பதிலுரைத்தார் அவர்.

அதைக் கேட்ட ஔரங்கசீப், '''நான் தொழுதுவிட்டுத் திரும்புவதற்குள், நீ இறைவனிடம் கேட்டுக் கண் பார்வை பெற்றிருக்க வேண்டும். இல்லையேல், எனது இடை வாளால் உன் தலையைக் கொய்துவிடுவேன்'' என்று கர்ஜித்துவிட்டுச் சென்றார்.

சிறிது நேரம் கழித்துத் திரும்புகையில், கண்ணொளி பெற்ற இளைஞன் மகிழ்ச்சி பொங்கும் வதனத்துடன் 'எனக்குக் கண்பார்வை கிடைத்து விட்டது பாதுஷா! எத்தனையோ காலமாக நான் பிரார்த்தித்து வந்தும் மனம் இறங்காத இறைவன், இன்று நீங்கள் வந்து என்னைச் சந்தித்ததும், உடனே மனமிரங்கிக் கருணை கொண்டு விட்டான்!'என்று மன்னரைப் புகழ்ந்தான்!

ஔரங்கசீப், "இத்தனை நாளாக, கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் சரி என்ற நிலையில் மனப்பாடமாக உதட்டளவில் உன் பிரார்த்தனையை ஒப்பித்திருப்பாய். இன்று, உள்ள முருகி, கண்டிப்பாகக் கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையுடன் மனப்பூர்வமாகக் கெஞ்சிக் கேட்டதால் கண் பார்வை உடனே கிடைத்துள்ளது. இன்று செய்ததுதான் உண்மையான பிரார்த்தனை. இது வரை செய்தது சும்மா! நீ மனமுருகி உண்மையாகக் கடவுளை இறைஞ்ச வேண்டும் என்று தான் மிரட்டலாக உன்னை எச்சரித்தேன்'' என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

- ஆர். ஆமினா பீவி, நீடூர்.



கேட்டது கிடைத்தது!

ஒரு நாள் அரசவையில் முக்கிய அதிகாரி ஒருவர் பீர்பாலைப் பார்த்து கேலியாகச் சிரித்தார். அந்தக் காட்சியைப் பார்த்த அக்பர், ''ஏன் நீர் இப்படி சிரிக்கிறீர்'' என்று கேட்டார். உடனே அந்த அதிகாரி ''பாதுஷா

கதையரங்கம்



அவர்களே, தாங்கள் நல்ல நிறம் பெற்றிருக்கிறீர்கள். தங்களுடன் பழகுவதற்கு வாய்ப்புப் பெற்றுள்ள அமைச்சர், அதிகாரிகளும் நல்ல நிறம் பெற்றுள்ளனர். ஆனால், தங்களுடன் நெருங்கிப் பழகும் இந்தப் பீர்பால் மட்டும் கறுப்பாக இருக்கிறாரே.' அது ஏன் என்று நினைத்தேன். எனக்குச் சிரிப்பு வந்தது!'' என்று பதில் தந்தார்.

பீர்பால் இருக்கையை விட்டு எழுந்து பேசத் தொடங்கினார்.

''கடவுள் தமது மைந்தர்களுக்கு ஒவ்வொரு விதமான பேற்றினை வழங்கிவருகிறார் என்பது உலகறிந்த செய்தி. அவர் அவ்வாறு வழங்கும் போது நீங்கள் எல்லோரும் நல்ல நிறம் வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள்.

நான் நல்ல அறிவை வழங்குமாறு கேட்டுக் கொண்டேன். யார், யார் எதை விரும்பிக் கேட்டார்களோ, அவரவர்க்கு அதை, அதை வழங்கி விட்டார் கடவுள். அதனால்தான் உங்களுக்கெல்லாம் நிறம் கிடைத்தது, எனக்கு அறிவு கிட்டியது'' என்றார்.

பீர்பாலின் இந்த மறுமொழி அக்பரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. எள்ளி நகையாடிய அதிகாரியோர், வெட்கத்தால் தலை குனிந்தார்.

- அ. முஸ்தபா, தக்கோலம்.

கோழிக்கு எத்தனை கால்!

காஷ்மீர் பக்கத்தில் ஒரு கிராமம். அதில் ஒரு மிராசுதார் இருந்தார். கோழியைச் சமைத்து வைக்கும்படி சமையல் காரனிடம் அவர் சொன்னார். அவர் சொன்னபடியே கோழியைச் சமைத்து மிராசுதாரிடம் தட்டில் கொண்டு வந்து வைத்தான் சமையல் காரன்.

ஒரு காலைக் காணவில்லை! ஒரே ஓர் கால் மட்டுமே இருந்தது.

''கோழியின் ஒரு கால் எங்கே காணவில்லையே?'' என்று கேட்டார் மிராசுதார்.

''கோழிக்கு ஒரே ஒரு கால்தான் உண்டு'' என்று சமையல்காரன் ஒரே



போடாகப் போட்டான்!

மிராசுதார் படு அப்பாவி. ''அப்படியா?'' என்று சொல்லிவிட்டுப் பேசாமல் சாப்பிட்டார். பிறகு எழுந்து வெளியே வந்தார். கொல்லையில் இரை பொறுக்கிக் கொண்டிருந்த கோழி ஒன்று ஒற்றைக்காலில் நின்று கொண்டிருந்தது. உடனே சமையல் காரனை அழைத்து ''நீ சொல்வது சரி. கோழிக்கு ஒரு கால்தான். இத்தனை நாளும் இது கூடத் தெரியாமல் இருந்து விட்டேனே!'' என்றார்.

இருந்தாலும் அவருக்கு சந்தேகம் தீரவில்லை. ஒரு கல்லை எடுத்து அதன் பக்கம் வீசி எறிந்தார்.

இருகால்களையும் வீசிப் போட்டு அது ஓடியது!

''பார்த்தாயா, இந்தக் கோழிக்கு இரண்டு கால்கள் இருக்கே? எப்படி நீ சமைத்த கோழிக்கு மட்டும் ஒரு கால் இருந்திருக்க முடியும்?'' என்று கேட்டார்.

முன் பசிக்காகக் கோழியின் ஒரு காலைத் தின்றுவிட்ட சமையல்காரன் ''ஆமாம், அந்தக் கோழி மீது யாரும் கல்லை விட்டு எறியவில்லையே? அப்புறம் எப்படி அதற்கு இரண்டு கால்கள் வரும்?'' என்று பதில் சொன்னான்.

''ஆமாம் ! அது உண்மை'' என்று ஒப்புக் கொண்டார் அந்த படு அப்பாவி மிராசுதார்.

- சத்தி. கமலேஸ்வரன்.



பாபு போட்ட திட்டம்!

பாபு நண்பன் மகேஷைக் காணச் சென்று கொண்டிருந்தான். சில போலீஸ்காரர்கள் அங்கே நின்று கொண்டிருந்தனர். ஒருவர் பாபுவிடம் ''இங்கு மொட்டைத் தலையும், முரட்டு மீசையுமாக ஒரு திருடன் பதுங்கியிருப்பதாகத் தகவல் வந்துள்ளது. எங்கேயாவது வழியில் அவனை நீ பார்த்தாயா?'' என்று கேட்டார்.

''பார்க்கவில்லை'' என்று கூறி விட்டு பாபு நடக்க ஆரம்பித்தான். சிறிது தூரம் சென்ற பிறகு ஒரு திருடன் கையில் பளபளக்கும் கத்தியுடன், போலீஸ்காரர் சொன்ன அதே தோற்றத்துடன் பாபுவை மடக்கி மிரட்டினான்.

பாபுவின் மூளையில் ஒரு திட்டம் உருவாகியது. திடீரென்று பின்னே திரும்பி சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்த போலீஸ்காரரின் காதில் விழுமாறு ''தாத்தா! நீங்க உடனே பணத்துடன் ஓடி விடுங்க. இங்கே ஒரு திருடன் இருக்கிறான். சீக்கிரம்!'' என்று உரக்கக் கத்தினான்.

இதைக் கேட்ட போலீஸ்காரர்கள் பாபு இருக்கும் இடத்தை நோக்கி ஓடி வந்தனர். திருடனும் அங்கு பாபுவின் தாத்தா பணத்தோடு இருக்கிறார் என்று நம்பி, அவரிடமிருந்து பணத்தைப் பறித்துக் கொள்ள போலீஸ்காரர் வரும் திசையை நோக்கி ஓடினான்.

இருவரும் எதிரெதிரே சந்தித்துக் கொண்டனர்! திருடன் பிடிபட்டான். மாவட்டக் கலெக்டர் பாபுவின் அறிவுத்திறனைப் பாராட்டிப் பரிசு வழங்கினார்.

- அ. மகேஸ்வரன், மன்னார்குடி.

தண்டம்!

''நரேன், பஸ்ஸில வரலியா?'' என்றான் சுரேஷ்.

''இல்லடா, நீ போ, நான் நடந்து வரேன்'' என்று சொல்லிக் கொண்டே வேகமாக நடந்தான் நரேன்.

நரேன் வீட்டுக்குள் நுழைந்தான். அம்மா கேட்டாள், ''ஏன்டா லேட்டு?'' ''லேட்டாயிடுச்சு அம்மா'', என்றான் மெதுவாக. ''சரி சரி, சீக்கிரம் சாப்பிட்டுவிட்டுப் படிக்க உட்கார்'', என்றாள். நாட்கள் ஓடின.

நரேனின் அப்பா வழக்கம் போல நடு இரவில் வீடு வந்தார். அவருக்கு பல்லவன் பஸ்ஸில் நடத்துனர் வேலை. அம்மா சாப்பாடு எடுத்து வைத்துக் கொண்டே, ''கொஞ்ச நாளாவே நரேன் தினமும் வீட்டுக்கு லேட்டாவே வர்றான். காலையிலும் சீக்கிரம் கிளம்பிடுறான். பக்கத்து வீட்டுப் பையன் சொன்னான். இப்பல்

லாம் இரண்டுபேரும் சேர்ந்து வர்றதில்லையாம். நான் தனியா வரேன்னு சொல்லிடறானாம். இன்னைக்குத்தான் சொன்னான். எனக்கு ஒரே கவலையா இருக்கு. நீங்க பக்குவமா விசாரியுங்க'' என்றாள். அவர் யோசனையுடன் ''காலையில் வேலைக்குக் கிளம்புமுன் விசாரிக்கிறேன்'', என்றார்.

மறுநாள் காலை ஆறுமணி. நரேன் பல்துலக்கிக் காப்பி குடித்துவிட்டுப் பாடம் படிக்க ஆரம்பித்தான். அப்பா வந்தார். ''நரேன், தினமும் சாயங்காலம் லேட்டா வரயாமே, ஏன்?'' என்று கேட்டார். அவன் மௌனமாக நின்றான்.

''ஒழுங்கா உண்மையைச் சொல்லிடு. கிளாஸ் பசங்க கிட்டே கேட்டுட்டேன். அதனால ஸ்பெஷல் கிளாஸ்னு பொய் சொல்லாதே'' - அவர் குரலில் கோபத்துடன் கண்டிப்பும் இருந்தது.

நரேன் தயங்கினான். பின் மெல்ல, ''அப்பா... ம்ம்.....'' என்று நிறுத்த, அவரோ ''சொல்லுடா சீக்கிரம்! வேலைக்கு நேரமாச்சு. வண்டியெடுக்கப் போகணும்'' என்று அவசரப்படுத்தினார்.

''அப்பா, நீங்களும் ஒரு டவுன்பஸ் டிரைவர், உங்களுக்கே நல்லாத் தெரியும். எங்களுக்கு இலவச பாஸ் தந்திருக்கிறதாலே நிறைய பஸ்ஸை எங்க ஸ்கூல் ஸ்டாப்பிங்கிலே நிறுத்தறதே இல்ல. நாங்க ஓடிப் போய்



ஏறினாலும் ''ஓசிக்கிராக்கி'' என்ற இட்டோடயே பயணம் செய்ய வேண்டியிருக்கு. போன மாசம் நீங்களே அப்படிக் கத்தறதக் கேட்டேன். அப்புறம்தான் இந்த முடிவுக்கு வந்தேன். எனக்குக் கால் நல்லாத்தான் இருக்கு. அதனாலதான் நான் நடந்தே போய் நடந்தே வரேன்'' என்றான் நரேன் தன்மான உணர்ச்சியுடன்.

தம் ஏச்சுக்கள் தன் மகனின் உள்ளத்தை வேதனைப்படுத்தி, ரணமாகப் பதிந்திருப்பதைத் தந்தை புரிந்து கொண்டார். ''இனி இப்படிச் செய்ய மாட்டேன்டா. அதோட, என் சக தோழர்களையும் இந்த மாதிரி நடந்துக்காம, திட்டாம இருக்கச் சொல்றேன்,'' என்றார். நரேன் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது.

- ஜோதி, மதுரை - 20.



சின்னப்பையன்!

★ என்ன முழிக்கிறீர்கள். இரண்டாவது உலகப் போரில் அமெரிக்கா ஜப்பானிலுள்ள நாகசாகி, ஹிரோஷிமா மீது குண்டு வீசியது என்பது எல்லோரும் அறிந்ததே!

ஆனால், அங்கு போடப்பட்ட குண்டின் பெயர் என்ன தெரியுமா? ஆச்சரியப்பட்டுப் போய்விடுவீர்கள். சின்னப் பையன் (லிட்டில் பாய்) என்பதுதான் அந்தக் கொடூரமான அழிவை ஏற்படுத்திய குண்டின் பெயர்!

- பஞ்சை ஆறு அண்ணாதுரை.

தாயல்லவா

★ நெப்போலியப் பேரரசர் தம் தாயார் மீது அளவுக்கு மீறிய அன்பும் பாசமும் கடைசிவரை கொண்டிருந்தார். அவர் பிரான்சு நாட்டுச் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்ட போது, அவரது தாயார் அந்த விழாவில் கலந்து கொள்ள முடியாமல் நோய்வாய்ப்பட்டிருந்தார். எனவே, முடிசூட்டு விழாவை ஓவியமாக வரையச் சொன்ன நெப்போலியன் தன்னுடைய தாயும் விழாவில் கலந்து கொண்டது மாதிரி வரையும்படி கேட்டுக் கொண்டாராம். அதன்படி வரையப்பட்ட படம் இன்றும் பிரான்சு நாட்டு அரண்மனையில் இருக்கிறது!

- தேனி என். நாகராஜன்.



ஈ புராணம்

இருபதாம் நூற்றாண்டில்தான் வீட்டு ஈக்கள் மனிதனின் கொடிய எதிரி என்பது தெரியவந்தது! சாதுவான இந்த ஈக்களே, ஒவ்வோராண்டும் பல்லாயிரக்கணக்கான மக்களின் மரணத்திற்குக் காரணமாக இருக்கின்றன. ஈக்கள் சுமந்து வந்து பரப்புகின்ற நோய்கள் ஏராளம்.

ஈ தன் முன்னங்கால்களைத் துடைத்துக் கொள்வதைப் பார்க்கலாம். அது வேறொன்றுமில்லை. தன் கால்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் இருமிகளையும் அசுத்தங்களையும் போக்கவே அவ்வாறு செய்கின்றன!

ஈக்களால் டைப்பாய்டு, காசநோய், சீதபேதி (Dysentery) முதலிய நோய்கள் எளிதில் பரப்பப்படுகின்றன. ஈக்கள் அழுக்கு, குப்பை, மலம், சாக்கடை முதலியவற்றில் உட்கார்ந்து இருமிகளைத் தன் கால்களில் ஒட்டிக் கொண்டு வந்து, மீண்டும் நம் உணவுப் பொருள்களின் மீது உட்கார்ந்து, அவற்றில் அதை உதிர்த்து விட்டு விட்டுச் செல்கின்றன. இந்த உணவை நாம் உண்பதால், நமக்கு அந் நோய்கள் தொற்றிக் கொள்கின்றன!



ஈக்கள் எவ்வாறு இருமிகளைக் கொண்டு வருகின்றன? ஈக்களை நாம் பூதக் கண்ணாடியால் பார்த்தால், அவற்றின் உடம்பில் மெல்லிய உரோமங்களும், நகங்களும், உறை அணிந்தது போன்ற கால்களும் இருப்பதைக் காணலாம். அதன் நாக்கும் தொட்டால் ஒட்டிக்கொள்ளும் ஒருவித பசையை உடையது!

எனவே, ஈக்கள் உட்காராமல் உணவுப் பண்டங்களை நாம் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். ஈ மொய்த்த பண்டங்களை உண்ணக் கூடாது.

ஈயின் மூன்று ஜோடி கால்களிலும், நகங்களிலும் காலுறைகளிலும் அவற்றின் மிகச்சிறிய ரோமங்களிலும் இருமிகள் ஒட்டிக் கொள்கின்றன. எளிதில் பரப்பப் படுகின்றன!

ஈக்கள் கூரையிலும் தலைகீழாக நடப்பதைக் காணலாம். ஈக்களின் காலுறைகளிலுள்ள பசையினால் இவற்றால் தலை கீழாகவும் நடக்க முடிகிறது!


ஈக்களை முற்றிலுமாக ஒழிக்க முடியாது. ஆனால், சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாக வைத்துக் கொள்வதன் மூலம், இவற்றின் பெருக்கத்தைத் தடுக்க முடியும்.

சீனாவில் ஈ ஒழிப்புக்கு ஓர் இயக்கமே நடத்தி பெருமளவு வெற்றி யும் பெற்றுள்ளனர்!

- வெ. வரதராஜன்.


பொன்னாடை
கருத்து : ஈசாப்
அமைப்பு : ரே
சித்திரம் : கோவி
ஒரு ஜமீன்தாரிடம் அம்மா குதிரையும், குட்டிக்குதிரையும் இருந்தன.
ஜமீன்தார் இரண்டையும் வண்டியில் பூட்டி ஓட்டுவார்.
சண்டித்தனம் செய்தால் சாட்டையால் அடிப்பார்.
ஒரு நாள்...
என்ன? இப்படி அடிக்கிறாரே?
சண்டித்தனம் செய்யாம இரேன்?
என்னால் அடிபட முடியாது. காட்டுக்குப் போறேன்...
இங்கதான் பாதுகாப்பு! சண்டித்தனம் பண்ணாம இரேன்.



குட்டி வெறுப்புடன் கூறியது.
நீ இரு! நான் போறேன்.
அதைத் தடுக்க முடியாது என்பதை உணர்ந்தது அம்மா.....
காட்டில் ஆபத்து அதிகம்! எதுவும் முதுகில் பாயாதபடி கவனமா இரு. நம்ம பலம் காலில்தான். குளம்பால உதைத்தால் சிங்கம் கூட தூள்தான்!
குட்டி காட்டுக்கு ஓடிவிட்டது.
காலையில் புல் மேய்ந்தது. தந்திர மிக்க நரி குதிரையைப் பார்த்தது.
கொழு கொழு குதிரைக் குட்டி! முதுகில் பாய்ந் தால் கடித்துடலாம்....
யோசித்து.....
வணக்கம்! காட்டுக்கு வந்துள்ள உங்களை வரவேற்கிறேன்!


வரவேற்பு பலமா இருக்கே? என்ன விசேஷம்?
காட்டுக்கு நான் தானே மந்திரி! பெரியவங்க வந்தா வரவேற்பது பெருமையாச்சே!
உங்க பரந்த முதுகுல அழகான பொன்னாடை போர்த்தணும்னு ஆசை!
ஆபத்து வந்துடுத்து! இது நம்ம முதுகுல பாயாம பார்த்துக்கணும்.
முதலில் பாத பூஜை பண்ணுங்க! பிறகு பொன்னாடை போத்தலாம்!
அதுவும் சரிதான்!


செஞ்சுட்டாப் போச்சு! முதல்லே பாதபூஜை.
நரி, குட்டியின் பின்கால்களுக்கு அருகில் உட்கார்ந்தது.
குளம்பால உதைச்சா சிங்கம் கூட தாங்காதுன்னு அம்மா சொன்னாளே! பரிசோதிப்போம்.
நரியாரே! பாதபூஜை தானே ஆச்சு. பொன்னாடை போத்தலையா?
பாதபூஜையும் வேண்டாம்! பொன்னாடையும் வேண்டாம்! உயிர் பிழைச்சாப் போதும்!

பூனைக்குச் சிறை!


எஸ். கனகவல்லி



அந்தப் பெரிய வீட்டின் ஸ்டோர் ரூமில் இரண்டு கொழுத்த எலிகள் சந்தோஷமாய் வாழ்ந்தன. மின்னுவும், சின்னுவுமே அவை. இரண்டும் மிக இனிய நண்பர்கள். எலித் தொல்லை தாங்காமல் வீட்டு எஜமானர் நெல் பொரியிலும், மசால் வடையிலும், தேங்காய் எண்ணெயோடு எலி மருந்து கலந்து ஸ்டோர் ரூமில் பல இடங் களில் வைத்த போது, பல எலிகள் செத்து மடிந்தன. மசால் வடைக்கு ஆசைப்பட்டு, சின்னுவும் அகப்பட்டுக் கொள்ள இருந்தது. நல்ல காலம் சரியான நேரத்தில் மின்னு தடுத்தது.

''சின்னு, இது இந்த வீட்டுக்காரர் சாமான்களை வைக்கும் ஸ்டோர்ரூம். சமையல் அறையில் இருக்க வேண்டிய மசால் வடை, ஸ்டோர் ரூமில் இருக்க வேண்டிய அவசியம் என்ன? நம் இனத்தவர் தரும் தொல்லை தாங் காமல், நம்மை அழிக்க மனிதர்கள் விஷத்தை உணவுப் பொருளில் கலந்து வைப்பதாய், நேற்று நான், ''எலி மஞ்சரி'' புத்தகத்தில் படித்தேன். அத னால், இந்த மசால் வடையைத்





தின்னாதே. இந்த வீட்டு மாமிக்கு ஞாபக மறதி அதிகம். அதனால்,துவரம் பருப்பு டின்னையும், சர்க்கரை பாட்டிலையும், காய்கறி, பழங்கள் வைக்கும் கூடையையும் மூட மறந்து விட்டிருப்பாள். நமக்கு அவை போதும். வா. இந்த மசால் வடை ஆபத்தானது'' - என்று இழுத்து வந்து விட்டது. அதனால்,அந்த அறையில் இருந்த மற்ற எலிகள் விஷம்கலந்த மசால் வடையைத் தின்று இறந்த போதும், மின்னுவும் சின்னுவும் தப்பித்துக் கொண்டன.

ஓரளவு எலித் தொல்லை குறைந்த போதும், சின்னுவும் மின்னுவும் கொட்டம் அடித்தன. வீட்டுக்காரர் வைத்த எலிப் பொறியில் மாட்டாமல் டிமிக்கி கொடுத்தன.

வீட்டுக்காரரின் பிள்ளை செல்வம், தன் சினேகிதன் வீட்டில் இருந்து கொழுகொழு என்று, கறுப்பு வெள்ளை கலந்த குண்டுப் பூனை ஒன்றை எலி பிடிக்கவென்றே கொண்டு வந்தான். வந்த புதிதில் சுறுசுறுப்பாய் இரவு வேளைகளில் தன் நீலக் கண்கள் மின்ன, சின்னு மின்னுவை ஓட ஓட விரட்டியது. சின்னுவும் மின்னுவும் பி. டி. உஷாவை விட வேகமாய் ஓடித் தப்பித்தன! ஆனால், நாளாக ஆக சின்னு, மின்னுவின் தந்திரத்தின் முன், பூனை களைத்து இளைத்துச் சோர்ந்தது. பகலில் மட்டும்தான் செல்வம் அதற்குப் பாலும் சோறும் வைப்பான். 'இரவில் எலி பிடித்து தின்னுக்க' என்று அதட்டுவான். பூனைக்கோ, சின்னு மின்னுவைத் துரத்தித் துரத்தி கால் வலித்தது. எலி உணவே வெறுத்து விட்டது. பேசாமல் பகலில் கிடைக்கும் பாலையும், சோற்றையும் தின்று, பகவானே என்று கிடப்போம் என்று தீர்மானித்து, சின்னு மின்னுவைத் துரத்துவதை நிறுத்திக் கொண்டு இரவில் தூங்கலாயிற்று.

இதற்கிடையில் மின்னு பக்கத்து ஊரில் தன் மாமன் வீட்டுக் கல்யாணத்திற்கு ஒரு வாரம் முன்னதாகவே கிளம்பிப் போய் விட்டது. சின்னுவிற்குத் தனிமையும் பூனையின் 'மியாவ்' 'மியாவ்' சத்தமும் எரிச்சலையும் பயத்தையும் ஏற்படுத்தின. பூனையும்,சின்னு தனித்து இருப்பதைப் பார்த்ததில் இருந்து எப்படியாவது

அதை ஒரு நாள் துரத்திப் பிடிக்க வேண்டும்... பாலும் சோறும் அலுத்துப் போய் விட்டது! ஒரு நாளாவது ஆசை தீர அசைவ உணவு சாப்பிட வேண்டும் என்று சின்னுவைப் பார்க்கும்போதெல்லாம் விரட்டியது.

பூனையின் போராட்டத்தால் சின்னுவால் பயமின்றி ஒருவேளை கூட உணவு ஒழுங்காக உண்ண முடியவில்லை. சின்னு ஆவலுடன் கோதுமை மாவில் வாய் வைக்கும். பூனை எங்கிருந்தோ பாய்ந்து வரும்! அலறியடித்து சின்னு ஓடும் போது 'தடபுட' என்று டின்கள் சப்தமிடும். வீட்டுக்காரரோ 'மறுபடி எலிகள் தொல்லை அதிகமாகி விட்டது... மருந்து வைக்க வேண்டும்...' என்று மனைவியிடம் கூறுவார். சின்னுவுக்கு அழுகையே வந்து விடும்! அன்று சின்னுவிற்குத் தபால் வந்தது. அதன் தங்கை எழுதியிருந்தது. தங்கையின் குழந்தைகள் மூவருக்கும் லீவு விட்டாகி விட்டதாம்... விடுமுறைக்கு மாமன் வீட்டிற்குச் (வளை) சீராட வருகிறார்களாம். அவர்கள் ஊரில் ஒரே பூனை நடமாட்டமாம்... 'குடவாசலில் நீ இருக்கும் இடம், பந்தோபஸ்தாய் இருக்கிறதா...?" என்று கேட்டு விட்டுத் தன்னையும் தனது குழந்களையும் அழைத்துச் செல்ல பஸ்ஸ்டாண்டுக்கு வரும்படியும் தபால் எழுதி இருந்தது சின்னுவின் தங்கை எலி.

சின்னுவிற்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. தங்கையின் பிள்ளைகள் மூன்றும் இரட்டை வால்கள்... ஒரு இடத்தில் சும்மா இருக்காது. வீட்டுக்காரரின் பூனையிடம் அகப்பட்டுக் கொண்டால், முரட்டுக் காட்டுமிராண்டிப் பயலான தங்கை கணவருக்கு என்ன பதில் கூறுவது? ஒரு வாரத்திற்குள் அவர்களுக்காக இந்தக் குடவாசலில் வேறு வீடு பார்ப்பதா, பார்த்தாலும் அந்த வீட்டில் இது போல் சாமான்கள் அறையும் ஸ்டோர்ரூமும் பெரிசாக இருக்குமா? நிச்சயம் இருக்காது. மிகவும் கஷ்டம்... என்றெல்லாம் கவலைப்பட்டது சின்னு.

அன்று இரவு, வீட்டுக் கூடத்தில் வெகுநேரம் விளக்கு எரிந்தது. சின்னு மெதுவாய் உத்தரம் வழியாக எட்டிப் பார்த்தது. வீட்டுக்காரர், அவர் மனைவி, மகன் எல்லோரும் பெட்டிகளில் துணிமணிகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசியதில் இருந்து ஒரு கல்யாணத்திற்காகப் பத்து நாள் வெளியூர் போகிறார்கள் என்று புரிந்தது.

மறுநாள் காலை வீட்டுக்காரர், அவர் மனைவி, மகன் எல்லோரும் நன்றாக டிரஸ் செய்து கிளம்பினார்கள். வீட்டுக்காரரின் மகன் பூனையை அணைத்துக் கொண்டான். "புஸ்ஸிக் குட்டி உனக்கு பத்து துண்டு பிரெட்டும்





''சந்தைக்கு எப்படிங்க போக ணும்?''

''பையும் பணமுமா போகணுங்க.''

- செ. கார்த்திகேயன்.

கொஞ்சம் பாலும் வைத்திருக்கிறேன். ஸ்டோர் ரூமில் விடிவிளக்கு எரியும். எலிகள் வந்தால் பிடித்து இரவு உணவாக்கிக் கொள். பகலில் பிரெட் சாப்பிடு'' என்றான்.

புஸ்ஸியும் 'மியாவ்' என்று புரிந் தது போல் தலையாட்டியது.

வீட்டுக்காரம்மா அறை மூலையில் இருந்த தண்ணீர்ப் பானையைக் காலி செய்து விட்டு மணல் மேல் வைத்து, பிளாஸ்டிக் தட்டை அதன் மேல் சாய்த்து வைத்தாள். வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினார்கள்.

சின்னு சோர்வுடன் பரண் மேல் படுத்துக் கொண்டது. ஆயிற்று... நாளை காலை தங்கையும் மருமான் எலிகளும் வந்து விடுவார்கள்... இந்த பாழாய்ப் போன பூனையிடம் இருந்து எப்படி அவைகளைக் காபந்து செய் வது? பூனையோ, வீட்டுக்காரர்கள் போனவுடனேயே ந டு க் கூ ட த் தி ல் சோபாவில் படுத்துக் கொண்டு, ''ஏய் எலியே.. இந்த ஒரு வாரத்துக்குள் உன்னைப் பிடித்து ந ா ஸ் த ா பண்ணாமல் விட மாட்டேன்'' என்று கர்வமாய் 'மியாவ்' சத்தம் கொடுத்தது!

பதிலுக்கு சின்னுவும், ''அது உன்னால முடியாத காரியம்,'' என்று நங்கு காட்டியது என்றாலும், உள்ளூர அதற்குப் பயம்தான்.

''ஹாய் சின்னு! என்ன உடம் புக்கு? சரியில்லையா? இப்படி இளைத்து விட்டாயே?'' - திடீரென்று மின்னுவின் குரல் கேட்டதும் துள்ளிக் குதித்த சின்னு நண்பனைக் கட்டித் தழுவியது. அதன் மாமா கல்யாணத் தில் பரிசாகக் கிடைத்த பாலியஸ்டர் ஷர்ட்டையும், ஜீன்ஸ் பேண்ட்டையும் தடவிப் பார்த்து மகிழ்ந்த சின்னு, பூனையின் மிரட்டலையும் தன் தங்கை, மருமான்கள் வரப் போவதையும் மின்னுவிடம் வருத்தத்தோடு கூறியது.

''நானிருக்க பயமேன்? பயப் படாதே...'' என்ற மின்னு கூடத்தை நோட்டம் விட்டது. பூனையார் சொகு சாய் கூடத்து சோபாவில் படுத்திருந் தார். ''மூஞ்சியைப் பார்... உருத்திராட் சம்தான் குறைச்சல்'' என பூனையை வைதது சின்னு.

''ஐடியா...'' - மின்னு குதித்தது. தண்ணீர்ப் பானையில் நீ நுழையக் கூடிய அளவு பெரிய ஓட்டையை அதன் அடியில் போடுவோம்.. இந்தப் பூனை மாலையில் வாக்கிங் போகும். அந்த சமயம் பார்த்து இதைச் செய் வோம்! நீயே பார் இந்த வேடிக் கையை...'' என்று சவால் விட்டுச் சென்றது மின்னு.

மாலையில் ஒரு துண்டு ரொட்டி யைத் தின்று விட்டு பால் தீர்ந்துப் போன சாசரை நக்கி விட்டு, பூனையார் வாக்கிங் கிளம்பினார். சின்னதாய் குருவி கிடைத்தால் ருசிக்கலாம் என அக்கம் பக்கம் பார்த்தபடி மெதுவாய் நடந்தார். இதற்குள் ஓர் ஒட்டாஞ் சில்லியால் சின்னு பானையை லேசாக நெம்பிக் கொடுக்க, மின்னு பானை யின் அடியில் சிறிய ஓட்டை ஒன்றைப் போட்டது. சின்னுவிடம் மின்னு கூறி யது... ''சின்னு, நீ பூனையார் வந்த வுடன் ஆட்டம் காட்டி மேல் வழியாக பானைக்குள் ஓடி வந்து புகுந்து கொள். பூனை உன்னைப் பிடிக்க பானைக்குள் தானும் பாயும். நீ கீழ் ஓட்டை வழி யாய்த் தப்பித்து வந்து விடு. நான் பானையின் வ ா ய ை மூடிடறேன். பானைக்குள் பூனையார் சிறைப்பட்டு விடும். வெளியே வர முடியாது. வீட்டுக்காரர்கள் வரும் வரை தின் டாடும். அதுவரை நீ நிம்மதியாக உன் தங்கை, மருமான்களுடன் குஷியாய்க்

கொட்டமடிக்கலாம்.''

இரவு வாக்கிங் போன பூனை ''ஒரு சிட்டுக் குருவி கூடச் சிக்காத ஏக்கத்தோடு கூடத்தில் நுழைந்தது. ''இது என்ன! தான் படுக்கும் சோபாவில் எலிப் பயல் சின்னுவா? எத்தனை துணிவு இந்த எலிப் பயலுக்கு?'' - பூனை தாவிப் பிடிக்கப் பாய்ந்தது!

சின்னுவும் பாய்ந்து ஓடி பானைக்குள் புகுந்தது. ''ஹ்ஹ்ஹா... பானைக்குள் புகுந்தாயா? இன்று வசமாய் மாட்டிக் கொண்டாய்...'' என்று பின்னாலேயே வேகமாய்ப் பூனையும் பானைக்குள் புகுந்தது. மறைந்திருந்த மின்னு மூடியைப் போட்டு மூடியது! பூனையாரின் நீலமணிக் கண்களுக்கு பானையின் அடிப்புறமும், ஓட்டையும் தான் தெரிந்தது. சின்னு பானையின் வெளிப்புறம் வாலை சாட்டையைப் போல சுழற்றி `கீச்கீச்' என்று சிரித்தது. மின்னுவும் சிரிப்பில் கலந்து கொண்டது.

பூனை எவ்வளவு முயன்றும் பானையை விட்டுத் தலையை உருவி வெளியே எடுக்க முடியவில்லை... மியாவ், மியாவ் உஸ் என்று கத்தி கதறித் தொண்டை வறண்டு சோர்ந்து போய்ப் பானைக்குள்ளேயே படுத்து விட்டது.

பிறகு... பிறகென்ன? தன் தங்கை, மருமான்களுடன், வீட்டுக்காரரும் அவர் குடும்பத்தாரும் வரும் வரை, வீடு முழுவதும் சுதந்திரமாய் உலவி, தின்பண்டங்கள், அரிசி, பருப்பு, கடலை பூனைக்கு வைத்த பிரெட் அனைத்தையும் உண்டு மகிழ்ச்சியில் திளைத்தது சின்னு! மின்னுவும் நண்பனின் சந்தோஷத்தில் பங்கு கொண்டதோடு சரியாக மூடாதிருந்த மரப் பீரோவில் நுழைந்து செல்வத்துக்கு வாங்கி வைத்திருந்த ஃபாரின் பாலியஸ்டர் துணியில் அழகாய் கடித்து கத்தரித்து வந்து, சின்னுவின் மருமான்களுக்கு சட்டை தைத்து வந்து கொடுத்தது. சின்னுவும், மின்னுவும், தங்கை எலியையும், மருமான்களையும் திரும்பக் கொண்டு விட்டு வந்த போது வீட்டுக்காரர் தன் குடும்பத்துடன் திரும்பிக் கொண்டிருந்தார்.

கதவைத் திறந்ததும் பானைக்குள் சோர்ந்து படுத்திருந்த பூனையைப் பார்த்து திகைத்து போயினர்.

''அட பைத்தியக்காரப் பூனையே! தண்ணீர்ப் பானையை தயிர்ப் பானைன்னு தலையை உள்ளே விட்டு வெளியே எடுக்க முடியாமல் தவிக்கிறாயா...! எப்படி மூடிக் கொண்டாய்? முட்டாளே... எலி ராஜ்யமாகக் கொட்டமடித்து இருக்குமே?'' - என்று கத்தினாள் வீட்டுக்காரம்மா.

செல்வம் பானையின் மூடியைத் திறந்து விட்டான். பூனை சோர்வுடன் எழுந்து உணவு தேடியது.

''முட்டாள் பூனையே தண்ணீர்ப் பானைக்குள் நுழைந்து எப்படி மூடியைப் போட்டு மூடிக் கொண்டாய்?'' என்று திட்டியபடி தாங்கள் கொண்டு வந்த தயிர் சாதத்தில் இருந்து சிறிது எடுத்துப் போட்டான் செல்வம்.

அவர்கள் கொண்டு வந்த கூடையில் இருந்து விழுந்த பிளாஸ்டிக் பையில் இருந்த பட்சணத்தை ருசித்துக் கொண்டிருந்த எலிகள் சின்னுவும், மின்னுவும் ''உங்கள் முட்டாள் பூனை பானைக்குள் சிறைப்பட்டது எப்படி என்று எங்களுக்குத்தான் தெரியும்...'' என்று 'கிக்கிக்'கென்று சிரித்தன.

முதலிடம் நாய்களுக்கே!



★ ஒரு மனிதனைக் கொன்றால் தண்டனை 90 சவுக்கடி. ஆட்டு மந்தையைக் காக்கும் ஒரு நாயைக் கொன்றால் தண்டனை 200 சவுக்கடி.

3000 ஆண்டுகளுக்கு முன்னே பாரசீக நாட்டில் இருந்த சட்டம் இது.

- ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.



கேட்கட்டுமா டாக்டர்?



டாக்டர். கு. கணேசன்

* அ. நவ்சாத், மொரப்பூர்.

குளிக்கும் போது சளி, ஜலதோஷம் பிடிப்பதில்லை. அதே சமயம், மழையில் நனைந்து விட்டால் சளி பிடிக்கிறதே. டாக்டர்? என்ன காரணம்?

மழையில் நனைந்து விட்டால் சளி, ஜலதோஷம், காய்ச்சல் போன்ற உடல் உபாதைகள் வருவது உண்மைதான். ஆனால், அதற்கு மழைத் தண்ணீர் காரணமல்ல! மழைக் காலத்தில் நிலவு கின்ற குளிர்ச்சியான சீதோஷ்ண நிலையில் காற்று மண்டலத்தில் பலவகை வைரஸ் கிருமிகள் உற்பத்தியாகின்றன. மழையில் நனையும் போது இவ் வைரஸ் கிருமிகள் நம் உடம்புக்குள் நுழைந்து முதலில் சொன்ன உபாதைகளை உண்டுபண்ணுகின்றன.


* சி. கே. அரங்கநாதன், தொப்பூர்.

மனித உயரத்தின் வளர்ச்சி எத்தனை வயது வரை நீடிக்கும்? குறிப்பிட்ட வயதுக்கு மேல் உயரம் குறையும் என்பது உண்மையா டாக்டர்?

ஆண்களுக்கு 20 வயது வரையிலும், பெண்களுக்கு 18 வயது வரையிலும் உடம்பின் உயரம் வளரும். அதற்குப் பிறகு உடம்பு பருமனாகலாம். உயரம் வளர்வதில்லை! எக் காரணத்தைக் கொண்டும், எந்த வயதிலும் வளர்ந்த உயரம் குறைவதற்கு வாய்ப்பில்லை!

* எஸ். குமரேசன், குத்தாலம் - 1.

'அமீபியாசிஸ்' என்றால் என்ன



டாக்டர்? அதை எவ்வாறு தவிர்ப்பது?

'அமீபியாசிஸ்' (AMOEBIASIS) என்பது எ ண் ட மீ பா ஹிஸ்டலிடிகா (ENTAMOEBA HISTOLYTICA) எனப்படும் குடலில் வாழும் ஒருவகை ஒட்டுண்ணியால் (PARASITE) ஏற்படும் நோயாகும். இது குடல், கல்லீரல், நுரையீரல், மூளை போன்ற பல உறுப்புகளைத் தாக்கவல்லது. மனித மலம் மூலம் இந் நோய்க் கிருமிகள் 'சிஸ்ட்' (CYST) டாக வெளிப்படும். இவை அசுத்தத் தண்ணீரில் கலந்தோ, சுத்தப் படுத்தாத காய்கறிகள், பழங்கள் மூலமாகவோ, கை விரல்களில் நகங்களின் இடுக்குகளில் சிக்கிக் கொண்டோ மற்றொருவரின் இரைப்பையை அடையும். அங்கு 'சிஸ்ட்' உயிருள்ள அமீபாவாக மாறி, நோயைத் தோற்றுவிக்கும். வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு, வயிற்று உப்புசம், சீத பேதி போன்றவை இந் நோயின் பொதுவான அறிகுறிகள். காலத்தோடு மருத்துவம் பெறாவிட்டால், இந்த அமீபா கிருமிகள் இரத்தத்தில் கலந்து, மூளை, கல்லீரல், நுரையீரல் போன்ற உறுப்புகளையும் பாதித்து அதற்குரிய அறிகுறிகளைத் தோற்றுவிக்கும். இந் நோயை ஒழிக்க ஒரே வழி, நாம் ஒவ்வொருவரும் 'சுய சுகாதாரம்' (PERSONAL HYGINE) பேண வேண்டும். மக்கள் நடமாடும் தெருக்களில், பொது இடங்களில் மலம் கழிப்பதைத் தவிர்த்து, கழிப்பறைகளில் மலம் கழிக்க வேண்டும். உண்பதற்கு முன்பும், மலம் கழித்த பின்பும் கை விரல்களை சுத்தமாகக் கழுவ வேண்டும். கொதிக்க வைத்து குளிரவைத்த தண்ணீரையே பருக வேண்டும். பச்சைக் காய்கறிகளையோ, பழங்களையோ உண்பதாக இருந்தால் நன்கு கழுவி சுத்தப்படுத்திய பிறகே உண்ண வேண்டும்.

❋ வி. ஸ்ரீராம், மணப்பாறை.

ஷாம்புகள் தேய்த்துக் குளித்தால் முடி நரைத்து விடுமா? வாரம் ஒருமுறை ஷாம்பு தேய்த்துக் குளித்தால் நல்லதா?

முடி நரைப்பதற்கும் ஷாம்பு தேய்த்துக் குளிப்பதற்கும் தொடர்பில்லை தம்பி! பயப்படாமல் குளி. ஷாம்புக் குளியல் வாரம் ஒருமுறை போதும். அடிக்கடி அவசியமற்றது.

❋ க. கோகிலவாணி, சங்கமங்கலம்.


அதிக இரைச்சல் உள்ள இடங்களில் தொடர்ந்து வசிப்பதால் உடம்பில் ஏதேனும் தொந்தரவுகள் வர வாய்ப்பிருக்கிறதா டாக்டர்?

வாய்ப்பிருக்கிறது. அதிக இரைச்சல் காரணமாகக் காது கேட்கும் தன்மையில் கோளாறுகள் உண்டாகலாம். என்றாலும், எல்லோருக்கும் கோளாறு உண்டாகும் என்பதில்லை. தனியொருவரின் உ ட ம் பை ப் பொறுத்து இது வேறுபடும். பொதுவாக உடம்புக்குக் கேடு தராத ஒலியின் அளவு 80 டெசிபெல்.


❋ கே. எம். ஆர். சோனியா,
ஆண்டரசன்பட்டி.

உடல் ஊனமுற்றோர்க்கான மருத்துவச் சான்றிதழை யாரிடம் பெற வேண்டும்?

அரசு மருத்துவமனைகளில் பணி புரியும் எலும்பு முறிவு சிறப்பு மருத்துவரிடம் ஊனமுற்றோர்க்கான சான்றிதழைப் பெற வேண்டும்.



விட்டுப் போனவை எவை? - போட்டி





மொத்தம் இங்கே பத்துப் படங்கள் இருக்கின்றன. இவற்றை நன்றாகப் பாருங்கள். இவற்றில் ஏதோ விட்டுப் போயிருக்கின்றன. இப்படி விட்டுப் போனவை மொத்தம் 10. இவற்றைக் கண்டுபிடித்து எழுத வேண்டும். பரிசு உண்டு. கூப்பனை அவசியம் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

விட்டுப் போனவை எவை?
- போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

பின்கோடு : ....

முடிவு தேதி : 15.3.1992

அறிஞர்களை அயர வைத்தவர்!

1910 அக்டோபர் 10. சண்டே நியூயார்க் டைம்ஸ் செய்தித்தாளில் ஒரு பரபரப்பான செய்தி!

''கல்வியறிவு இல்லாத எட்கர் கேசி என்பவர் அரை மயக்கத்தில், அதாவது ஹிப்னாடிசம் எனப்படும் செயற்கைத் தூக்க நிலையில் இருக்கும் போது செட்டிக்கார டாக்டராகப் பணி யாற்றுகிறார். அதைப் பார்த்து விஞ்ஞானிகள் ஆச்சர்யப்படுகின் றனர்...!''

விவரம் இதுதான்.

அமெரிக்காவின் கெண்டக்கியில் உள்ள ஹாப்கின்ஸ்வில்லி என்ற பண்ணையில் ஸ்கொயர் கேசி என்பவரின் மகன்தான் எட்கர் கேசி. பிறந்தது 1877 மார்ச்.

எல்லாப் பிள்ளைகளையும் போல் எட்கரும் துவக்கப் பள்ளியில் சேர்க்கப் பட்டான். அவனுடைய மாமாவே அங்கு ஆசிரியர். மிகுந்த அக்கரையுடன் போதித்தார். ஆனால், எட்கருக்குப் படிப்பில் சிறிதும் ஆர்வம் இல்லை. வகுப்பில் அவன்தான் கடைசி மாணவன்.

தன் மகன் இப்படி அடி முட்டாளாக இருப்பதைக் கண்டு வேதனை அடைந்த ஸ்கொயர், அடிக்கடி அவனை அடித்துத் துன்புறுத்துவார். பயனில்லை.

எட்கர் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது நடந்த நிகழ்ச்சி இது.

வகுப்பில் தேர்வுகளின் போது எட்கர் குத்துக்கல் போன்று எதுவும் எழுதாமல் அமர்ந்திருந்து விட்டு வந்து விடுவான். ஆனால், திடீரென்று ஒரு நாள் அவனிடம் ஓர் மாற்றம் ஏற்பட்டது.

கேள்வித் தாளைப் பெற்றதும் சுறுசுறுப்பாக எல்லா வினாக்களுக்கும் அவன் விடை எழுதிக் கொடுத்தான். எல்லாத் தேர்வுகளிலும் அவனே முதல்!

தந்தையால் நம்பவே முடியவில்லை. ''படிக்காமல் எப்படி எழுதினாய்?'' என்று வியப்புடன் மகனை அழைத்துக் கேட்டார்.''

உடனே எட்கர், ''எனக்குள் ஏதோ ஒரு அற்புதச் சக்தி ஏற்படுகிறது...!'' என்றான்.

''ஏற்படுகிறது என்றால்...? விளக்கமாகச் சொல்...'' என்றார் தந்தை.

''எப்போதெல்லாம் எனக்கு அரை மயக்க நிலை ஏற்படுகிறதோ, அப்போது நான் என்ன நினைத்தாலும் அது நடந்து விடுகிறது... என்றான் எட்கர்.

''திடீரென்று இப்போதுதான் அந்தச் சக்தி ஏற்படத் தொடங்கியுள்ளதா?'' என்று வினவினார் தந்தை.

''இல்லை அப்பா... எனக்கு ஏழு வயதாக இருந்த போது ஒரு நாள் காட்டு வழியே போய்க் கொண்டிருந்தேன். திடீரென்று என் காதருகில் ஒரு ஒலி கேட்டது...''

''என்ன ஒலி...?''

''உன்னுடைய வேண்டுகோள் ஏற்கப்பட்டு விட்டது. உனக்கு வேண்டியதைக் கேள்... என்றது அந்தக் குரல்.''

''அப்படியா...? நீ என்ன கேட்டாய்?''

''நான் எப்போதும் பிறருக்கு உதவிக் கொண்டே இருக்க விரும்பு

ஜானகி மணாளன்


கிறேன்... குறிப்பாக நோயுற்றிருக்கும் குழந்தைகளுக்கு... என்று கேட்டேன்...''

''அதன் பலன்தான் இது என்கிறாயா?'' என்று ஐயுற்றார் தந்தை.

''அதில் என்ன சந்தேகம்...? அதன் பிறகுதான் எனக்குள் ஒரு தன்னம்பிக்கை உணர்வு ஏற்பட்டது... இப்போது என்னால் எதையும் நினைவில் வைத்துக் கொள்ள முடிகிறது. அவ்வளவு ஏன்? இரவு படுக்கும் போது எத்தனை பெரிய புத்தகமானாலும் சரி.. தலையணையாக வைத்துக் கொண்டு தூங்கினேன் என்றால், காலையில் எழுந்தவுடன் ஒரு வரி விடாமல் அப்புத்தகத்தில் உள்ளதை என்னால் நினைவுபடுத்தி ஒப்பிக்க முடியும்... வேண்டுமானால் சோதித்துப் பார்க்கிறீர்களா...?'' என்று சவால் விட்டான் எட்கர்.

ஒரு சமயம் பேஸ்பால் விளையாட்டின் போது பந்து அவன் தலையை ஓங்கித் தாக்கி விட்டது. உடனே அவன் அரை மயக்க நிலையை அடைந்து விட்டான். 'ஐயோ! இந்த வலிக்கு என்ன செய்யலாம்? என்னுடைய உள் காயம் எப்படி ஆறும்' என்று கவலையுடன் நினைத்தான். அவ்வளவுதான். அடுத்த கணம், அவன் மனதில் அதற்கான சிகிச்சை முறை பளிச்சிட்டுத் தோன்றி விட்டது. உடனே தன் தாயாரை அழைத்தான். சில வகை மூலிகைகளின் பெயரைக் கூறி அவற்றால் மாவு கிண்டி வரச் சொன்னான். அதை வைத்துக் கட்டியதும் ஒரே நாள்தான். வீக்கம், வலி சிட்டாய்ப் பறந்து விட்டது. இதுதான் அவருக்கு ஏற்பட்ட முதல் வைத்தியம்.

சூரிய விட்டம் குறைகிறது!



★ சூரியனுடைய விட்டம் ஆண்டிற்கு 10 கி. மீ. குறைந்து கொண்டே வருகிறது என்று அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்துள்ளார். பிரிட்டனில் கடந்த 200 ஆண்டுகளாகப் பதிவு செய்யப்பட்ட பதிவேட்டில் இருந்து இது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது!

- ஆர். மூர்த்தி, கல்லிடைக்குறிச்சி.

சக்தித் தூண்டல். தனக்குத்தானே டாக்டராகச் செயல்பட்ட அனுபவம்.

அதன் பிறகு, ஒரு சமயம் அவருடைய தொண்டையில் ஏதோ கோளாறு ஏற்பட்டது. தலைசிறந்த ஒரு டாக்டரிடம் காட்டினார். 'உன் குரல் வளை பழுதடைந்து விட்டது. இனி சரிசெய்ய முடியாது. பேசினால் இனிமேல் காற்றுச் சத்தம்தான் வரும்... பேச்சு வராது'' என்று கூறி விட்டார் டாக்டர்.

எனினும் எட்கர் மனம் தளரவில்லை. தனக்குத்தானே செயற்கைத் தூக்கத்தில் ஆழ்ந்தார். உடனே பளிச்சென்று சிகிச்சை முறை புலப்பட்டு விட்டது. குரல்வளை நரம்பு பலம் இழந்து விட்டதால்தான் பேச்சு வரவில்லை என்பதைக் கணித்து விட்டார். பாதிக்கப்பட்ட இடத்துக்குத் தேவையான ரத்தம் சென்றடைய வழி செய்தார். என்ன ஆச்சர்யம்! அவருக்கு முன்போல் பேச்சுத் திரும்பி விட்டது.

இந்த இரு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு எட்கரின் பெயரும் புகழும் வெளியில் பரவத் தொடங்கியது. உயர்தரமான படிப்பும், நீண்ட கால அனுபவமும் உடைய டாக்டர்களால் மட்டுமே கண்டுபிடிக்க முடிந்த உடற்கோளாறுகளை, அவர் மிகச் சுலபமாகக் கண்டுபிடித்துச் சொன்னதுடன், அவற்றுக்குரிய சரியான சிகிச்சை முறைகளையும் கையாண்டு குணப்படுத்தினார். அவருடைய மருத்துவ முறைகள் மிகவும் எளிமையானவை. மலிவானவை. பெரும்பாலும் இயற்கையில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே தயாரிக்கப்படக்கூடியவை. கொப்புளித்தல், கிண்டிக் கட்டுதல், பழச்சாறுகள், தேகப் பயிற்சி, பிளாஸ்திரி போடுதல், சாறு குடித்தல், தெம்புத் திரவம் பருகுதல் போன்றவற்றைத்தான் அவர் அதிகம் சிபாரிசு செய்தார். எனவே, நாளுக்கு நாள் அவர் புகழ் பரவியது.

ஆனால், அவருடைய பெயரும் புகழும் பரவிய அளவுக்கு அவருக்கு வருமானம் உயரவில்லை. தனது வைத்திய சிகிச்சைக்கு அவர் பணம் வாங்குவதே கிடையாது. அதை ஒரு பொது மக்கள் தொண்டாகவே கருதிச் செய்து வந்தார். அப்போது அவர் ஒரு புகைப்படக்காரரிடம் உதவியாளராகப் பணியாற்றி வந்தார். அதில் கிடைக்கும்

சொற்பத் தொகையில்தான் அவர் குடும்பம் நடத்த வேண்டியிருந்தது. மிகவும் சிரமப்பட்டார். போதும் போதாததற்கு, மனைவிக்குக் காச நோய். மகனின் கண் பார்வை அனேகமாகப் போய் விட்டது என்றே கூறலாம். நல்லவேளையாகத் தனது அற்புதச் சக்தியைக் கொண்டு அவர்களைக் குணப்படுத்தினார்.

படுக்கையில் படுத்து, ஆழ்நிலைத் தியானத்தில் அவர் ஈடுபட்டு விட்டால், பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள நோயாளிகளின் உடல்நிலைகளை அவரால் கணிக்க முடிந்தது. மிகப் பெரிய டாக்டர்கள் கைவிட்டு விட்ட நோயாளிகளையெல்லாம் அவர் பிழைக்க வைத்தார்.

வைத்திய சிகிச்சை தவிர, பிற்பாடு வரப் போகும் தந்திகள், தபால்கள் போன்றவற்றை முன்கூட்டியே அறிந்து கூறி விடுவார். சில சமயம் தம்மிடம் வருபவர்களின் முற்பிறவிகள் பற்றியும் அறிந்து சொல்வார். அப்படி அவர் கூறுவது ஹோமர் காலக் கிரேக்க மொழியில் இருக்கும். உடற்கூறு தொடர்பான மிகக் கடுமையான கேள்விகளுக்கும் கூடச் சட்டென்று விளக்கமளித்து விடுவார்.

1929 ஆம் ஆண்டு பங்கு மார்க்கெட்டில் மிகப் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டது. அது பற்றி அவர் சில ஆண்டுகள் முன்பே அறிந்து சொல்லி விட்டார். இரண்டாம் உலகச் சண்டை பற்றிப் பல ஆண்டுகள் முன்பே அவர் எச்சரித்தார். துருவப் பிரதேசத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாகவும், போகப் போக அங்குள்ள பனிக் கட்டிகள் உருகி விடும் என்றும் அதன் காரணமாக உலகின் சீதோஷ்ண நிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என்றும் அவர் முன்பே எச்சரித்தார். அவர் அன்று கூறியது இன்று உண்மையாகி வருவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அவர் கணித்துச் சொன்ன முன்னறிவிப்புகளில் சில இன்னும் சில நிறைவேறாமல் உள்ளன. உரிய காலம் வரும் போது அவை உண்மையாகும் என்பதில் ஐயும் இல்லை. அவற்றில் ஒன்று மிகவும் ஆபத்தானது. 1998 வாக்கில் லாஸ் ஏஞ்சலிஸ், சான் ஃபிரான்சிஸ்கோ, நியூயார்க் ஆகிய நகரங்களின் பெரும் பகுதிகள் இயற்கையின் சீற்றத்துக்கு உட்பட்டு அழிந்து



விடும் என்று அவர் கூறியுள்ளார். முன்னெச்சரிக்கையாக இருந்தால் உயிர்ச் சேதத்தைத் தடுத்து விடலாம்.

பல ஆங்கில முறை மற்றும் ஹோமியோபதி மருத்துவர்கள் இவரது ஆலோசனைகளைப் பெற்றுத் தமது நோயாளிகளைப் பிழைக்க வைத்துள்ளனர். என்றாலும், இவரைப் பெரிய மோசடிக்காரர் என்று கூறிய டாக்டர்களும் உண்டு.

டாக்டர் தாமஸ் ஹவுஸ் என்று ஒருவர். அவர் மனைவிக்கு அடிவயிற்றில் தொந்திரவு. ஹக்கார்டு என்ற ஒரு டாக்டரிடம் காட்டினார். வயிற்றில் கட்டி என்று கூறிய அவர், உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார். தாமஸ் அவளை எட்கரிடம் காட்டினார். சோதித்துப் பார்த்த எட்கர், அப் பெண்மணி கர்ப்பமாக இருப்பதாகவும், வலிக்குக் காரணம் குடல் அடைப்பு என்றும் கூறி, அறுவை சிகிச்சை இன்றியே குணப்படுத்தி விட்டார். சில மாதங்களுக்குப் பிறகு, ஹக்கார்டு கட்டி என்று கூறியது ஒரு அழகிய குழந்தையாகப் பிறந்து ஜூனியர் தாமஸ் என்ற பெயரைப் பெற்றது. இவ்விதம் பல எதிர்ப்புகளுக்கு இடையே பல அற்புதங்களை நிகழ்த்திய எட்கர் கேசி, தனது இறுதி மூச்சு உள்ளவரை மருத்துவத் தொண்டாற்றி 1945 ஜனவரி 3ஆம் நாள் மறைந்தார்.



தலைகீழ் தம்புசாமி!

தலைகீழ் தம்புசாமி ஏடாகூடமான காரியங்களைச் செய்வதில் பெயர் பெற்றவன். ''உப்புமா கொண்டு வா'' என்றால், உப்பைத் தனியாகவும், மாவைக் கொஞ்சம் தனியாகவும் கொண்டு வருவான். ''குண்டு மல்லி வாங்கி வா'' என்றால் கொஞ்சம் கோலி குண்டையும், மல்லிகையையும் தனித்தனியாகக் கொண்டு வருவான். அதனால், தம்புசாமியிடம் ஏதாவது வேலையை ஒப்படைப்பது என்றாலே எல்லோரும் தயங்கினார்கள்.

தம்புசாமிக்கு நல்ல பெண்ணாகப் பார்த்துத் திருமணம் செய்ய அவன் அம்மா விரும்பினாள். ஆனால், பெண் கேட்கும் பேச்சை எடுத்தாலே எல்லோரும் ''தம்புசாமிக்கா? நம்ம பொண்ணு சரிப்படாதுங்க'' என்று கூறினார்கள். அதையும் மீறிக் காரியங்கள் நடந்தால், பெண் பார்க்கப் போகும் போது, தம்புசாமி நடந்து கொள்ளும் முறையைப் பார்த்து எல்லோரும் ஒதுங்கிக் கொண்டார்கள்.

அவன் அம்மா ரொம்ப முயன்று, மூஞ்சூர்பாக்கத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து வந்தாள். தம்புசாமியைப் பார்த்து, ''நீயும் போய், பெண்ணைப் பார்த்து விட்டு வா. போகிற இடத்தில் உன் இடக்குத்தனம் எதையும் காட்டாதே. போகும் போது வெறும் கையுடன் போகாதே. ஒரு பூ, பழம் வாங்கிக் கொண்டு போ'' என்று புத்திமதி சொன்னாள்.

தலைகீழ் தம்புசாமி யோசித்தான். தன் குணத்திற்கு ஏற்ற பெண்ணாக இருந்தால் நல்லது என்று அவன் எண்ணினான். அதனால் வழக்கப்படி ஏடாகூடமாக சிந்தித்து, ஒரு முடிவுக்கு வந்தான். அம்மா, பூவும் பழமும் வாங்கிக் கொண்டு போகச் சொன்னபடி வாழைப் பூவை வாங்கிக் கொண்டான். மிளகாய்ப் பழத்தை கால் கிலோ வாங்கிக் கொண்டு போனான்!

பெண் வீட்டார் தம்புசாமியை வரவேற்று அன்புடன் உபசரித்தனர். பெண் வந்து வணங்கியதும் தம்புசாமி தான் வாங்கி வந்திருந்த வாழைப் பூவையும், மிளகாய்ப் பழத்தையும் தந்தான்.

அந்தப் பெண் திகைத்துப் போய் முகம் சுளிப்பாள் என்று தம்புசாமி எதிர்பார்த்தான். ஆனால், அந்த அதிசயப் பெண்ணோ, தரையில் உட்கார்ந்து வாழைப் பூவை ஆய்ந்தாள்! மிளகாய்ப் பழத்தை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள். அரைமணியில் திரும்பி வந்தாள், கையில் ஒரு தட்டுடன்.

''என்னைப் பற்றி இத்தனை சமாச்சாரம் எப்படி அறிந்து கொண்டீர்கள்! எனக்கு அதிக மணமுள்ள பூவை வைத்துக் கொண்டால் தலைவலி வந்து விடும். வாழைப்பழம் எனக்கு அலர்ஜி. இதெல்லாம் தெரிந்துதானே வாழைப்பூவையும், மிளகாய்ப் பழத்தையும் வாங்கி வந்தீர்கள்? நீங்கள் கொண்டு வந்த வாழைப் பூவை ஆய்ந்து வாழைப் பூ வடையும், மிளகாய்ப் பழ பஜ்ஜியும் போட்டிருக்கிறேன். சாப்பிடுங்கள்'' என்று தட்டை நீட்டினாள் அந்தப் பெண்!

''எனக்குப் பொருத்தமான மனைவி நீதான்!'' என்றான் தம்புசாமி.

- ப. ச. கோபாலகிருஷ்ணன்,,
சென்னை - 20.

பொன்முடிப் பெட்டகம்

கு.ரு. சீனிவாசன்




அன்று சித்திரா பௌர்ணமி. முருகபுரியின் மூலை முடுக்குகளிலெல்லாம் முரசுகள் முழங்கின. செய்தியைத் தெரிந்து கொள்ளும் ஆவலோடு மன்றங்களில் மக்கள் கூடினர்.

பறைமுழக்கிய வள்ளுவன் பின்வரும் செய்தியை அறைகூவி அறிவித்தான்.

''குறிஞ்சி நாட்டின் குடிமக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி! கொல்லி மலைக் குகையில் தவம் செய்து கொண்டிருக்கும் நமது வேந்தர் வீர சேனரிடம் சென்று, அவர் நடத்தும் பரீட்சைகளில் தேர்ந்து, அன்னாரிடமிருந்து பொன்முடிப் பெட்டகத்தின் திறவுகோலைப் பெற்று வருபவர், குறிஞ்சி நாட்டின் மன்னர் ஆக்கப்படுவார். இது முதலமைச்சர் முத்துவாணரது அறிவிப்பு.''

குறிஞ்சி நாட்டை ஆட்சி புரிந்த வீரசேனருக்குக் குழந்தைகளே இல்லை. அவரது மனைவியாரும் காலமாகி விட்டார். வேந்தருக்கு வயதாகி விட்ட நிலையில் ஆட்சிப் பொறுப்பினை யாரிடமாவது ஒப்படைத்து விட்டு, காட்டிற்குச் சென்று தவம் செய்ய விரும்பினார். பொருத்தமானவர்கள் எவரும் தென்படவில்லை.

''தவத்தை நாடிக் காடு செல்கிறேன். மணிமுடியை கஜானாவின் இரகசியக் கிடங்கில் வைத்துப் பூட்டி, அதன் திறவுகோலை எடுத்துச் செல்கிறேன். ஆண்டுக்கு ஒருமுறை நாடு முழுவதும் பறை முழக்கி, அரசனாக விருப்பம் உள்ளோரைக் கொல்லி மலைக் குகையில் தவமியற்றும் என்னிடம் அனுப்பி வையுங்கள். எனது பரீட்சைகளில் வெற்றி பெறும் பொருத்தமானவரிடம் திறவுகோலைக் கொடுத்து அனுப்புகிறேன். அவரை அரியணையில் அமர்த்துங்கள். அதுவரை ஆட்சிப் பொறுப்பு அமைச்சரிடம் இருக்கும்'' என்று அமைச்சரிடம்



''கழுதையாரே, சுவையான செய்தியான்னு பார்க்கறேன்னு பேப்பர் கேட்டே! இப்படியா...?''

கூறிச் சென்றார் அரசர்.

ஸ்ரீ குருநாதர், ''மகனே, அன்பும் இரக்கமும் நிரம்பப் பெற்றவர்களே அரசனாக அருகதை உள்ளவர்கள். அவை உன்னிடம் நிரம்ப உண்டு. ஆதலால் நிச்சயம் உனக்கு வெற்றி கிட்டும்'' என்று அருள்நம்பியை ஆசீர்வதித்து அனுப்பினார். அருள்நம்பி பயணமானான்.

காட்டின் பாதையோரத்தில் கோபுரம் போல ஆள் உயரத்திற்கு நின்றது ஒரு கறையான் புற்று. அதைக் கரடி ஒன்று அடித்துச் சிதைக்க முயன்று கொண்டிருந்தது. அருள்நம்பி பதை பதைத்துப் போய் கரடியிடம் கேட்டான்.

''ஏன் இந்தப் பாவச் செயலைப் புரிகிறாய்? பல்லாயிரக்கணக்கான கறையான்கள் பாடுபட்டு உருவாக்கிய புற்றை அழிக்கலாமா? ஒருவரது குடியிருப்பை அழிப்பது பாதகமல்லவா? இந்தப் புற்று இடிந்து போனால் இதில் வாழும் கோடிக்கணக்கான கறையான்களின் கதி என்னவாகும்? பேசாமல் இங்கிருந்து போய் விடு!'' என் று கோபத்தோடு தடுத்தான்.

''எனக்கு உணவாகிய புற்றாஞ்சோறு இவைதானே? வயிற்றுப் பசிக்காக நான் இதைச் செய்தே தீர வேண்டும். பேசாமல் போ. என் வழிக்கு வந்தால் கொன்று விடுவேன்'' என்று கரடி மிரட்டியது.

வாளை உருவி ஓங்கிய அருள்நம்பி, ''ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பதற்காக உன் ஒரு உயிரை வாங்க நான் தயங்க மாட்டேன்'' என்று பதிலுக்கு அச்சுறுத்தினான்.

சற்றும் அஞ்சாத கரடி, ''உன்னைப் பார்த்தால் நல்லவனாகத் தெரிகிறது. ஆயுதம் ஏந்த முடியாத என்னிடம் வாளைக் காட்டிப் பயமுறுத்துகிறாயே! சுத்த வீரனாக இருந்தால், கத்தியைக் கீழே போட்டு விட்டு மற்போருக்கு வா. உன்னிடம் தோற்றால் இனி இந்தப் பாவத் தொழிலை விட்டு விட்டு சைவமாக மாறி விடுகிறேன்'' என்று சவால் விட்டது.

அதன் பேச்சில் இருந்த நியாயத்தை உணர்ந்த அருள்நம்பி, வாளைத் தூர வீசி விட்டு மற்போருக்கு ஆயத்தமானான்.

கரடியும் அவனும் கட்டிப் புரண்டு நெடுநேரம் கடும் போர் புரிந்தனர். அவனுக்கு உடல் முழுவதும் காயங்கள். இரத்தம் தாரை தாரையாக வழிந்தது. இருப்பினும் மனவுறுதி தளராது போரிட்டான். இறுதியில், கரடியின் முன்னங்கால்களை மடக்கி இறுகப் பிடித்து, அதன் கழுத்தை நெறிக்க முற்பட்டான்.

உடனே கரடி, ''உயிர்ப்பிச்சை கொடு. என்னை விட்டு விடு. நான் தோற்றேன்'' என்று ஓலமிட்டுக் கெஞ்சியது. அருள்நம்பியும் பிடியைத் தளர்த்தி விட்டு எழுந்து நின்றான். கரடி அவனை வணங்கி விட்டுச் சென்றது. வாளை மாட்டிக் கொண்டு புறப்பட முயன்றான் அருள்நம்பி.

''அருள் வள்ளலே!'' என்ற பாசம் நிறைந்த குரல் கேட்டது. குரல் வந்த புற்றை நோக்கினான். புற்றின் உச்சியில் கண்ணாடி போல மின்னிய பெரிய கறையான் ஒன்று அமர்ந்திருந்தது.

''இந்தப் புற்றில் வாழும் கறையான்களின் அரசன் பாதாளபுத்திரன் நான். எங்கள் உயிரைக் காக்க, உமது உயிர் பற்றிக் கவலைப்படாமல் கரடி

யோடு போராடிய அருள் குணத்தை எப்படிப் போற்றுவேன்? என்ன கைம் மாறு செய்யப் போகிறோமோ? என் குடிமக்கள் சார்பில் மிக்க நன்றி'' என்று கூறி வணங்கியது கரையான். அதன் நன்றியுணர்வை மெச்சிய வண் ணம் மேலே நடந்தான் அருள்மணி.

சற்றுத் தொலைவில் குளம் ஒன்று தென்பட்டது. மீனவன் ஒருவன் கரை யில் அமர்ந்து தூண்டில் போட்டுக் கொண்டிருந்தான். தூண்டிலில் கண் ணைக் கவரும் பெரிய தங்கநிற மீன் ஒன்று சிக்கிக் கொண்டு, உயிருக்கு மன் றாடித் துள்ளியது.

அருள்நம்பி மீனவனிடம், ''உயிர்க் கொலை மகாபாவம். தயவுசெய்து அந்தத் தங்க மீனை மீண்டும் தண்ணீ ரில் விட்டு விடுங்கள்'' என்று கை கூப்பிக் கெஞ்சினான்.

மீனவன் அலட்சியமாக ஏறிட்டு நோக்கி, ''என் பிழைப்பைக் கெடுக்க வந்திருக்கும் நீ யாரப்பா? நான் மீன் பிடித்துத்தானே என் மனைவி மக்க ளைக் காப்பாற்ற வேண்டும்?'' என்று கேட்டான்.

''வேறு தொழில் செய்து பிழைக் கக் கூடாதா?'' என்று பணிவாகக் கேட் டான் நம்பி.

''எனக்கென்ன நிலபுலங் களா இருக்கின்றன?'' என்று கேட்டுக் கொண்டே தூண்டிலில் சிக்கிய தங்க மீனை எடுத்துத் தனது கூடையில் போட்டான் மீனவன்.

சற்றே யோசனையில் ஆழ்ந்த நம்பி, ''ஐயா, நீங்கள் கூறியது நியா யமே. உமக்கு ஒரு காணி நிலம் கிடைத் தால் இந்த உயிர்க்கொலைத் தொழிலை விட்டு விடலாம் அல் லவா?'' என்று கேட்டான்.

''நிச்சயமாக; ஆனால், யார் எனக்கு நிலம் கொடுப்பார்கள்?'' என்று எதிர் வினா எழுப்பினான் மீனவன். நம்பி தன் இடுப்பில் செருகி வைத்திருந்த ஓர் ஓலை நறுக்கையும், எழுத்தாணியை





யும் எடுத்து, எதையோ எழுதி முடித்து மீனவனிடம் நீட்டியவாறு சொன்னான் :

''முருகபுரியில் எனக்குச் சொந்தமாக உள்ள ஒரு காணி நிலத்தை உமக்கு உரிமையாக்கி ஓலைச் சாசனம் தந்திருக்கிறேன்.''

அதைப் பெற்றுத் தன் கண்களில் ஒற்றிக் கொண்ட மீனவன், தங்க மீனை எடுத்துத் தடாகத்து நீரில் விட்டு விட்டு ஊர் நோக்கி நடந்தான்.

அருள்நம்பி குளத்திற்குள் இறங்கி நீர் பருகப் போனான். உயிர் தப்பிய தங்க மீன் நீரின் மேல்பரப்பிற்கு வந்து, ''தியாக சீலரே! உமது தயவால் இன்று நானும் என் குடிகளும் உயிர் பிழைத்தோம். உமது பெருதவிக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டவர்கள். மிக்க நன்றி!'' என்று பணிவாகக் கூறியது.

''புழுக்களை உண்ண வந்து இப்படி மாட்டிக் கொள்ளலாமா? இனிமேலாவது புழுப் பூச்சிகளைப் புசிக்காமல், அழுக்குகளையும் பாசிகளையும் உண்டு வாழுங்கள்'' என்று அறிவுரை கூறினான் நம்பி.

''தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. நான் இந்தக் குளத்தில் வாழும் நீந்தும் உயிரினங்களின் அரசன் மச்சேந்திரன். தூண்டில் புழுவைத் இன்னத் துடித்த மீன்களுக்கு 'வேண்டாம்' என்று அறிவுரை கூறினேன். அவை என் சொற்களை மீற முயன்றதால், முதலில் எனது உயிரைப் போக்கிக் கொண்டாலாவது அவற்றிற்குப் புத்தி வரட்டும் என்றுதான் நான் முதலில் தூண்டிலில் அகப்பட்டேன்'' என்றது தங்கமீன்.

அதன் கடமையுணர்வைப் பாராட்டி விட்டு அருள்நம்பி மேலே நடந்தான்.

கொல்லிமலையின் அடிவாரத்தை அடைந்து விட்டான். அரசன் தவம் செய்யும் குகை அருகில்தான் இருந்தது. இடையில் அருவிக்கரை ஒன்று குறுக்கிட்டது. அங்கே நீராடப் போனான். தலைக்கு மேலே பறவைகளின் பேச் சொலி கேட்டு அண்ணாந்து பார்த்தான். சாய்வாக நின்ற ஒரு

நெல்லி மரத்தின் எல்லாக் கிளைகளிலும் ஆயிரக்கணக்கான தூக்கணாங் குருவிக் கூடுகள் தொங்கின. அவைகளில் வாழ்ந்த குருவிகளில் ஒன்று மிகவும் உரத்த குரலில் மற்ற குருவிகளிடம், ''நண்பர்களே, நாம் குடியிருக்கும் இந்த நெல்லி மரத்தின் வேரில் அருவி நீர் மிகவும் வேகத்தோடு கொட்டுவதால் மண் அரிப்பு ஏற்பட்டு, மரம் சாயும் நிலையில் உள்ளது. ஆதலால் நாம் இந்த மரத்தை விட்டு உடனே வேறு இருப்பிடம் தேட வேண்டும். எல்லோரும் புறப்பட ஆயத்தமாகுங்கள்!'' என்று விரைவுபடுத்திற்று.

பறவைகளின் பரிதாப நிலையை அறிந்த நம்பி குருவிகளிடம் ''அஞ்ச வேண்டாம். உங்களைக் காப்பது என் பொறுப்பு'' என்று கூறி விட்டு, அருகில் கிடந்த பாறாங்கற்களைப் புரட்டி நெல்லி மரத்தைச் சுற்றி அண்டம் கொடுத்தான். இப்போது அருவிநீர் மரத்தின் வேரில் மோதாமல் பாறைகளில் மோதி சுற்றி விலகியோடத் தொடங்கியது.

துன்பம் கண்டு வலிய வந்து உதவிய நம்பியின் அருட்குணம் கண்டு வியந்த குருவிகளின் அரசன், ''கருணை மனம் கொண்ட பிரபுவே! நான் இம் மரத்துப் பறவைகளின் தலைவன். விண்ணளந்தான். உமது உடல் வருத்தம் பாராமல் எமக்கு உதவி செய்து, எங்கள் குடியிருப்புகளைக் காத்தீர்கள். உமது உதவியை என்றும் மறவோம்'' என்று உருக்கத்துடன் உரைத்தது.

குகையை நோக்கி மேலே நடந்தான் நம்பி.

குகைக்குள் இருந்த வீரசேன மகாராஜாவைப் பார்த்ததும் நம்பி வணங்கினான். அவன் எண்ணத்தை அறிந்து கொண்ட மகாராஜா.

''இப்போது கேட்கும் வினாக்களுக்கு மூன்றே நாழிகை நேரத்திற்குள் விடையறிந்து வர வேண்டும்'' என்றார்.

''கேளுங்கள், முயற்சி செய்து பார்க்கிறேன்'' - பணிவுடன் கூறினான் நம்பி.

''அருள்நம்பி, வரும் வழியில் ஆள்



உயரக் கரையான் புற்று ஒன்றைப் பார்த்திருப்பாயே; அந்தப் புற்றுக்குள் எத்தனை சுரங்க வழிகள் உள்ளன? - இதுதான் முதல் கேள்வி. புற்றுக்குச் சேதம் ஏதும் ஏற்படாமல் விடை கொண்டு வர வேண்டும்.''

அரசர் தொடர்ந்து இரண்டாவது கேள்வியைக் கூறினார். ''தங்கமீன் வாழும் தடாகம் ஒன்று இங்கு இருக்கிறது. அதில் வாழும் நண்டுகள், மீன்கள், தவளைகள் ஆகியவற்றின் எண்ணிக்கையை இனவாரியாக அறிந்து வர வேண்டும். ஆனால், தடாகத்து நீரை அப்புறப்படுத்தக் கூடாது. இதுதான் இரண்டாவது வினா.''

மூன்றாவது வினாவும் பிறந்தது. அருகிலுள்ள அருவிக்கரை நெல்லி மரத்தில் உள்ள மொத்த இலைகள் எத்தனை? மரத்தில் ஏறாமலேயே விடையறிந்து, வரவேண்டும். வினாக்கள் மூன்றுக்கும் விடையை மூன்று நாழிகை நேரத்திற்குள் அறிந்து வந்து தெரிவித்தால், மணிமுடிப் பெட்டகச் சாவியைப் பெற்றுச் செல்லலாம்!''

அருள்நம்பி, விரைவாக நடந்து அருவிக்கரையை அடைந்தான். 'மரத்தில் ஏறாமல் இலைகளை - அதுவும் மிகச் சிறிய நெல்லி இலைகளை எப்படி எண்ணியறிய முடியும்?' என்று சிந்தித்தபடியே மரத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

அதே நேரம் தன் கூட்டினின்றும் வெளியே தலையை நீட்டிய குருவி அரசன் விண்ணளந்தான் நம்பியைப் பார்த்து வணங்கி, ''ஐயா, எங்கள் உதவி ஏதேனும் தேவையா?'' என்று ஆவலோடு கேட்டது.

''இம் மரத்திலுள்ள இலைகளின் எண்ணிக்கை தெரியுமா?''

குருவி, மரத்தின் மேற்பரப்பை மூன்று தடவை வட்டமிட்டு நோட்டமிட்டது. பிறகு அவனிடம் வந்து, ''மொத்தம் மூன்று கோடியே முப்பது லட்சம் இலைகள்'' என்று தெரிவித்தது. நன்றி தெரிவித்து விட்டுத் தங்கமீன் தடாகக் கரையில் நின்று 'மச்சேந்திரா!' என்று குரல் கொடுத்தான் நம்பி.

கரையின் அருகே வந்த தங்கமீன், ''பிரபு! என்னால் தங்களுக்கு ஆக வேண்டியது ஏதாவது இருக்கிறதா? என்று பணிந்து கேட்டது.


''இங்கு வாழும் மீன்கள், நண்டுகள், தவளைகள், ஆமைகள் ஆகியவற்றின் எண்ணிக்கையை இனவாரியாகக் கூற முடியுமா?''


அந்தக் குளத்தின் தலைவனே அந்த மீனாதலால், சரியான எண்ணிக்கையை இனவாரியாக எடுத்துரைத்தது அது.

கரையான் புற்றை அடைந்தான் நம்பி. புற்றரசனைக் கூவியழைத்தான். உச்சிக்கு வந்த கரையான் அவனை வணங்கியது.

''உன் புற்றுக்குள் அமைந்த சுரங்க வழிகள் எத்தனை கூறுவாயா?''

''என்னையா மரங்கொத்தியாரே, கூப்பிட்டால் கதவைத் திறந்திருக்க மாட்டேனா? இப்படித் தட்டித் தட்டி கதவையே பெயர்த்துட்டீரே!''





''காதணி விழாவில, காது குத்த ஊசி இல்லாட்டி என்ன... நான் இருக்கேனே...?''

- ச. காணிக்கைராஜ்

''அறுநூறு! என்றது பாதாள புத்திரன்.

மூன்று வினாக்களுக்கும் விடையறிந்து கொண்ட அருள்நம்பி, குகைக்கு விரைந்து வீரசேனரிடம் கூறினான். ஆனந்தமுற்ற மன்னர், ''அருள்நம்பி, இவ்வளவு விரைவாக விடைகளை அறிந்தது எப்படி?'' என்று விசாரித்தார்.


நம்பி தான் கரையான்களுக்கும், மீனுக்கும், குருவிகளுக்கும் உதவி செய்ததையும், அவ்வுயிர்களால் தனக்கு உடனே விடை கிடைக்க உதவியதையும் கூறினான். மனம் மகிழ்ந்த மன்னர் மணிமுடிப் பெட்டகச் சாவியைக் கொடுத்து வாழ்த்தினார்.

நம்பி அவரிடம், ''அரசே தாங்கள் இம்மூன்று வினாக்களைக் கேட்டமைக்கு ஏதேனும் அடிப்படைக் காரணம் உண்டா?'' என்று பணிந்து கேட்டான்.

''இந்த மூன்று கேள்விகளுக்கான விடைகளை ஒரு மனிதன் தன் அறிவினாலோ, சொந்த யுக்தியாலோ அறிந்து கொள்ள முடியாது. ஊர்வன, நீந்துவன, பறப்பனவாகிய உயிரினங்களின் உதவியால் மட்டுமே அறிய முடியும். இவற்றின் உதவி ஒரு மனிதனுக்குக் கிடைக்க வேண்டுமானால், அவன் அவற்றுக்காகத் தன் உடல், பொருள், ஆவி மூன்றினையும் தியாகம் செய்யும் பேருபகாரியாக இருக்க வேண்டும். அத்தகைய பண்பாளனே மன்னுயிர்களைத் தன்னுயிர் போல் காக்கும் மன்னன் ஆவதற்குத் தகுதியானவன். இதனாலேயே இம்மூன்று கேள்விகளும் உன்னைச் சோதிப்பதற்காகக் கேட்கப்பட்டன!'' என்றார்.

அரசரது அறிவுக் கூர்மையை எண்ணித் தனக்குள் வியந்து நின்ற போது வீரசேனர், ''உன் அருளாட்சியில் குறிஞ்சி நாடு நிச்சயம் சுபிட்சம் அடையும். சென்று வா!'' என்று நல்லாசி கூறி வழியனுப்பினார்.

அருள்நம்பி அவர் பாதங்களை வணங்கி விட்டு, முருகபுரி நோக்கிப் பெட்டகச் சாவியோடு புறப்பட்டான்.



''நான் கடைத் தெரு பக்கம் போறேன்பால் ரொட்டி வாங்கி வரவா? பழ ரொட்டி வாங்கி வரவா?''

''கவரொட்டி இருந்தால் ஒழித்துக் கொண்டு வா!''

- பி. நடராஜன்



''உனக்கு பள்ளிக்கு எப்பப் போகப் பிடிக்கும்?''

''மூடியிருக்கும் சமயத்தில்!''


- மொரப்பூர். சி. அருள்மணி




''பாப்பா! எப்போ பார்த்தாலும் ஐஸ்க்ரீம், கோன் ஐஸ்னு சாப்பிடறியே உன் பேர் என்னம்மா?''

'' 'ஐஸ்'வர்யா.''

- கே. எல். குமணன்


அக்பரை வென்ற துளசிதாசர்
கதை: குமரன்
படம்: செல்லம்
துளசிதாஸ், ஹஸ்தினாபுரி அரசனிடம் பணியாற்றி வந்தான்.
துளசி! வேட்டைக்குக் கிளம்பு!
துளசிதாஸ் வீட்டில்...
உங்க அம்மாவுக்கு உங்களைப் பார்க்கணுமாம். சொல்லி அனுப்பினாங்க...
மமதை தன் மாமியாரிடம்...
அம்மாவைப் பார்த்துட்டு வந்துடறேன்.
ஜாக்கிரதையாய் போய் வா!
வேட்டை முடிந்து திரும்பிய துளசிதாஸ்...
அம்மா! மமதை எங்கே?
அவ தன் அம்மாவைப் பார்க்கப் போயிருக்கா.
சமீபத்தில்தான் கல்யாணம் ஆகியிருந்த துளசிதாஸுக்கு உடனே மனைவியைக் காண ஆசை...
நானும் போயிட்டு வரேன்...
இந்த இருட்டிலா?



பிடிவாதமாகக் கிளம்பிச் சென்றான் துளசிதாஸ்.
நல்ல மழை, கும்மிருட்டு. அம்மா சொன்னதைக் கேட்டிருக்கலாம்.
வீட்டு வாசலில்...
கதவு சாத்தியிருக்கு. எல்லாரும் தூங்கறாங்க போல... இதோ, ஒரு தாம்புக் கயிறு!
இருட்டில் தாம்புக் கயிற்றைப் பிடித்துக் கொண்ட துளசி...
மமதா தான் முன் யோசனையாகக் கயிறு தொங்கவிட்டிருக்கா. இதன் வழியே ஏறி...
மொட்டை மாடியில் துளசி குதித்த சத்தம் கேட்டு...
யாரது.
நான்தான்
எப்படி உள்ளே வந்தீங்க?
நீதான் கயிறு தொங்க விட்டிருந்தியே!
கயிறா? நாகா?



வியப்பும் சந்தேகமும் மிக, மமதை...
வாங்க, பார்ப்போம்.
விளக்கு வெளிச்சத்தில்...
ஐயோ, பாம்பு!
பாம்பைப் போய் கயிறு என்று நினைத்து ஏறலாமா? அம்மா சொன்னதைக் கேட்டிருக்கலாமே! என்ன அவசரம்?
உன்னைப் பார்க்கணும்கிற ஆசையில்தான் மழை, இருட்டு பார்க்காமல் ஓடி வந்தேன்.
எதன் மீதும் இப்படி அளவுக்கு மீறி ஆசை வைப்பது தப்பு.
துளசிதாஸருக்குத் தன் அறியாமை மீது வெறுப்பு ஏற்பட்டது.
நான் ஞானம் பெற வேண்டும்




காட்டை அடைந்து பாகிரதி
நதியில் குளித்துத் தவம் செய்
தார் துளசிதாசர்.
ராம்! ராம்!
தினம் அதிகாலையில் குளித்த
தும் கமண்டலத்தில் நீர் கொண்டு
வருவார் துளசி...
கை, கால் அலம்பியது போக, மிச சத்தை இந்த மரத்துக்கு ஊற்றுகி றேன்...
பன்னிரண்டு ஆண்டுகள்
தவம் செய்தபின்...
யார் நீ?
இந்த மரத்தில் வசிக்கும் பேய்!
ஆறு, கிணறு, ஏரி- எங்கு நீரும் என் தாகத்தைத் தணிக்கவில்லை. ஆனால் நீ பக்தியுடன் விட்ட நீரால் இந்த மரத்தில் இருந்த என் தாகம் நீங்கி யது. வேண்டும் வரம் கேள்.
துளசிதாஸர் வேதனையு
டன்...
ராமனைக் காணத் தவமி ருந்தேன். பன்னிரண்டு வரு ஷம் கழித்துப் பேய் தானா தோன்ற வேண்டும்? ஹூம்


அலட்சியமாய் என்னை எண்ணாதே! ராமனைக் காண உனக்கு நான் வழி காட்ட முடியும்!
நான் வேண்டுவதும் அந்த வரமே!
ஆஞ்சநேயரைச் சரணடைந்தால் ராமனைக் காணலாம்.
மாருதியை எங்கே சந்திப்பது?
ராமாயண உபந்நியாசம் நடக்கும் இடத்தில் எல்லாருக்கும் முன்னால் ஒரு கிழவர் கிழிந்த உடையுடன் கையில் கோல் பிடித்து வந்து விடுவார்...
...கதை முடிந்து எல்லாரும் எழுந்து போன பிறகும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக உட்கார்ந்திருப்பார். அவர்தான் வாயுபுத்திரன்!
அனுமனை அடையாளம் கண்டு கொண்ட துளசிதாசர்...
வணங்குகிறேன், வரம் கொடுங்கள்.
இந்த ஏழை உனக்கு என்ன கொடுக்க முடியும்?


நீங்க தான் ஆஞ்சநேயர். எனக்குத் தெரியும். எனக்கு ராமரைத் தரிசிக்க வேண்டும்.
உனக்காகப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். போய் வா!
துளசிதாசர் சென்ற பிறகு...
ஸ்ரீ ராம், ஜெயராம், ஜெய ஜெய ராம்!
மாருதி! உன் விருப்பம் அறிந்தேன். துளசி வீட்டுக்குப் போகலாம் வா!
துளசிதாசர் வீட்டு வாசலில்...
ஆடுடா ராஜா! கடலைத் தாண்டுடா ராஜா! சீதையைக் கண்டு வா ராஜா!
ஜபம் செய்ய விடாமல் என்ன கூச்சல் இது? போ! போ!
மன்னிக்கணும் சாமி, போய் வர்ரேன்!
சற்று நேரம் சென்று மாருதி கிழவர் வர...
வாங்க, வாங்க!
என்ன துளசி? ராம தரிசனம் ஆச்சா?



இல்லையே? அதுக்காகத்தான் விடாம தியானம் பண்றேன்...
யாருமே வரலை?
ஊஹூம், தியானத்துக்கு இடையூறா ஒரு க்ஷத்ரியர் தான் குரங்குகளோடு வந்தார்.
அடப்பாவமே! துளசி, அவர் தான் ராமர்!
வானரப் படையுடன் வந்தார். நானும் இருந்தேன்...
ஆ! எப்பேர்ப்பட்ட மூடன் நான்!
மதங்களிடையே ஒற்றுமையை உணர்ந்த, ராமபிரானே வந்ததைக் கூட அறியாமல் போனேனே! ஆஞ்சநேயரே, என்னை மன்னியுங்கள்.
துளசிதாசர் மனம் உருகி மீண்டும் பிரார்த்திக்க...
ராம், ராம் ராம்!
பிரபோ! துளசி சிரத்தில் கை வைத்து அருளுங்கள்.


துளசிதாசர் திவ்விய தரிசனம் பெற்றார்; பக்திப் பரவசமானார்.
இனி, உன் கண்களிலிருந்து நான் மறைந்தாலும் உன் உள்ளத்திலேயே இருப்பேன்.
துளசிதாசர் காசியில் மடம் கட்டி வாழ்ந்தார்.
யாத்திரிகர்களுக்கு உணவிடுவதும், ராமஜெபம் செய்வதுமே என் பணி.
அடியார்களின் பொருட்டு துளசிதாசர் நன்கொடைகள் பெற்று, பொருள் சேர்த்து வைத்தார்...
அரிசி இருபது மூட்டை, பருப்பு அஞ்சு மூட்டை, தங்கக் காசு நூறு... கணக்கு சரி...
ஓர் இரவு...
நல்லா தூங்கறான், சுத்தமா கொள்ளையடிக்கலாம்!
ம்... முதல்ல தங்கக் காசுகளைச் சுருட்டிக்கலாம்.
கொள்ளைக்காரர் வாசலுக்கு வர...
ஐயோ! காவல்காரன்!
உஷ்! கொல்லைப் புறமா தப்பிடலாம்!




பின்வாசலில்...
ஐயோ! இங்கேயும் காவல்காரனுங்க!
வரப்போ ஒருத்தரையும் காணுமே.
இது துளசிதாஸர் மகிமைதான். இவர் காலில் விழுவோம்!
சாமி, மன்னிச்சுடுங்க!
திருடவா வந்தீங்க? இங்கே இருப்பது எதுவும் என்னுதில்லை. எல்லாம் பக்தர்களுக்கு உரியது. நீங்களும் தேவையானதை எடுத்துட்டுப் போலாம்.
என்ன சாமி, வில்லும் கையுமா காவல்காரங்களை நிறுத்தி வைச்சுட்டு இப்படிப் பேசறீங்களே!
துளசிதாஸர் திடுக்கிட்டு...
ஆ! அது ராம-லக்ஷ்மணர்களாகத்தான் இருக்கணும். தரிசன பாக்கியம் எனக்குக் கிடைக்கலையே!
உங்களால்தான் எங்களுக்குத் தரிசனம் கிடைத்தது. இனி நாங்க இங்கேயே அடியார்களுக்குப் பணிசெய்கிறோம்.



ஒரு நாள்...
இவன் தாழ்ந்த ஜாதி. இவனோடு சேர்ந்து உண-வருந்த முடியாது!
அப்படிச் சொல்லாதீர்கள். இவர் ராம நாமம் கூறியே உயர்ந்து விட்டவர். பிறப்பில் என்ன இருக்கிறது?
அப்படின்னா, இவன் இலையில் வைத்த உணவைக் கோயில் நந்தி முன் வையுங்கள்.
அது சாப்பிட்டால் நாங்களும், இவனோடு சேர்ந்து சாப்பிடறோம்!
துளசிதாஸர் அவ்வாறே செய்ய....
நந்தி பகவானே, இவர்களுக்கு அறிவு புகட்டுங்கள்!
உயிர் பெற்று நந்தி உணவருந்தியது...
ஆ! எங்களுக்குப் புத்தி வந்தது.
அதிசயம்!
துளசி தெய்வாம்சம் பொருந்தியவர்!
துளசிதாஸரின் மகிமைகளைக் கேள்விப்பட்ட அக்பர் சக்கரவர்த்தி
என்னமோ மந்திர ஜாலமெல்லாம் பண்ணுறாராமே, இழுத்துக்கிட்டு வாங்க!



துளசி அக்பர் முன் நிற்க...
உங்க மாயாஜாலம் மூலமா ராமரை எனக்கும் காட்டுங்களேன்!
எல்லாம் அனுமன் அருள்... னிடம் ஒரு சக்தியும் கிடையாது.
ராமனைக் காட்டினாலொழிய விட முடியாது... இவனைச் சிறையில் தள்ளுங்க!
சிறையில்...
ஆஞ்சநேயா! மாருதி! நீ தான் வழி காட்டணும்! ஸ்ரீராம் ஜெயராம், ஜெயஜெயராம்!
திடுமென்று தலைநகரை ஏகப்பட்ட குரங்குகள் படையெடுக்க...
ஐயோ! குல்லா போச்சே!
நகை! நகை!
என் பட்டுச் சொக்காயைக் குரங்கு கிழிச்சிட்டது!
கடையிலிருந்த எல்லா பழங்களும் அபேஸ்! குரங்குகள் அட்டகாசம் சகிக்கலை!
என் குழந்தையையே காணோம்!
என் பண முடிப்பு போச்சே!


மக்கள் துன்பம் அக்பர் காதுக்கு எட்டியது.....
சக்கரவர்த்தி! ஏகப்பட்ட குரங்கு கள் திடீரென்று படையெடுத்துள் ளன.....
அப்போது அக்பருக்கே வந்தது ஆபத்து!
ஆ! என் மணி மகுடம்! குண்டலம்! முத்துமாலை!
மகாராஜா! அந்தப்புரப் பெண்கள் குரங்குகளைக் கண்டு பயந்து ஓடுகிறார்கள்!
அரண்மனை சமையலறையில்...
சமைத்து வைத்ததை யெல்லாம் குரங்கு கள் சாப்பிட்டு விட்டனவே!
அக்பர் சிறைக்கு வந்து...
தாஸரே! என்னைக் காப்பாற்றும்! குரங்குகள் தொல்லை தாங்க முடியலை!
சக்கரவர்த்தி! எல்லா மதங்க ளும் போதிப்பது அடிப்படையில் அன்பு மார்க்கமே! ஏற்றத்தாழ்வு இல்லை!
துளசிதாஸர் பிரார்த்தித்தார்...
ஆஞ்சநேயா! போதும் விளை யாட்டு. மக்களை மகிழச் செய்! அக்பருக்கு அருள் புரி!


குரங்குகள் வந்த வேகத்திலேயே மறைந்தன... ஒரு சமயம் உஜ்ஜயினி வணிகர்...
கண்மணி, உன் அழகுக்கும் என் செல்வத்துக்கும் ஏற்ற மணாளனைத் தேட வேண்டும்.
வணிகர் தம் மகளின் ஓவியத்தை எழுதச் செய்தார்...
இந்தப் படத்தை ஊர் ஊராகக் கொண்டு போங்கள். ஏற்ற வரனைத் தேடுங்கள்.
தூதர்கள் பல நகரங்களுக்குச் சென்று...
அடடா! என்ன அழகு! செல்வச் செழிப்பு!
இவள் தகுதிக்கு ஏற்ற வரன் இந்த ஊரில் இல்லை!
தூதர்கள் ஏமாற்றமடைந்தனர்...
வரன் கிடைக்காது போலிருக்கு. திரும்பிப் போய் எஜமானிடம் என்ன சொல்வது! கோபிப்பார்.
பாளையூரில் ஒரு வணிகர்....
உங்க எஜமானுக்கு இணையான செல்வம் என்னிடம் இருக்கு.
சரி, உங்க மகன் இவளுக்கு ஏற்ற அழகனா?


அழகன் தான்... ஆனால் பார்வையற்றவன்.
அடக் கடவுளே, இதென்ன சோதனை!
வணிகர் ஒரு யோசனை சொன்னார்.
என் மகள் நல்ல அழகி. அவளுக்கு ஆண் வேடம் போட்டு அழைத்துப் போவோம். தாலி கட்டும் சமயம் அவளை நீக்கி, என் குமாரனை மணையில் அமர்த்தி விடலாம்!
ஐயோ! ஆபத்தான காரியம் அச்சு!
அதனால்தான் ஆயிரம் பொன் உங்களுக்குத் தரத் தயாராயிருக்கிறேன்!
தூதர்கள் பணத்தாசைக்கு மயங்க, எல்லோரும் உஜ்ஜயினி வந்தனர்.
அழகான மாப்பிள்ளை! செல்வக் குடும்பம்! ஜோசியரே! முகூர்த்த நாள் சொல்லுங்க!
ஊர் அறியத் திருமணம் நடந்த சமயம், பார்வையற்ற மாப்பிள்ளையை மணையில் அமர்த்த முடியாமல் போயிற்று...
கெட்டி மேளம்! கெட்டி மேளம்!


ஒரு பெண்ணே பெண்ணுக்குத் தாலி கட்டுவதா? அப்பாவின் பேராசை என்னை இந்த கதிக்கு ஆளாக்கி விட்டதே!
மணமக்கள் தனிமையில் இருந்த போது....
என்னை நீ மன்னிக்க வேண்டும். பெரிய குற்றம் நடந்து விட்டது!
"மணமகன்" நடந்ததைக் கூற...
இதென்ன விபரீதம்!
இந்தப் பாபத்திலிருந்து என்னைக் காப்பாற்றக் கூடியவர் துளசிதாஸர் தான்...
இருவரும் துளசிதாஸரை அடைந்து...
எங்களைத் காப்பாற்றி அருளுங்கள்...
நடந்தது அறிந்து துளசிதாஸர்...
ராமா! இவர்களுடைய பெற்றோரின் பேராசை, இவர்களைப் பலி வாங்கி விட்டது. இந்த மணமகள் ஆண்மகனாகவும் விளங்க அருள்புரி!


அவ்வாறே அதிசயம் நடந்தது... மணமக்கள் மகிழ்ந்து...
போய் வருகிறோம்.
ராம பக்தியுடன், தர்மத்தை அனுசரித்து, இல்லறம் நடத்துங்கள்.
துளசிதாஸர் மேலும் பல அற்புதங்கள் நிகழ்த்தினார். ராமபக்தி பரப்பினார். துளசி ராமாயணம் எழுதினார்.
தலயாத்திரையாக கோகுலம், யமுனை, பிருந்தாவனம்... அடுத்து வட மதுரை...
பிரியதாசர் என்பவரை சந்தித்தார்
நீங்கள் அடியார்களின் சிறப்புக்களை எழுதியிருக்கிறீர்களாமே!
இதோ!
பக்தியுடன் படித்துப் பரவசமானார் துளசி. அதில் தம்மைப் பற்றிய குறிப்பு இல்லை என்பது அவருக்குக் குறையாகவே தெரியவில்லை!
ஆஹா! அற்புத நூல்!
மறுநாள் பிரியதாசர் தமது நூலை எடுத்துப் பார்க்க, அதில் துளசியின் சிறப்பு சேர்க்கப்பட்டிருந்தது!
ஆ! துளசியின் சிறப்பு மானுடர் எழுதக் கூடியது அல்ல என்று இராமரே எழுதி விட்டார்!

தண்டனை யாருக்கு?

சேத்தியாத் தோப்பிலிருந்து புறப்பட இருந்தது அந்தப் பேருந்து. அதனுள்ளே, பெரும் கூட்டமாய் நெருக்கியடித்துக் கொண்டு, மூச்சு விடவும் திணறிக் கொண்டிருந்தனர் பயணிகள்.

நெருப்பை அள்ளி வீசுகிற மாதிரி, கோடை வெயிலின் தகிப்பு! ஒவ்வொருவரின் உடையும், வியர்வை வெள்ளத்தில் முற்றிலுமாக நனைந்து போயிருந்தது.

''புழுக்கம் தாங்கவில்லை... உயிர் போகுது! வண்டியைக் கிளப்புங்க அப்பா!'' - பயணிகளுள் ஒருவர் ஆத்திரத்துடன் சீறினார்.

டிரைவரோ, காது கேளாதவர் மாதிரி அமைதியாக இருந்தார்.

மேலும் ஐந்து நிமிடம் கழிந்தது. இருக்கிற இண்டு இடுக்குகளில் மேலும் சிலரைப் புளி போலத் திணித்த பிறகுதான் கண்டக்டர் 'ரைட்' சொல்லி இரட்டை விசில் அடித்தார்.

பெருமூச்சு விட்டுக் கொண்டே, பேருந்து புறப்பட்டது.

''டி க் கெ ட் வாங்காதவர்கள் உடனே கேட்டு வாங்கி விடுங்கள். இறங்கும் போது கையில் டிக்கெட் இல்லையென்றால், அபராதம் கட்ட வேண்டி வரும்!'' - பயணிகளை எச்சரித்தபடி, ஒவ்வொருவருக்கும் சீட்டுக் கொடுத்து விட்டு, முன்பக்கம் வரப் பார்த்தார் கண்டக்டர்.

அவர் நினைத்தபடி பேருந்துக்குள் நடப்பது என்பது அவ்வளவு சுலபமாகத் தெரியவில்லை. நெரிசல் என்றால் அப்படி ஒரு நெரிசல்! இரண்டு பக்க இருக்கைகளுடன், இடைவெளிகளும் நிரம்பி வழிந்தன. நின்றிருந்த பயணிகளுள் பெரும்பாலோர், ஒரு கால் மட்டுமே கீழே பதிந்திருக்க, மறு காலை ஊன்ற வழியில்லாமல், மேலே உள்ள கம்பியைப் பிடித்துக் கொண்டு தொங்கினர். பெண்கள், குழந்தைகள் நிலைமையோ மகா பரிதாபம்! பயணிகளின் கூச்சலும் கத்தலும் வேறு மண்டையைப் பிளக்கிற மாதிரி ஒலித்தன.

அத்தனை பேரையும் விலக்கிக் கொண்டு நடத்துநர் முன்னேறி விட்டாரானால், அதை விட மகத்தான சாதனை இருக்க முடியாது! அவரே இப்போது மலைத்துப் போனார். வண்டியைக் கிளப்புவதற்கு முன்பே, ஒவ்வொருவராக டிக்கெட் கொடுத்து ஏற்றியிருக்கலாம். ஆனால், இப்போது அதை நினைத்துப் பயனில்லை. பயணிகள் அனைவரும் சீட்டு வாங்கி முடிப்பதற்குள், சிதம்பரமே வந்து விடும் போலிருந்தது!

''பஸ்ஸை மெதுவாகவே நகர்த்தப்பா!'' - ஓட்டுநருக்கு அறிவுரை கூறி விட்டுத் தன் பணியில் ஈடுபட்டார் நடத்துநர்.

முன்புறம் ஓட்டுநருக்கு அருகே இடிபாடுகளுக்கிடையில் நான் நின்றிருந்தேன். நடத்துநர், யார் சீட்டு வாங்கினார்கள், யார் வாங்கவில்லை என்று பார்த்து, ஒவ்வொரு நிறுத்தத்திலும் பயணிகளை இறக்குவது என்பது, நிச்சயம் நடக்காத காரியம்!

வண்டி, பாழ்வாய்க்கால் பாலத்தைத் தாண்டி நின்றது. அங்கேயும் ஒரு கூட்டம், அடித்துப் பிடித்துக் கொண்டு

புதுவை கலைச்செழியன்

ஏறி, இரண்டு ஃபுட் போர்டுகளையும் அடைத்தபடி நின்றது.

கண்டக்டருக்கு விழி பிதுங்கியது! வசூல் ஆசையால் வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டது, இப்போதுதான் அவருக்குப் புரிந்தது.

''நடுவில் எங்கேயும் நிறுத்த வேண்டாம்! ஒரேயடியாய் ஓரத்தூர் போய் நின்றால் போதும்!'' - டிரைவருக்கு நிபந்தனை விதித்தார் கண்டக்டர்.

''அது எப்படிப்பா இடையில் நிறுத்தாமல் போவது? சாத்தமங்கலம், பரதூர் சாவடிகாரங்களெல்லாம் என்ன ஆவது?'' - பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டார், இடையில் இறங்க வேண்டிய பயணிகளுள் ஒருவர்.

நடத்துநர், 'கப்சிப்' என்று வாயைப் பொத்திக் கொண்டு, கடமையே கண் ஆயினார். மொத்தப் பயணிகளில் பத்தில் ஒரு பங்கினர்க்குக் கூட இன்னும் டிக்கெட் கொடுத்து முடியவில்லை. பேருந்து நாலு கிலோ மீட்டர் வரை வந்து விட்டது.

''ஐயா, எனக்கு நடராஜபுரம் ஒரு சீட்டுக் குடுங்க!''- நாட்டுப்புறத்து ஆளாகக் காட்சியளித்த ஒருவர் பணத்தை நீட்டினார்.

நடத்துநருக்கு வந்ததே கோபம்! ''என்னய்யா, சாவு கிராக்கி! நடராஜபுரம் இங்கே எங்கய்யா இருக்கு? ஒழுங்கான ஊர் பேரைச் சொல்லு!''

மறுபடியும், ''நடராஜபுரம்தாங்க!'' என்றார் பயணி தயங்கியபடி.

''அப்படி ஒரு ஊரும் இந்தத் தடத்தில் கிடையாது!''- விசிலடித்து வண்டியை 'பிரேக்' போட வைத்த நடத்துநர், ''மரியாதையா இறங்கய்யா கீழே!'' என்றார் கடுங்குரலில்.

அந்த ஆள் திருதிருவென்று விழிக்கவே, நடத்துநரின் சீற்றம் அணை கடந்த வெள்ளமாயிற்று. அவரை உடும்புப்பிடியாய்ப் பற்றி இழுத்து, பின்புற வாயில் வழியாக வெளியில் நெட்டித் தள்ளினார்.

தாறுமாறாகக் கீழே விழுந்த அந்த ஆள், ''பாளையம்னு முடியுமே அந்த ஊர்தாங்க ஐயா!'' என்றார் பரிதாபமாக.

அவர் சொன்ன ஊர், துலுக்கப் பாளையம், ஆனால், வடஹரிராஜபுரம் என்பதுதான் அரசுப் பதிவேடுகளில் உள்ள பெயர். சாலையில் உள்ள பெயர்ப் பலகையும் அந்தப் பெயரைத்தான் தாங்கி நின்றது. இந்த விவரமெல்லாம் நடத்துநர்க்குத் தெரியும். ஆனால், அவர் பேருந்தை நிறுத்த விரும்பாத சில்லறை ஊர்களுள் அதுவும் ஒன்று.

மற்ற பயணிகளும், ஏனோ நடந்த சம்பவம் குறித்து கண்டக்டரிடம் சண்டைக்குப் போகவில்லை. கண்டும் காணாத மாதிரி இருந்து விட்டனர். என்னுடைய படிப்பும், நாகரிகமும் என் வாயையும் கட்டிப் போட்டு விட்டன! ஆனால், நடத்துநர் மீது எனக்கு வந்த ஆத்திரத்திற்கு மட்டும் குறைவில்லை.

'திமிர் பிடித்த ராஸ்கல்! அப்பாவி என்பதற்காக ஒரு கிராமப்புறத்து ஆளை நீ இப்படிக் கேவலப்படுத்துவதா? உனக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்' என்று கருவிக் கொண்டது என் மனம்.

கண்டக்டர் பாதிக் கூட்டத்தைக் கடப்பதற்குள், எனது ஊர் வந்து விட்டது. டிக்கெட்டே வாங்காமலிருந்த நான், சந்தடி சாக்கில் அங்கே இறங்கிக் கொண்டேன், பெரிய தோரணையுடன்! 'அவர் செய்த தவறுக்குச் சரியான முறையில் தண்டனை கொடுத்து விட்டேன்' என்ற குரூரமான திருப்தி எனக்கு!

மறுநாள் -

நான் வேறு மார்க்கத்தில் பயணம் மேற்கொள்ள நேர்ந்தது. வடலூரிலிருந்து பண்ருட்டிக்குச் செல்ல பஸ்

''பையன் ஏன் அழுறான்?''

''அவனுக்கு கத்தரிக்காய், முருங்கைக்காய் சாம்பார் வேண்டாமாம். ஆப்ரிக்கா(ய்), அமெரிக்கா(ய்) சாம்பார் தான் வேணுமாம்!''

- கே. சோமசேகர்





ஏறிய நான், இருக்கையில் இடம் கிடைக்காததால், அன்றும் நின்று கொண்டே பயணம் சென்றேன்.

நடத்துநர் டிக்கெட் போட்டுக் கொண்டு வந்தார். நான் சட்டைப் பைக்குள் கைவிட்டு ஒரு பத்து ரூபாய்த் தாளை வெளியில் எடுத்தேன்.

அதே சமயம், பேருந்து ஒரு பள்ளத்தில் இறங்கி ஏறி, வளைவு ஒன்றில் திரும்பி, பயங்கரமாகக் குலுங்கியது. அதனால் ஏற்பட்ட தள்ளாட்டத்தில் என் பிடி தளர்ந்து போக, ரூபாய் நோட்டு காற்றிலடித்துக் கொண்டு வெளியே பறந்தது!

பேருந்து அதன் போக்கில் விரைந்து கொண்டிருந்தது. வண்டியை நிறுத்தச் சொல்லவும் வாய் வராமல் பிரமை பிடித்தவன் போல நான் நின்றேன்! என் ஏமாற்றம், நல்ல வேளையாக யார் கண்ணிலும் படாமல் போயிற்று! மறுபடியும் பணம் எடுத்து டிக்கெட் வாங்கிக் கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை எனக்கு!

நேற்று கண்டக்டர் ஒரு பயணியிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார் என்பதற்காக, டிக்கெட் வாங்காமல், கேவலம் ஒரு ரூபாய்க்காக அவரை நான் ஏமாற்றினேன் - அவரது தவறுக்குத் தண்டனை கொடுப்பதாக நினைத்து.


இன்று, அதைப் போல் பத்து மடங்கு தொகையை இழந்து நிற்கிறேன். நான் செய்த தவறுக்கு, ஆண்டவன் எப்படித் தண்டித்து விட்டான் என்னை!

உலகில் ஒருவன் தீமை செய்தால், அதைத் துணிவுடன் சுட்டிக்காட்டி அவரைத் திருத்த முயன்றிருக்கலாம். அப்பொழுது கோழையைப் போல் பேசாமல் இருந்து விட்டு, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர் அறியா வண்ணம் அவரை ஏமாற்றி, அந்த ஏமாற்றம்தான் அவருக்குத் தண்டனை என்று மனநிறைவு கொண்டேன். அவருக்குத் தண்டனை என்று நான் அல்லவா ஏமாறுக்காரனாகி விட்டிருக்கிறேன்! அவரைத் தண்டிக்க நான் யார்? நல்லது, கெட்டதைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கும் கடவுளின் வேலை அல்லவா அது!

உண்மையைப் புரிந்து கொண்ட நான், பணம் போனதற்காகக் கவலைப்படுவதை விட்டு, பட்ட கடனை அடைத்தவன் போல, நிம்மதியுடன் பயணத்தைத் தொடர்ந்தேன்.



ஆமையும் உங்க தாத்தாவும் ஒன்னா!
ரெண்டு பேருக்குமே பல் கிடையாதே...!
?!?
செவல்குளம் 'ஆச்சா'


கொசுக்களெல்லாம் ஏன் பேரணி நடத்துது?
பாதாள சாக்கடை திட்டத்தை கைவிட்டு, எல்லா சாக்கடையையும் திறந்தவெளி சாக்கடையாக்கக் கோரிக்கையாம்!
குடந்தை, எஸ்ராம் பிரபு


அடிக்கடி அஜீரணம் வருதே, ஏன்?
சாப்பிட்டதும் ஜீரணிக்க முடியாத கதைகளைப் படிக்கிறதை நிறுத்திப் பாருங்க....!
சீர்காழி வி. ரேவதி



நேத்து நெருக்கு நேராக ஒரு சிங்கத்தை சந்திச்சேன்...
அப்புறம்?
நல்ல வேளை, அது கூண்டுக்குள்ளார இருந்திச்சு...!
கே. நடராஜன், பரங்கிப் பேட்டை

சிரிப்...


அண்ணே! உங்க டான்ஸ் புரோகிராம் வெளியூர்லயா? எங்கே?
மயிலாடுதுறையில
கடலூர் கன்னியப்பன்

மலைக்கோட்டை மர்மம்

வீரா.வசந்தன்



10. எதிர்பாராத உதவி

அந்த மலைப் பிரதேசத்தில் முன்னிரவு நேரத்தில் நிலவின் மெல்லிய ஒளி எங்கும் ஒரே சீராகப் பரவியிருந்தது. பாஞ்சாவின் மலைத் தோட்டத்தை விட்டு விலகி, சற்றுத் தொலைவில், மலைச் சரிவில் புதிதாகப் பல குடிசைகள் வரிசை வரிசையாக முளைத்திருந்தன. விலங்குகள் மட்டுமே இதுவரை வாழ்ந்து வந்த இந்தப் பிரதேசத்தில்தான் சந்திரகிரி மக்களைப் பாஞ்சா குடியேற்றியிருந்தான்.

தோட்டத்தினருகே இருந்த பாஞ்சாவின் குடிலில் விளக்கு எரிந்து கொண்டிருந்தாலும் அங்கு ஆட்கள் இருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

குடிலின் பின் பகுதியில் கைகளிரண்டும் பின்புறம் சேர்த்துக் கட்டப்பட்ட நிலையில் தரையில் கிடந்தான் மணிமாறன். அருகே ஏராளமான மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இரும்புக் கொக்கிள் மாட்டப்பட்ட வடக்கயிறுகளும், மண் வெட்டிகளும், கடப்பாரைகளும் மற்றொரு புறம் குவிந்து கிடந்தன.

தன் தகப்பனார் உயிரோடிருப்பதாக நாகராஜன் சொன்னதை நம்பி, பாஞ்சாவிடம் இப்படி மாட்டிக் கொண்டோமே என்று கட்டுண்ட நிலையில் கிடந்த மணிமாறனின் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

மூன்று நாட்களாகச் சரியாக உணவு இல்லாமல் சோர்ந்து, அரை மயக்கத்தில் கிடந்த அவன், தன்னருகே யாரோ வந்து நிற்பதை உணர்ந்து மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்தான்.

இடுப்பில் கைகளை ஊன்றியவாறு அலட்சியச் சிரிப்புடன் நாகராஜன் நின்று கொண்டிருந்தான்.

மணிமாறனுக்குக் கண்கள் பஞ்சடையத் தொடங்கி நாக்கு தாகத்தால் வரண்டது. நாகராஜனைப் பார்த்துத் தண்ணீர் தரும்படி வேண்டினான்.

அவனைத் தூக்கி உட்கார வைத்த நாகராஜன், மூலையிலிருந்த மண் பானையிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து அவனுக்குக் கொடுத்தவாறு, ''டேய் உன்னுடைய பிடிவாதத்தை இனிமேலாவது இத்தோட விட்டுரு..... எங்களோடயே தோட்டத்துல நீயும் வேலை செய்யக் கத்துக்க... பாஞ்சா பழசையெல்லாம் மறந்துருவாரு'' என்றான் ஒரு விதப் பரிவுடன்.

சோர்வுடன் அவனைப் பார்த்த மணிமாறன், ''நானும் எங்க அப்பாவும் உங்களுக்கு என்ன தீங்கு செய்தோம் சொல்லு?'' என்று கண்கள் கலங்கக் கேட்டான்.

''ஒருவேளை கஞ்சி கூடக் குடிக்க வழியில்லாம இருந்த நமக்கு, இப்ப மூணு வேளை அரிசிச் சோறு கிடைக்கறது யாரால...? அந்த நன்றி கூட இல்லாம, பாஞ்சாவைக் குறை சொன்னா எப்படிடா?'' என்று அவன் தோளை உலுக்கினான் நகாராஜன்.

மணிமாறன் அவனைப் பார்த்து, ''பலியாகப் போகிற ஆட்டுக்குக் கூடத்தான் வயிறு நிறையத் தீனி போடுவாங்க... அதெல்லாம் எத்தனை நாளைக்கு? அது போலத்தான் நம்ம ஜனங்களோட கதியும், இன்த நீ மொதல்ல உணர்ந்துக்க'' என்றான்.

அதைக் கேட்ட நாகராஜனின் முகம் கோபத்தால் சிவந்தது. வார்த்தைகள் நெருப்புப் பொறிகளாக அவன் வாயிலிருந்து சிதறின. ''நீ திருந்த மாட்டேடா..! பாஞ்சாவோட கையால உனக்குச் சாவுன்னு இருக்கும் போது எப்படித் திருந்துவே..? இன்னும் ஒரு செய்தியை நல்லாக் கேட்டுக்க... வெள்ளியாற்றுல மூழ்கி செத்துப் போனதா எல்லோரும் நம்பிக்கிட்டிருக்காங்களே உங்க அப்பனைப் பற்றி... அந்த ஆள் உயிரோட மலைக்காட்டில அலையறதா ஒரு சந்தேகம் இருக்கு... உன்னை இங்க பிடிச்சுக் கட்டி வச்சிருக்கறதே அதுக்குத்தான்... உண்மையில நாங்க சந்தேகப்படற ஆள் உங்க அப்பன்னா, நிச்சயமா உன்னைத் தேடிக்கிட்டு இங்க வருவான்... ஒண்ணு, பாஞ்சாவோட நீங்க ரெண்டு பேரும் ஒத்துப் போகணும்.... இல்லே, இத்தோட தொலைஞ்சீங்க...'' என்று பல்லை 'நறநற'வென்று கடித்தான். அவன் கண்கள் கோபத்தால் சிவந்து இரத்தம் போல் காட்சியளித்தன.

மணிமாறன் அமைதியாக இருந்தான். பிறகு ''நீ சொல்றதை என்னால நம்ப முடியல்ல... ஏன்னா, அது எங்க அப்பான்னா இதுவரை என்னைப் பார்க்க வராம இருக்க மாட்டார்... அப்படியே அவர் உயிரோட இருந்தா என்ன வந்தாலும் உங்ககூட சேரவே மாட்டார்... என்னையும் எவ்வளவு சித்திரவதை செய்தாலும் நானும் உங்க கூடச் சேர மாட்டேன்'' என்றான்.

நாகராஜன் ஏதோ சொல்வதற்கு வாயெடுத்தான். அதற்குள் குடிலை நோக்கிப் பலர் வேகமாக வருவது தெரிந்தது. ''உன்கிட்ட அப்புறம் பேசிக்கறேண்டா'' என்றவன் விரைந்து வெளியே சென்றான்.

வந்தவர்களில் ஒருவன் நாகராஜனிடம் பரபரப்பாக, ''ரயில் வர்ற நேரமாச்சு... இங்க என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க?'' என்று கேட்டான்.

''கயிற்றுல கொக்கியெல்லாம் சரியா மாட்டியிருக்கான்னு பார்த்துட்டிருக்கேன்'' என்று நாகராஜன் சொல்லி முடிப்பதற்குள் முப்பது நாற்பது பேர் 'திமுதிமு'வென்று குடிலுக்குள் நுழைந்தனர்.

அவர்களோடு வந்த நாகராஜனின் தந்தை வீரமாணிக்கம், ''உம், சீக்கிரம். மூட்டைகளை எடுத்துட்டுப் புறப்படுங்க'' என்று கட்டளையிடும் குரலில் சொன்னான்.

அவர்கள் வேகமாகச் சென்று அங்கு அடுக்கியிருந்த மூட்டைகளை ஆளுக்கொன்றாகத் தூக்கிக் கொண்டனர். சிலர் மூலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த கயிற்றுச் சுருள்களை எடுத்துக் கொண்டனர்.


நாகராஜனும் கொக்கி மாட்டப்பட்ட ஒரு கயிற்றுச் சுருளை எடுத்துக் கொள்ள, எல்லோரும் அவசரமாக

''பாம்புக் கடிக்கு என்ன செய்யணும்?''

''பாம்புகிட்டே கையை நீட்டணும்!''

– கே. சோமசேகர்





அங்கிருந்து வெளியேறினர்.

மூட்டைகளையும், கயிற்றுச் சுருள் களையும் சுமந்து கொண்டு அவர்கள், நிலவின் வெளிச்சத்தில் பாதை கண்டு பிடித்து நடந்து கொண்டிருந்தார்கள். எதிரெதிரே குறுக்கிட்டு நின்ற பாறை களைச் சுற்றிக் கொண்டும், புதர்களை விலக்கிக் கொண்டும் நடந்தார்கள். சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக நடந்த பின், மலைச்சரிவில் இறங்க ஆரம்பித்தனர். வெகு தொலை வில் பள்ளத்தாக்கை இணைத்து நீண்ட ரயில் பாலம் ஒன்று தென்பட்டது.

பெரும் மேடு பள்ளமாகக் காணப் பட்ட அந்த மலைப் பகுதியில், சில இடங்களில் மலையைக் குடைந்தும், பள்ளத்தாக்குகளைப் பாலத்தால் இணைத்தும் ரயில் பாதை அமைக்கப் பட்டிருந்தது.

அந்தப் பாலத்தின் அடியில் வந்து அவர்கள் நிற்க, வீரமாணிக்கம் உரத்த குரலில், ''ரயில் வரும் நேரமாச்சு... சீக்கிரம் மூட்டைகளைக் கட்டித் தயாரா இருங்க'' என்று கூவினான்.

எல்லோரும் பரபரப்புடன் கயிற் றுச் சுருள்களைப் பிரித்து அதன் ஒரு புறத்தில் மூட்டைகளை இறுகக் கட்டி னர். மறுபுறம் மாட்டப்பட்டிருந்த இரும்புக் கொக்கிகளைக் கைகளில் பிடித்துக் கொண்டு வரிசையாக நின் றார்கள்.

வெகு தொலைவுக்கு அப்பால் ரயிலின், ''ஹொய்ங்'' என்ற பிளிறல் ஓசை கேட்டது. இந்த நேரத்தில் வரு வது ஒரு சரக்கு ரயில்தான் என்பது அவர்களுக்குத் தெரியும். அபாயகர மான வளைவுகளோடு காணப்படும் இந்த இடத்தை ரயில் மிகவும் மெது வாகவே கடந்து செல்லும். பாலத்தின் அடியில் தயாராக நிற்கும் இவர்கள், பாலத்தின் மேல் ரயில் செல்லுகையில் நிலக்கரி, இரும்பு மற்றும் மரங்களை ஏற்றிச் செல்லும் திறந்த பெட்டி வண்டி கள் வரும் போது, கையிலிருக்கும் இரும்புக் கொக்கிகளை, கயிற்றைச் சுழற்றிக் குறி பார்த்து வீசுவார்கள்.



கொக்கி சென்று வண்டியின் ஓரங்களில் கவ்விக் கொள்ள கயிற்றைப் பிடித்துக் கொண்டு சரசரவென்று ஏறி வண்டியினுள் குதித்து, கயிற்றை மேலே இழுத்து அதன் மறு முனையில் கட்டியிருக்கும் மூட்டைகளைச் சுலபமாக வண்டியினுள் ஏற்றி விடுவார்கள். பாலத்தை வண்டிகள் கடக்குமுன் மின்னல் வேகத்தில் இத்தனையையும் செய்து முடிக்க வேண்டும்.

ஒரு வண்டிக்கு ஆறு பேர் வீதம் பாலத்தின் இருபுறமும் மூவர் மூவராகக் காத்திருந்தனர். ரயில் வெகு அருகில் வந்து விட்ட ஓசை கேட்கலா



''எங்க வீட்டு ''டவல' எலி தின்னுடுச்சு.''

''எப்படி?''

''அதுதான் தேங்காப்பூ டவலாச்சே!''

- ஜி. வெங்கடேசன்

யிற்று. வளைவில் திரும்பி அந்த மலைப்பிரதேசத்தையே ஒரு கணம் வெளிச்சமாக்கிய ரயில், தடதட வென்று பேரிரைச்சலோடு பாலத்தில் நுழைந்தது.

முதலில் என்ஜினும், அதைத் தொடர்ந்து மூடிய சில பெட்டிகளும் கடந்து செல்லக் காத்திருந்தவர்கள், அடுத்தாற்போலத் திறந்த பெட்டி ஒன்று வர, அதை நோக்கிக் கொக்கிகளைக் குறிபார்த்து வீசியெறிந்தனர். சுழன்று மேல் நோக்கிச் சென்ற இரும்புக் கொக்கிகள் சரியாக வண்டியின் விளிம்பில் கவ்விக் கொண்டன. கண் இமைக்கும் நேரத்தில் சரசரவென்று கயிற்றைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வண்டிக்குள் குதித்து கயிற்றை மேலே இழுக்கலாயினர்.

அதைத் தொடர்ந்து அடுத்த வண்டி... மேலும் ஒன்று... இன்னொன்று என்று வரிசையாக திறந்த வண்டிகள் வர வர அவர்கள் லாவகமாகக் கொக்கிகளை வீசலானார்கள்.

கடைசியில் எஞ்சி இருந்தவர்கள் நாகராஜனும், இன்னொருவனும் மட்டுமே. ஹோவென்று பேரிரைச்சலுடன் இரும்புச் சக்கரங்கள் தண்டவாளத்தில் உராய, பாலம் அதிர்ந்து நடுங்க இரயில் நகர்ந்து கொண்டிருந்தது. வண்டித் தொடரில் அடுத்தபடியாக மூடிய வாகனங்களை இணைத்திருந்ததால் அவர்கள் மீண்டும் திறந்த வாகனம் வரக் காத்திருந்தனர். நாகராஜன் பாலத்தின் ஒருபுறமும், மற்றொருவன் மறுபுறமுமாக நின்றனர்.

இடையில் திறந்த வாகனம் ஒன்று வருவதைப் பார்த்தவர்கள், கையிலிருந்த கயிற்றைத் தலைக்கு மேல் வேகமாகச் சுழற்றி வீசினர். கொக்கிகள் சென்று, 'கிளங், கிளங்' என்று வண்டியில் மாட்டிக் கொள்ள விறுவிறுவென்று கயிற்றைப் பிடித்துத் தொங்கி மேலே ஏறலாயினர்.

நாகராஜன் எறிந்த கொக்கி வண்டியின் விளிம்பில் சரியாக மாட்டாமல், எதிலோ சிக்கி இருந்தது. இதை அறியாத அவன் கயிற்றைப் பிடித்துக் கொண்டு மேலே மேலே தாவினான். வண்டியினுள் அவன் குதிக்க இருந்த போது சரியாக மாட்டாத அந்தக் கொக்கி, கழன்று கொண்டது. மறுகணம் பாலத்தின் மேலிருந்து, கயிற்றோடு அந்தரத்தில் பறந்து, சுருண்டு, புரண்டு தலைகீழாகக் கீழ் நோக்கி விழுந்தான் அவன். 'ஆ'வென்று அவன் எழுப்பிய ஓலம் இரயிலின் இரைச்சலில் கேட்காமலேயே போயிற்று.

மறுபுறத்தில் நின்று கொக்கி வீசியவன் இதைக் கவனிக்கவேயில்லை. அவன் வண்டிக்குள் குதித்து விட்டுக் கயிற்றை இழுத்து மூட்டையை மேலேற்றினான். அதன் பிறகே தன்

னோடு நாகராஜன் உள்ளே வராததைக் கவனித்தான், அடுத்த வண்டியில் தொற்றிக் கொள்வான் என் று நினைத்துக் கொண்டான்.

அந்த சமூக விரோதிகளைச் சுமந்து கொண்டு , ரயில் , பாலத்தைக் கடந்து விரைந்தது. அதன் 'தடக்,தடக்' என்ற ஓசையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து மெலிந்து போயிற்று.

இந்த மலைப் பிரதேசத்தைக் கடந்த பின், சுமார் பதினைந்து கிலோ மீட்டர்களுக்கு அப்பால் அடர்ந்த வனப்பகுதி அமைந்திருந்தது. அதன் வழியாகத்தான் ரயில் கடந்து செல்லும். யாரும் அண்ட முடியாத அந்தக் காட்டுக்குள் பாஞ்சா தன் ஆட்களோடு லாரியில் காத்திருப்பான். ரயில் அந்த இடத்திற்கு வரும் போது அவர்கள் மூட்டைகளைக் கீழே உருட்டி விட்டுத் தாங்களும் குதித்து விடுவார்கள்.

இதுதான் அவர்கள் மூட்டைகளைக் கடத்தும் வழி. இதைத்தான் அந்தத் தாடிக்காரப் பெரியவர் மலைக் கோட்டை முனீஸ்வரன் கோயிலில் ஆனந்திடம் கூறினார். அவன் அதைத் தன் தந்தைக்குத் தெரிவித்து விட்டதையும், அவர் காவல் துறைக்குப் புகார் செய்து விட்டதையும், இன்று அந்த வனப்பகுதி முழுவதையும் சூழ்ந்து கொண்டு காவல் துறையினர் அந்த ரயிலுக்காகக் காத்திருப்பதையும் அறியாமல் அவர்கள் தங்கள் வழக்கமான பணிகளைத் தொடர்ந்தனர்.

அதே நேரம், மலை மேல் பாஞ்சாவால் குடியேற்றப்பட்ட சந்திரகிரி மக்கள், பெரும் குழப்பமுற்றவர்களாய்த் தூக்கத்தையும் மறந்து ஆங்காங்கே கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். பெண்களும், குழந்தைகளுமாக இருந்த அவர்கள் மனதில் இந்த மலையுச்சியில் இனி என்ன அவதிப்பட வேண்டுமோ என்ற அச்சம் நிறைந்திருந்தது.

பாஞ்சா யார் என்றோ, எங்கிருந்து வருகிறான் என்றோ அவர்கள் யாருக்கும் தெரியாது. திடீரென்று தன் ஆட்களுடன் வந்து பணத்தைக் கொடுத்து விட்டுத் தன் தோட்டத்தையும் மேற்பார்வையிட்டு விட்டு மாயமாய் மறைந்து போகும் அவனை, முழுக்க நம்பி வந்தது அறிவற்ற செயலாகவே இப்போது அவர்களுக்குத் தோன்றியது. ஆனாலும், அவனைப் பகைத்துக் கொள்ளும் சக்தி அந்த அப்பாவி ஜனங்களிடம் இல்லை. தங்கள் தேவைகளுக்காக அவனிடமிருந்து அவர்கள் ஏராளமான பணத்தைக் கடனாகப் பெற்றிருந்தனர். இப்போது அரசாங்கத்தின் மூலம் உதவி கிடைக்க உள்ளதையும் விட்டு விட்டு இப்படி அடிமைப்பட்டுக்கிடப்பதை எண்ணி மனம் கலங்குவதைத் தவிர வேறெதுவும் அவர்களால் செய்ய முடியவில்லை.

சற்று விலகி நின்ற ஒரு பெரிய மரத்தினடியில் ரங்கனும், வேம்புவும் உட்கார்ந்திருந்தனர். தங்கள் படிப்பையும் இழந்து, பழகிய சூழ்நிலையையும் விட்டு இப்படி யாருமில்லாத இடத்தில் அடிமை வாழ்வு வாழ நேரிட்டதை எண்ணி இருவரும் மனம் வெதும்பினர். மணிமாறனை வேறு பாஞ்சா தூக்கிக் கொண்டு வந்து விட்டதைக் கேள்விப்பட்டபோது, இனி பாஞ்சாவிடமிருந்து யாரும் தப்ப முடியாது என்றே அவர்கள் நினைத்தனர்.

வேம்பு ரங்கனின் காதில் மெதுவாக, ''மூணு நாளா மணிமாறன் உண

''காலையில் எழுந்ததும் என்ன சாப்பிடுவே?''

''டுத்பேஸ்ட்...''

- ராஜி ராதா



வில்லாம அரைப் பட்டினியா கிடக்கிறானாம். பாவம், எப்படியாவது இந்தச் சாப்பாட்டை அவனுக்குக் கொடுத்திரணும்'' என்று தான் மண் சட்டியில் எடுத்து வந்த சாதத்தைக் காட்டினான்.

ரங்கன் அவநம்பிக்கையுடன், ''காவலுக்கு ஆள் இருந்தா என்னடா பண்றது?'' என்று கேட்டான்.


''இருக்கட்டுமே. அந்த ஆள்கிட்டேயே கொடுத்து, மணிமாறனுக்குக் கொடுக்கும்படி கேட்கலாம்.... அந்த அளவுக்கு இரக்கம் இல்லாத ஆளாவா இருப்பாரு?'' என்று வேம்பு சொன்னது ரங்கனுக்கும் சரியென்றே பட்டது.

இருவரும் பிறர் அறியாதவாறு அந்த மரத்தடியிலிருந்து மெதுவாக நழுவி, புதர்களில் மறைந்தவாறு பாஞ்சாவின் குடிலை நோக்கிச் சென்றனர். குடிலை அடைந்த இருவரும் மறைந்து நின்று நோக்க, முன் பகுதியில் ஒரு மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் அருகில் ஒருவன் சுவரோடு சாய்ந்து குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனைத்தான் காவலுக்கு வைத்து விட்டு அவர்கள் போயிருக்க வேண்டும்.

இருவரும், பூனை போல அடி வைத்து குடிலினுள் நுழைந்து, பின் பகுதியை அடைந்தனர். விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் மணிமாறன் கைகள் கட்டப்பட்ட நிலையில் பசி மயக்கத்தில் சோர்ந்து உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவனது பரிதாபமான நிலையைப் பார்த்து இருவருக்கும் மனம் கலங்கியது. ரங்கன் மெதுவாகச் சென்று அவனைத் தொட்டு எழுப்பினான். திடுக்கிட்டு எழுந்த மணிமாறன், அவர்கள் இருவரையும் பார்த்து விழித்தவனாய் உட்கார முயன்றான்.

பாய்ந்து சென்ற ரங்கன் பரபரவென்று மணிமாறனின் கைக் கட்டுகளை அவிழ்த்தெறிந்து விட்டு, ''மணிமாறா, சீக்கிரமா ஓடிப் போ'' என்று அவனை எழுப்பி நிறுத்தினான்.

எதிர்பாராமல் அவர்களை அங்கு சந்தித்த வியப்பிலிருந்து விடுபடாத



காவல் காக்கும் பெருச்சாளி!

★ பெருச்சாளி வகையைச் சேர்ந்த மர்மாட்கள் என்னும் பெருச்சாளிகள் மொத்தமாக இரைத் தேட வெளியே கூட்டமாக வரும் போது அதில் ஒன்று மட்டும் காவல் காக்கிறது.

தம்மை ஏதாவது மிருகமோ அல்லது பறவையோ தாக்க வருவதைக் கண்டால் காவல் காக்கும் மர்மாட் உரக்கக் கத்தும். இதன் கத்தலைக் கேட்டதும் ஏதோ ஆபத்து என்று எண்ணி எல்லா மர்மாட்களும் வளைக்குள் ஓடி மறைந்து கொள்ளும். ஆபத்து விலகியதும் எல்லாம் வெளியே வந்து விடும்.

- ஆறுபாதி புகழேந்தி,
மயிலாடுதுறை.



விடா.. முயற்சி

★ தாமஸ் ஆல்வா எடிஸன் 'ஸ்டோரேஜ் பாட்டரியைக்' கண்டுபிடித்தார் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால், அதைக் கண்டுபிடிக்க அவர் எத்தனை சோதனைகள் செய்தார் என்று உங்களுக்குத் தெரியுமா? பத்தாயிரம் சோதனைகள். எத்தனை ஆண்டுகள் ஆயின என்று தெரியுமா? ஒன்பது ஆண்டுகள். இதுவல்லவோ விடா முயற்சி என்கிறீர்களா?

- கே.எல். குமணன்,
கல்லிடைக்குறிச்சி.

அதிக தூரமான விமானரூட்



★ லாஸ் ஏஞ்சல்ஸ் - சிட்னி விமான ரூட்தான் உலகிலேயே மிக அதிக தூரமான விமான ரூட். இவற்றிற்கிடையேயான தூரம் எவ்வளவு தெரியுமா? 7495 மைல்கள். வேறெந்த விமான சர்வீசும் இவ்வளவு தொலைவு பறப்பதில்லை!

- சி. அருள்மணி, மொரப்பூர்.

மணிமாறன், ''நீங்க ரெண்டு பேரும் எப்படி இங்க வந்தீங்க?'' என்று கேட்டான்.

இருவரும் அவனை ஏக்கத்துடன் பார்த்துக் கண்கலங்கினர். ரங்கன் கலங்கிய குரலில், ''மணிமாறா இனி எங்க வாழ்க்கை இந்த மலை மேலத்தான்... பாஞ்சா நம்ம கிராமத்து ஜனங்க எல்லோரையும் இங்க கொண்டு வந்து குடியேத்திட்டான்... இனி எங்களுக்கு மீட்சி இல்லை. நீயாவது போய் நல்லாயிரு'' என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டுத் திடுக்கிட்ட மணிமாறன், ''என்னது, ஜனங்க அத்தனை பேரையுமா இங்க கொண்டு வந்துட்டான்....! இதென்ன அக்கிரமம்?'' என்று குமுறினான்.

அவன் வாயைப் பொத்திய வேம்பு, ''பேச இனி நேரமில்ல.காவல்காரன் தூங்கறான். இந்தா, இதைச் சாப்பிட்டுட்டு சீக்கிரம் போ'' என்று மண் சட்டியில் தான் கொண்டு வந்த சாதத்தை அவனிடம் கொடுத்தான்.

மூன்று நாட்களாகக் கொலைப் பட்டினி கிடந்த மணிமாறன், அதை ஆவலுடன் வாங்கிக் கொண்டான். அவன் பசியில் அள்ளி அள்ளி விழுங்குவதைக் கண்கலங்கப் பார்த்துக் கொண்டு நின்றனர் இருவரும். அவன் சாப்பிட்டு முடித்ததும் ரங்கன், ''அதோப் பாரு, அந்த ஒத்தையடிப் பாதை வழியாத்தான் எல்லோரும் இங்கிருந்து வெளியே போவாங்க.... ஜாக்கிரதையாப் போ'' என்றான்.

''கவலைப்படாதீங்க... பாஞ்சாவோட அக்கிரமத்துக்கு முடிவு நெருங்கியாச்சு... உங்களையெல்லாம் இங்கிருந்து மீட்காம நான் விட மாட்டேன்... என் உயிரே போனாலும் சரி. பாஞ்சாவோட அத்தனை இரகசியத்தையும் போலீசுக்கிட்ட சொல்லத்தான் போறேன்'' என்ற மணிமாறன், அந்த குடிசையை விட்டு வெளியேறி ஒற்றையடிப் பாதையில் விரைந்தான்.

நேரம் நடு இரவைத் தாண்டி இருக்கும். திக்குத் தெரியாமல் அந்த மலைப் பகுதியில், கால் போன திசையில் வெகுநேரம் அலைந்த மணிமாறன், வெகு தொலைவில் ரயில் பாலம் இருப்பது தென்பட, அதை நோக்கிப் புதர்களை விலக்கிக் கொண்டு நடந்தான்.

- வளரும்



★ உலகிலேயே குட்டையான மரங்கள் என்று கருதப்படும் ''வில்லோ'' மரங்கள் கிரின்லாந்தின் டுண்டுராவில் இருக்கின்றன. இவை எத்தனை வருடங்கள் ஆனாலும் இரண்டு அங்குல உயரத்திற்கு மேல் வளர்வது இல்லை! இதுதான் உலகிலேயே குட்டையான மரம் எனப்படுகிறது.

- ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.


''இருபது வருஷமாய் ஒரே பேஸ்ட் டைத்தான் யூஸ் பண்றேன்...''

''ஐயையே!''

- ராஜி ராதா



கிளி பேசுமா?



"கீக்....கீக்....கீக்."

இடைவெளி வழியாக கூடாரத்திற்குள் நுழைந்து ஓர் இரும்புக் கம்பத்தின் மேல் உட்கார்ந்து தலையை வளைத்துப் பார்த்துக் குரல் கொடுத்தது காட்டுக் கிளி.

"கியாக்... கியாக்... கியாக்...."

நீள் சதுரக் கூண்டில் அடைபட்டுக் கிடந்த பச்சைக் கிளி பதில் குரல் கொடுத்தது.

யாரும் அருகே இல்லை என்பதை உறுதி செய்து கொண்ட காட்டுக் கிளி, கீழே பறந்து வந்து, கூண்டுக்கு அருகே வந்து அமர்ந்து கொண்டது. தலையை வளைத்துக் கூண்டுக் கிளியைப் பார்த்தது.

"அட ரோஸ் வளையனா!" என்று வியந்த காட்டுக் கிளி, "நீதான் எம காதகன் ஆச்சே! நீ எப்படி இங்கே வந்து சிக்கிக் கிட்டே?" என்று கேட்டது.

"கொய்யாப் பழத்துக்கு ஆசைப்பட்டு வலையில சிக்கிக் கொண்டேன்", என்று வருந்திய கூண்டுக்கிளி ரோஸ் வளையன், "அண்ணே, என் மனைவி மரகதப் பச்சை, பசங்க எல்லாம் எப்படி இருக்காங்க?" என்று ஆவலோடு கேட்டது.

"உன்னை மாதிரித்தானே உன் மனைவியும் பசங்களும் இருப்பாங்க? உன் மனைவி சப்போட்டா பழத்துக்கு ஆசைப்பட்டு வலையில சிக்கிக்கிட்டா. உன் பசங்க 'காட்டு வாழ்க்கையே வேண்டாம், நகரத்துக்குப் போறோம்னுட்டுப் போயிட்டாங்க" என்று விவரங்களைக் கூறிய காட்டுக் கிளி, "நீ இங்கே எப்படி இருக்கே?" என்று கேட்டது.

"ரொம்ப சுகமா இருக்கேன் அண்ணே. வேளா வேளைக்கு பழம், பால் சாதம், கொட்டை எல்லாம் தராங்க. ஆனால், இறக்கையை அடிக்கடி வெட்டி பறந்து விட முடியாதபடி பண்ணிடறாங்க."

"மனிதனாச்சே? உன்னை சும்மா விடுவானா?" என்று கேட்ட காட்டுக் கிளி, "அது சரி.... பேசும் கிளி சர்க்கஸ் செய்வதைப் பாருங்க்ன்னு போர்டு போட்டிருக்காங்களே... அந்தக் கிளி எங்கே இருக்கு?" என்று கேட்டது.

"நான்தான் அண்ணே அந்தக் கிளி!"

"அப்படியா!"

"ஆமாண்ணே. பொம்மைத் துப்பாக்கியில் சுடுவேன். சாமிக்கி மாலை

ரேவதி



போடுவேன். மணியடிப்பேன். கரணம் போடுவேன். ஊஞ்சலாடுவேன். பேசு வேன். எல்லாம் இவங்க கத்துக் கொடுத்தது தான்!''

''எங்க கொஞ்சம் பேசேன்.... நானும் கேட்கிறேன்....?''

''வ ண க் க ம், வாங்கண்ணே, இருங்க, நலமா? குட்மார்னிங், குட் நைட், டாடா, பைபை, எஸ், நோ, நன்றி.''

''இதுதான் பேச்சா? ஒரே ஒரு வார்த்தை தானே மனித மொழியில சொல்றே! இதைப் போயித்தான் பேசும் கிளின்னு விளம்பரப் படுத்தி யிருக்காங்களா?''

''ஏன் சொல்லமாட்டீங்க? இந்த வார்த்தைகளை நான் கற்றுக் கொள்வ தற்குள் நான் எ ன் ன பாடுபட்டேன் தெரியுமா? அவங்க என்னை என்ன பாடு படுத்தினாங்க தெரியுமா?'' என்று கேட்ட ரோஸ்வளையன், ''எங்கூடவே அந்த செர்ரி மூக்கனும் வந்து சிக்கிக் கிட்டான். எங்க ரெண்டு பேரையும் ஆந்திராவுக்குக் கொண்டு போனாங்க. சர்க்கஸ் வேலை கத்துக் கொடுத்தாங்க. எனக்குத் தமிழ் பேசக் கத்துக் கொடுத் தாங்க. அவனுக்கு தெலுங்கு. வாத்தி யார் பிரம்போட வருவாரு. இடது கையில பிரம்பு! வலது கையில எங் களை உட்கார வைச்சுப்பாங்க. வாய்க்கு அருகே தூக்கி, சொற்களை மறுபடி மறுபடி சொல்லிக் காட்டி திரும்பச் சொல்லச் சொல்லுவாங்க. நேரா சொல்லலே பிரம்படி! நேரா சொன்னா, சம்பா கோதுமை முந்திரிப் பருப்பு தருவாங்க. நான் பரவாயில்லே. எளிதாக் கத்துக்கிட்டேன். ஆனால் செர்ரி மூக்கன் படாத பாடுபட்டான். அவனால் எதுவுமே கத்துக்க முடியலே. அப்புறம் ஒரு ஏஜெண்ட்டு வந்தார். அவன் நாக்கை ரெண்டா நறுக்கிவிட் டால் பேச்சு எளிதா வரும்னு சொன் னாரு. அவன் நடுங்கிக்கிட்டிருந்தான். ஆனால், அதுக்குள்ள அவன் நல்ல காலம். பம்பாய்க்காரர் ஒருத்தர் வந் தார். செர்ரி மூக்கன் செய்த சர்க்கஸ் வேலைகள் அவருக்குப் புடிச்சுப் போச்சு. பேசாட்டி பரவாயில்லைன்னு இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து அவனை வாங்கிட்டுப் போயிட்டாரு!'' என்றது.

''சோளக் கதிரைக் கொத்தறதும், கொய்யாப் பழத்தைத் தேடிக்கிட்டு சுத்தறதுமா நாம்ப எவ்வளவு சுதந் திரமா இருந்தோம்! இப்படி வந்து சிக்கி, கூண்டு வாசம் செய்கிறாயே!'' என்று வருந்தியது காட்டுக்கிளி.

''என்ன செய்வது அண்ணே? மனி தர்களுக்கு அறிவு அதிகம். அதனால் அவங்களைப் பகைச்சுக்கிட்டு இருந் தால், பிழைக்க முடியுமா? இதுவாவது பரவாயில்லே. நான் செய்யற வித்தை களை பார்க்க, குழந்தைகள் நூற்றுக் கணக்கில் வராங்க. மகிழ்ச்சி ஆரவாரம் செய்து என்னைப் புகழறாங்க. அடிக் கடி அயல் நாட்டுக்காரங்க கூட வராங்க. நான் செய்யற வித்தைகளை வீடியோ எடுத்திருக்காங்க. போட்டோ புடிச்சிருக்காங்க. கொல்லி மலைக் கொம்பர்னு ஒரு காட்டுக் கூட்டம். அவங்க கிளியைப் புடிச்சு, இலேகியம் பண்றாங்களாம்! அது திக்குவாயர் களைப் பேச வைக்க உதவுமாம்.

அந்தக் காட்டு மிராண்டிகளிடம் சிக்காம, இவங்க கிட்ட வந்து சிக்கி, வித்தை கற்று, குழந்தைகளை மகிழ்விக்கவாவது முடிகிறதே என்று எனக்கு ரொம்பவும் மகிழ்ச்சி அண்ணே....'' என்றது ரோஸ் வளையன்.

மனிதர்களின் பேச்சுக் குரல் கேட்டது.

''அண்ணே, யாரோ வராங்க. இனிமே இங்க நீங்க இருப்பது நல்லதல்ல. இந்தாங்க... இந்த முந்திரிய எடுத்துக்கிட்டு கிளம்புங்க'' எனப் பரபரத்த ரோஸ் வளையன், கூண்டுக் கம்பி இடுக்கு வழியாக ஒரு முந்திரிப் பருப்பை வெளியே தள்ளியது.


காட்டுக்கிளி முந்திரியைக் கொத்திக் கொண்டு பறந்து சென்றது.


ரோஸ் வளையனின் முதலாளி பெரிய கடுக்கன் அணிந்த ஒருவரை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார். அவர்களுக்குப் பின்னால் இன்னும் நாலைந்து பேர். எல்லோரும் காட்டிய மரியாதையிலிருந்து கடுக்கன் பெரிய பிரமுகர் என்பதை ரோஸ் வளையன் ஊகித்துக் கொண்டது.

''இந்த ஊரில் கிளி சர்க்கஸ் ஆரம்பித்து இருபத்தைந்து நாளாச்சு. இன்று வெள்ளி விழா நாள். அதைக் கொண்டாடத்தான் உங்களைப் போன்ற அறிஞர்களை அழைத்தேன். எங்கள் கிளி செய்யும் வித்தைகளையும், பேசும் அழகையும் நீங்கள் உங்கள் நண்பர்களோடு காண வேண்டும். கிளியை வாழ்த்தி ஒரு பாடல் பாட வேண்டும்'' என்று கடுக்கனிடம் குழைந்தார் முதலாளி.

ரோஸ்வளையன் குஞ்சாக இருக்கும் போது, கிளி இனத்தைப் பற்றி மிகப் பெருமையாக அதன் அம்மா பேசுவாள். ''தமிழ் வளர்த்த மதுரையை ஆண்ட மீனாட்சி அம்மையின் கையில் இருப்பது நம் இனம். கோதை என்ற ஆண்டாள் கையில் அழகு செய்வது நம் இனம். பழங்கால அரச குமாரிகள் தூது செல்ல நம்மைத்தான் நம்பினர். 'கிளி விடு தூது' என்று நம்மைப் பற்றி ஒரு நூல் கூட இருக்கிறது'' என்று கூறுவாள். அதையெல்லாம் ரோஸ் வளையன் கேட்டிருக்கிறது. அதனால், வந்திருக்கும் கடுக்கன் ஒரு புலவர் என்றதும் ரோஸ் வளையனுக்கு அளவில்லாத மதிப்பு ஏற்பட்டது.

எல்லோரும் அமர்ந்து கொண்டதும், ரோஸ் வளையனைத் திறந்து விட்





டார்கள்.

வெளியே வந்த ரோஸ் வளையன் ''வணக்கம் ஐயா. மகிழ்ச்சி. இருங்கள்'' என்று பணிவாகக் கூறியது. ஒரே கை தட்டல் சத்தம்!

''தமிழ்க்கிளி அல்லவா? என்ன பண்பு!'' என்று வியந்து கொண்ட கடுக்கன், ''அன்பு வணக்கம் கிளியம்மா!'' என்றார் பதிலுக்கு.

ரோஸ் வளையன் திகைத்தது.

''மடையா! மடையா!'' என்றது ரோஸ் வளையன் கோபத்துடன்.

''என்னங்க! கிளியம்மா அன்பா; அழகா வரவேற்றுவிட்டு, இப்படித் திட்டுதே!'' என்று திகைப்புடன் கேட்டார் கடுக்கன்.

''அது உங்களை இல்லீங்க! இப்படிச் சில சமயம், தன்னைத்தானே அது திட்டிக்குங்க'' என்று சமாதானப் படுத்தினார் முதலாளி.

ரோஸ் வளையன் காவடி எடுத்தது. மணி அடித்தது. பாண்டி ஆடியது. பீரங்கி சுட்டது. சாமிக்கு மாலை போட்டது. ஊஞ்சலாடியது. எல்லோரையும் மகிழ்வித்தது.

கடுக்கன் ரோஸ் மில்க்கைக் குடித்து விட்டு கிளியைப் பாட எழுந்தார்.

''கிளியம்மா கிளியம்மா
கழுத்துல மாலை ஏதும்மா?''

எல்லோரும் கைதட்டினர். ரோஸ் வளையனுக்கு ஒரே கோபம்! வேகமாக ஆடி அசைந்து கூண்டுக்குள் போய் அடைந்து கொண்டது.

யாருமே அது இப்படி முகத்தில் அடித்தது போல் நடந்து கொள்ளும் என்பதை எதிர் பார்க்கவில்லை. எல்லோரும் ஒருவரை ஒருவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டனர்.

''ஒருவேளை உங்க புத்திசாலிக் கிளிக்கு இந்தப் பாட்டு புடிக்கலே போல இருக்கு. வேற பாட்டுப் பாடறேன்'' என்று தொடங்கினார் கடுக்கன்.

''சின்னச் சின்னக் கிளியக்கா
சிவந்த மூக்குக் கிளியக்கா
சின்னக் கழுத்துல என்னக்கா?
சிவப்பு வளையம் ஏதக்கா?''

எல்லோரும் கைதட்டினர்.

''மடையா! மடையா!'' என்று கோபத்துடன் கூண்டுக்குள் இருந்தபடி கூறியது ரோஸ் வளையன்.

கடுக்கனுக்குக் கோபமான கோபம்!

''நீயும் ஆச்சு உன் கிளியும் ஆச்சு! இப்படிப்பட்ட அவமானம் எனக்கு ஏற்பட்டதே இல்லை. எனக்கு வர ஆத்திரத்தில், இந்த ஆணவம் பிடித்த கிளியை ஒரு பூனையிடம் கொடுத்து விட்டுப் போய்விடலாம் போல் இருக்கு!'' என்று கத்தி விட்டுப் போய்விட்டார் நண்பர்கள் சூழ.

முதலாளிக்கும் ஒரே கோபம். அவர்கள் சென்றதும் ரோஸ் வளையனை வெளியே எடுத்து பிரம்பால்

அடித்துத் தண்டித்தார்!

அன்று இரவு யாருமில்லாத நேரத்தில் கூண்டுக்கு வெளியே ஏதோ சத்தம் கேட்டுப் பார்த்தது ரோஸ் வளையன். காட்டுக் கிளிதான்.

''நீ ஏன் அவர்களை மடையா என்று திட்டினாய்! நானும் ஒளிந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தேன்?'' என்று கேட்டது காட்டுக் கிளி.

''அந்த அறிஞருக்கு நான் ஆண் கிளி என்பதும் தெரியலே! ஆண் கிளிக்கு மட்டும்தான் கழுத்தில் சிவப்பு வளையம் இருக்கும் என்பதும் தெரியலே! இதைக் கூடப் புரிஞ்சுக்காம என்னை ''கிளியம்மா, கிளியக்கான்னு பாடினா எப்படி அண்ணே பொறுத்துக் கிட்டிருப்பேன்? அதுதான் 'மடையா'ன்னு திட்டினேன்'' என்றது ரோஸ் வளையன்!

அறிவியல் உண்மைகள் :

* இலக்கியமும், புலவர்களும் போற்றும் கிளி, உண்மையில் விவசாயிகளின் பகைவன்! நாசம் செய்யும் பகைவர்கள் வரிசையில் எலிக்கு அடுத்தபடி கிளிக்குத் தான் முதலிடம்!

* கிளிக்கு மட்டுமே பறவைகளில் மனிதர்களைப் போலவே வளைந்த தடித்த நீண்ட நாக்கு உள்ளது. அதனால், இதை ஒரிரு சொற்களைத் திருப்பிச் சொல்லப் பழக்க முடியும். வித்தை காட்டப் பழக்க முடியும். கிளி பேசும் என்றால் ஒரிரு சொற்களைக் கூறும் என்பது பொருள். அவ்வளவே!

* பாடும் பேசும் என்பதெல்லாம் அறிவியல் அடிப்படையில் ஏற்கக் கூடியது அல்ல. பெரிய வாக்கியங்களை அதனால் கூற முடியாது. அதிக சொற்களைத் திருப்பிக் கூறவல்லது ஆப்பிரிக்க பழுப்புக் கிளிகளே (1000 சொற்கள்). இதுவும் கூட நினைவு படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். ஒருவாரம் விட்டால் கூடப் போச்சு, மறந்து விடும்!

* ஆண் கிளிக்கு மட்டுமே கழுத்தில் ரோஸ் அல்லது சிவப்பு வளையம் உண்டு! பெண் கிளிக்கு அல்ல.

ஒற்று படுத்தும் பாடு!

★ ஒற்று இல்லாவிட்டால் சொற்கள் எப்படி மாறுபட்ட பொருளைத் தருகின்றன என்பதைப் பாருங்கள்!

வேலை கொடுத்தார்



வேலைக் கொடுத்தார்

மருந்து கடை




மருந்துக் கடை

தயிர்க் கடை



தயிர் கடை

- கா. செந்தில் குமரன், குன்றக்குடி.



உயரமானவன்!

ஆற்றங்கரையில் தனியாகக் கிடக்கும் கருப்புக் கூழாங்கல்லைப் போல, பனங்கொட்டை விதை ஒன்று கீழே கிடந்தது. தாளில் பேனா வைத்த சிறு புள்ளி போல, ஆலம் விதை ஒன்று கொஞ்சம் தள்ளி இருந்தது.

''இந்த ஆலம் விதை எவ்வளவு சிறிய தாக இருக்கிறது! ஆனால் பனங் கொட்டை விதையைப் பாரேன். எவ்வளவு பெரிய தாக இருக்கிறது!'' என்று சொல்லிப் பனங் கொட்டை யைப் பாராட்டியது ஒரு பட்டாம் பூச்சி.... இதைக் கேட்ட பனங் கொட்டை ''நான்தான் விதைகளிலே பெரிய விதை'' என்று மார்தட்டித் தற்பெருமையோடு சொல்லிக் கொண்டது. இதைக் கேட்ட ஆலம் விதை ஒன்றும் பேசாமல் இருந்தது.

சில நாட்கள் சென்றன. அந்த இரண்டு விதைகளும் மண்ணுள் சென்றன. உரிய காலத்தில் அவை முளைத்தன. பனஞ்செடி வேகமாக வளரத் தொடங்கியது. ஆலஞ் செடி மெதுவாக வளர்ந்தது. பனஞ்செடி யின் 'கிடுகிடு' வளர்ச்சியைப் பட்டாம் பூச்சி பாராட்டியது. ஆலஞ்செடி யைக் கேலி செய்தது. ஆனால், ஆலஞ்செடி ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாகவே இருந்தது.

பனஞ்செடி, விசிறியை ஏந்திக் கொண்டு வருவதைப் போல, அழகாக வளர்ந்தது. அது தன் வளர்ச்சியைத் தானே வியந்து போற்றிக் கொண்டது. ஆனால். அதே சமயத்தில் ஆலஞ்செடி யைக் கேலி செய்யத் தவறவில்லை. பனஞ்செடியின் பெருமையை அந்தப் பக்கம் வந்த குள்ள நரியும், ஓநாயும், போட்டி போட்டுக் கொண்டு புகழ்ந்தன. ஆனால், அப்பொழுதும் கூட ஆலஞ்செடி வாயைத் திறக்கவே இல்லை.

பனைமரம் கொடிமரம் போல, உயரமாக வளர்ந்தது. ஆனால், ஆலமரம் பந்தல் போலப் பரவலாக வளர்ந்தது. அவை இரண்டும் மேலும் வளர்ந்தன. நன்றாக வளர்ந்தன.

வானைமுட்ட உயர்ந்து நின்ற பனை மரத்தின் நிழலில் யாரும் நிற்க முடியவில்லை. ஆனால், ஆலமரத்தின் பரந்த நிழலில் விலங்குகள் களைப் பாறின. அதன் அடியில் ஒருநாள் ஓய்வு எடுத்துக் கொண்ட குள்ளநரி, "இந்தப் பனங்கொட்டை முதலில் பெருமைக்கு உரியதாகத்தான் இருந்தது. ஆனால், பிறகு, அது பெருமையை இழந்து விட்டது. சில மனிதர்கள் இப்படித் தான் முதலில் பெரிய பரபரப்போடு சிறப்பாக வாழ்க்கையைத் தொடங்கு வார்கள். ஆனால், போகப் போக, அவர்கள் தங்கள் சிறப்பை இழந்து விடுவார்கள்'' என்று ஓநாயிடம் சொன்னது. ''ஆமாம்'' என்றது ஓநாய். ஆனால், ஆலமரம் அப்பொழுதும் கூட ஒன்றும் பேசவே இல்லை. அடக்கம் அமரருள் உய்க்கும் என்பது இதுதானா?

- மலையமான்.

சிங்க ராஜாவின் சீடை!

சின்னபாபு

வழுக்குப் பாறைக் காட்டில் வசித்த சிங்க ராஜா விநோதமானவர். சிங்கங்களுக்குப் பிடித்தமான உணவு மான் இறைச்சி என்றுதானே நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்த சிங்க ராஜாவுக்கு மிகவும் பிடித்த மானது என்ன தெரியுமா? உப்புச்சீடை!

ஒரு முறை ஆற்றில் திடீரென்று பயங்கர வெள்ளம். சிங்கராஜா சுத்திக் கப்பல் பண்ணிவிட வந்திருந்தார். வெள்ளத்தில் சிக்கி, திசைதப்பிய ஒரு படகு அங்கே கரையேறியது. அதில் ஒரு கடுக்கன்காரர், ஒரு பெண்மணி, ஒரு பொடிப் பயல், படகோட்டி இருந்தனர்.

"வெள்ளம் சிறிது வடிந்ததும் போய் விடுகிறோம். அதுவரை எங்களை ஒன்றும் செய்யாதீர்கள்!'' என்று கெஞ்சினார் கடுக்கன். ஒத்துப்பாடினர் பெண்மணியும் படகோட்டியும். பொடியன் மட்டும் எதையும் லட்சியம் செய்யாது எதையோ தின்று கொண்டிருந்தான்! அவன் கையிலிருந்து ஏதோ கீழே விழுந்து தரையில் உருண்டு சிங்கராஜாவுக்கு அருகே வந்தது!

''என்ன இது?'' என்று கேட்ட சிங்கராஜா, தன் முன் கையால் அதைத் தொட்டு, உருட்டிப் பார்த்து, ''கோலியா? கோலி மாதிரித்தான் இதையும் விரலால் அடித்து ஆடணுமா?'' என்று எடுத்துக் கொண்டார்.

''ஓ!''வென்று பயமில்லாது சிரித்த பொடியன், ''சிங்கராஜா! இது திங்கற தின்பண்டம்! ஜோரா; சுவையா இருக்கும். தின்னு பாருங்க!'' என்றான்.

''மனிதனை விடவா?''

கடுக்கன், அவர் மனைவி, படகோட்டி மூவரும் நடு நடுங்கினர். பொடியன் மட்டும் துணிச்சலாகப் பேசினான்.

''மனிதர்கள் மட்டுமென்ன. நீங்கள் சாப்பிடும் மற்ற இரைகள் எல்லாவற்றையும் விட இந்தச் சீடை சுவையா இருக்கும். சாப்பிட்டுத்தான் பாருங்களேன்?''

சிங்கராஜா தயக்கத்தோடு சீடையை வாயில் போட்டுக் கடித்தார். சுவைத்தது.

''ரொம்ப ஜோரா இருக்கே! மனிதனைவிட, மான் கறியைவிட சுவையா இருக்கே! இவ்வளவு சுவையானதை நான் இதுவரை சாப்பிட்டதே கிடையாது!'' என்று புகழ்ந்தார் சிங்கராஜா.

பெண்மணிதான் கையில் கொண்டு வந்திருந்த மூட்டையைப் பிரித்து, ஒரு



பெரிய தூக்குப் பாத்திரத்தை சிங்க ராஜாவுக்கு முன் கொண்டு வந்து வைத்தாள். அது நிறைய உப்புச் சீடை!

''வாசனை மூக்கைத் துளைக்கிறதே!'' என்று புகழ்ந்து கொண்ட சிங்கராஜா, இரண்டு கை அள்ளி வாயில் போட்டுக் கொண்டு கடித்துச் சுவைத்தார்.

''பாதியை எடுத்து அரண்மனைக்கு அனுப்பிவிடு. மீதியை எல்லா மிருகங்களுக்கும் கொடு!'' என்று அமைச்சர் ஓநாய்க்கு உத்தரவிட்டார்.

''வெள்ளம் கொஞ்சம் குறைஞ்சிருக்கு. நாங்க போகலாமா?'' என்று கேட்டார் கடுக்கன்.

''கவலைப் படாதீர்கள்! உங்களை யாரும் எதுவும் செய்ய மாட்டார்கள்'' என்று சிரித்த சிங்கராஜா, ''அரண்மனை சமையற்காரர் நரியாரை வரவழைக்கிறேன். அவருக்கு இந்த உப்புச்



சீடை செய்வதை நீங்கள் கற்றுத் தர வேண்டும். எழுதியே தந்து விடுங்கள். பிறகு நீங்கள் போகலாம்'' என்று திருவாய் திறந்து கூறினார்.

இப்படி சிங்கராஜா ஆர்வம் காட்டியதன் விளைவாக உப்புச் சீடை காட்டில் பிரபல மடைந்தது.

சீடைப் பைத்தியம் சிங்கராஜாவை பலமாகப் பிடித்துக் கொண்டது. எத்தனை சீடை தின்றாலும் அவருக்குத் திகட்டவே திகட்டாது! யார் சீடை செய்தாலும் சீடை வரியாக அரசாங்கத்திற்கு ஐந்தில் ஒரு பங்கு சீடையைத் தந்து விட வேண்டும் என்று சட்டம் போட்டிருந்தார். மீறுபவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு, கடுமையாகத் தண்டிக்கப் பட்டனர்.

ஓயாது சீடை தின்றதன் காரணமாக சிங்கராஜாவின் மேல் வரிசைப் பற்கள் ஆட்டம் காணத் தொடங்கின. பல் வைத்தியர் கரடியாரை அழைத்து ஆலோசனை கேட்டார் ராஜா.

சிங்கராஜாவின் பற்களைப் பரிசோதித்த கரடியார், ''மேல் வரிசைப் பற்களெல்லாம் ஆடிப் போய்விட்டன. இனிமேல் அவற்றால் தொந்திரவுதான். எல்லாவற்றையும் பிடுங்கி விடுகிறேன். அதோடு, இனிமேல் சீடை தின்னும் ஆசையை விட்டு விட வேண்டும்'' என்றார் கண்டிப்புடன்.

வேறு வழியில்லாமல் சிங்கராஜா, மேல் வரிசைப் பற்களை எடுத்து





★ அமெரிக்க செவ்விந்தியர்கள் தமது வீட்டிற்கு வரும் விருந்தாளிகளை வரவேற்கும் முறையே வேடிக்கையானது! அவர்கள் தமது வீட்டிற்கு யாரேனும் புதியவர் விருந்தாளியாக வந்தால் அவர்களைக் கண்ணீரும் கவலையுமாக வரவேற்பார்களாம். எவ்வளவு மிகுதியாக அழுது வழிகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு மதிப்பு காட்டப்படுவதாக அர்த்தமாம். என்ன வரவேற்போ?!

- கே. எல். குமணன், கல்லிடை.

விட்டு, பொய்ப்பல் செட்டை வைத்துக் கொண்டு தொடர்ந்து சீடை தின்று வந்தார்.

அன்று குரங்கார் வீட்டில் அவர் பையன் குட்டை வாலனுக்குப் பிறந்த நாள். குட்டை வாலன் கேட்டபடி சீடை செய்திருந்தார்கள். இருநூறு சீடை! அரசாங்க சட்டப்படி ஐந்தில் ஒரு பங்காக, நாற்பது சீடைகளை வரியாகத் தர, அரண்மனைக்குத் தகவல் அனுப்பினார். குரங்கார் வீட்டுப் பலகாரம் நன்றாக இருக்கும் என்பதால், ஆற்றுக்கு நீர் குடிக்க வரும்போது தானே வந்து சீடைகளைப் பெற்றுக் கொள்வதாக, சிங்கராஜா கூறிவிட்டார். கூறிய படியே வந்தும் விட்டார்.

''இருநூறு சீடைதான் செய்தாயா? இல்லை அ தி க ம் செய்துவிட்டு ஏமாற்றுகிறாயா?'' என்று கேட்டார் சிங்கராஜா.

''இல்லை மகாராஜா, செய்ததே மொத்தம் இருநூறுதான். எல்லாம் இந்த அடுக்கில் இருக்கிறது. நீங்களே எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம். நீங்கள் உங்களுக்குச் சேர வேண்டியதை எடுத்துக் கொண்ட பிறகுதான் என் மகனுக்கும் மற்றவர்களுக்கும் தரப் போகிறேன்'' என்றது குரங்கார் பணிவுடன்.

சிங்கராஜா ''சரி கொண்டா, நானே எண்ணிப் பார்க்கிறேன்'' என்று அடுக்கை வாங்கிக் கொண்டார்.

அந்த நேரம் பார்த்து துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது!

அரண்டு போன மிருகங்கள் மூலைக்கு ஒன்றாய் ஓடி ஒளிந்து கொண்டன! சிங்கராஜாவும் ஒரு பருத்த மரத்தின் பின்னால், சீடை அடுக்கோடு மறைந்து கொண்டார். சீடையின் வாசனை மூக்கைத் துளைக்கவே, சிங்கராஜா இரண்டு சீடையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்!

என்னதான் பல்செட் என்றாலும் தினமும் ஓயாமல் சீடையைக் கடித்துத் தின்றால் அது எப்படித் தாங்கும்? தேய்ந்து கல கலத்துப் போயிருந்த 'பல்செட்' சீடையைப் போட்டுக் கடித்ததும் பொடிப் பொடியாக வாய்க்குள்ளேயே உடைந்து விட்டது! யாராவது பார்த்து விடப் போகிறார்களே என்ற பதை பதைப்பால், அவசரம் அவசரமாகத் தின்றதால், பல்செட் உடைந்து நொருங்கியதை ராஜா உணரக் கூட இல்லை! சீடையோடு சேர்த்து அதையும் விழுங்கிவிட்டார்!

அப்புறம்தான் ராஜா, தான் பல் செட்டையும் சேர்த்து விழுங்கி விட்டதை உணர்ந்தார். அவருக்குப் 'பகீர்' என்றது. வாயைத் திறந்தால், மேல் பல் வரிசை இல்லாதது எல்லோருக்கும் தெரிந்துவிடுமே என்ற பயம் பிடித்துக் கொண்டது. வாயை இறுக மூடிக் கொண்டார். என்ன வந்தாலும் இன்னொரு புதிய பல் செட் கிடைக்கும் வரை வாயைத் திறப்பதில்லை என்று முடிவு செய்து கொண்டார்!

துப்பாக்கி அபாயம் நீங்கியதும் ஒளிந்திருந்த மிருகங்கள் எல்லாம் மறுபடி ஒன்று கூடின. சீடை அடுக்கை அமைச்சர் ஓநாயிடம் கொடுத்து விட்டு ராஜா வேகமாக நடக்கத் தொடங்கினார்! யாரிடமும் எதுவும் பேசவில்லை.

சபை கூடியது. சிங்கராஜா வாயே திறக்கவில்லை. அவசியம் ஏற்பட்ட போது கையால் எழுதிக் காட்டினார். ராணியாரும் இளவரசரும் வந்து எத்தனையோ கெஞ்சிப் பார்த்தார்கள். அரசவைக் கோமாளி கொரில்லாக் குரங்கு என்னென்னவோ சேஷ்டைகள்

செய்து ராஜாவை வாய் திறந்து சிரிக்க வைக்க முயன்றது. எதுவும் பயனளிக்கவில்லை!

பிறந்த நாளின் போது சீடை பண்ணியும், ஒன்று கூடத் தனக்குக் கிடைக்கவில்லையே என்று குட்டை வாலன் குரங்குக்கு ஒரே வருத்தம். அரச சபையில் அந்தச் சீடை அடுக்கு ராஜாவின் சிங்காசனத்திற்கு பின்னால் இருந்தது.

ஒருவரும் பார்க்காதபடி குட்டை வாலன் ஒளிந்து சென்று சீடை அடுக்கை எடுத்தது. எண்ணிப் பார்த்தது. நூற்றுத் தொண்ணூற்று எட்டுதான் இருந்தது! மீதி இரண்டு என்ன ஆகியிருக்கும்? யார் தின்றிருப்பார்கள்?

குட்டை வாலன் தீவிரமாக யோசித்தது. எல்லோரும் ஓடி ஒளிந்து கொண்ட போது, சீடை அடுக்கு சிங்க ராஜாவிடம்தான் இருந்தது. பிறகு அமைச்சர் ஓநாயிடம் போனது. அமைச்சருக்கு சீடை பிடிக்கவே பிடிக்காது. அவருக்கு அசைவம்தான் பிடிக்கும். அதனால், இரண்டு சீடைகளை ராஜா தான் தின்றிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது குட்டை வாலன்.

அரசரை வாயைத்திறக்க வைத்துப் பேசவைப்போருக்கு என்ன வேண்டுமானாலும் பரிசு தருவதாக ராணியார் அறிவிப்புச் செய்தார்.

ராஜாவின் முகத்தையே கூர்ந்து நோக்கிய குட்டை வாலன். சிங்கராஜாவின் மேல் உதட்டுப் பக்கம் உள்ளடங்கி இருப்பதைக் கவனித்து விட்டது. பல் இல்லாதவர்களுக்குத்தான் அப்படியாகும் என்பதை அது நினைவு படுத்திக் கொண்டது. ராஜாவின் மேல் பல்வரிசை, பல்செட்டாக இருக்க வேண்டும் என்பதையும், இரண்டு சீடைகளை ஒருவரும் காணாது அவசரமாகத் தின்றதன் விளைவாகவே பல் செட் உடைந்து போய் ராஜா வாயைத் திறக்க மாட்டேன் என்று பிடிவாதமாக இருப்பதையும் புத்திசாலியான அது ஊகித்துக் கொண்டது. தங்கள் வீட்டிலிருந்து திரும்பி வரும்போது, சிங்க ராஜா, பல்வைத்தியர் கரடியார் வீட்டு வாசலில் நின்று பூட்டியிருந்த வீட்டையும், ''வைத்தியர் வெளியூர் போயிருக்கிறார். திரும்ப நாலுநாள் ஆகும்'' என்று தொங்கிய போர்டையும் பார்த்து ஏக்கப் பெரு மூச்சு விட்டதையும் நினைவு படுத்திக் கொண்ட போது அதன் ஊகிப்பு உறுதிப்பட்டது.

அடுத்த அரைமணி நேரத்தில், குட்டை வாலன், கரடி வைத்தியர் வீட்டு முற்றத்தில் குதித்து, உள்ளே சென்று, கண்ணாடி பீரோவில் வைக்கப்பட்டிருந்த பல் செட்டுகளைப் பார்த்து, சிங்கராஜாவின் மேல் பல் வரிசைக்கு ஏற்றதாக இருந்த பல் செட்டை எடுத்து மூடிக் கொண்டு, சிங்கராஜாவிடம் வந்து, அதன் காதில் இரகசியமாகப் 'புது பல் செட்டைக் கொண்டு வந்திருக்கிறேன்' என்றது! சிங்கராஜாவின் முகம் மலர்ந்தது. அதை அழைத்துக் கொண்டு தனி அறைக்குப் போனது. திரும்பி வரும்போது ராஜா வாயைத் திறந்து பேசிக் கொண்டே வந்தார்.

''உனக்கு என்ன வேண்டும் கேள்'' என்றாள் சிங்கராணி மகிழ்ச்சியுடன். 'எது கேட்டாலும் தருகிறோம்' என்றார் ராஜா.


''உப்புச் சீடைக்கு வரியை நீக்க வேண்டும்'' என்றது குட்டைவாலன்!

'ஆ'னா ஆடு, 'இ'னா இலை, 'ஈ'ன்னா ஈன்னு எல்லாம் புரியுது. 'அனா' அனில்னு சொல்றீங்களே... அனில்னா என்னப்பா?


- ச. கனிக்கைராஜ்



தன் வலையிலிருந்து விடுபட ஸ்பைடர் மேனுக்கு உதவமுடியுமா பாருங்கள்!



கூடிவாழ்ந்தால் கோடி நன்மை!



மூனுசாமியின் வீட்டில் ஒரு ஆடு இருந்தது. அவன் ஆட்டுக்கு வேளா வேளை புல்லும், தழைகளும், தவிடும் போடுவான். ஆடு கொழு கொழு என்று இருந்தது. அதை அடுத்த நாள் கசாப்புக் கடைக்காரனுக்கு விற்றுவிட அவன் ஏற்பாடு செய்திருந்ததை ஆடு அறிந்து கொண்டது. உடனே அவனுக்குத் தெரியாமல் வீட்டை விட்டுக் காட்டை நோக்கி ஓடி வந்து விட்டது.

போகின்ற வழியில் ஒரு குரங்கை ஆடு சந்தித்தது. ஆடு தன் கதையைக் கூறியது.

''என் கதையும் இதே மாதிரித்தான். நான் சின்னக் குட்டியாக இருக்கும் போது, ஒரு வித்தைக்காரன் கையில் சிக்கினேன். என் இடுப்பில் பட்டை கட்டி மரத்தடியில் கட்டிப் போட்டான். வித்தை சொல்லிக் கொடுத்தான். அவனுக்கு ஏராளமாகப் பணம் சம்பாதித்துக் கொடுத்தேன். இப்போ என்னை சிங்கப்பூருக்கு அனுப்பப் போகிறானாம்! அவனுக்கு நிறையப் பணம் கிடைக்குமாம். அதான் அவன் அசந்திருந்த சமயம் பார்த்து ஓடி வந்து விட்டேன்'' என்றது குரங்கு.


இரண்டும் காட்டுக்குள் நடந்தன. வழியில் ஒரு யானை மிகவும் சோகமாக நின்று கொண்டிருந்தது. குரங்கும், ஆடும் தங்கள் கதையைக் கூறின.

''என் ஏஜமான் மிகவும் நல்லவர் என்று பெயரெடுத்தவர். நல்லான் என்று பெயர்! என்னை மிகவும் அன்பாகக் கவனித்துக் கொண்டார். அவருக்கு ஒரு மாதமாக உடம்பு குணமில்லை. அதனால், என்னைக் காட்டுக்குள் சென்று பிழைத்துக் கொள் என்று அனுப்பி விட்டார். எப்படிப் பிழைப்பேன்? என்ன செய்வேன் என்று எனக்கு எதுவுமே தோன்றவில்லை'' என்றது யானை.

''உங்க எஜமானன் மனிதர்களில் மாணிக்கமாக இருக்க வேண்டும். நாம் மூவரும் சேர்ந்தால் அவரைப் பிழைக்க வைத்து, நாமும் அவருடன் வாழலாம்'' என்றது குரங்கு. மூன்றும் நடந்தன. ஒரு நாட்டு வைத்தியர் வீட்டின் முன் வந்து நின்றன. குரங்கு திடீரென்று பாய்ந்து வைத்தியரின் பெட்டியை எடுத்துக் கொண்டு ஓட, வைத்தியர் துரத்த ஆரம்பித்தார். யானை வழி காட்ட, குரங்கு ஓட, வைத்தியர் துரத்த, வைத்தியர் நல்லான் இருந்த இடத்திற்கு வந்தார். குரங்கின் நடவடிக்கைகளால் அதன் நோக்கத்தைப் புரிந்து கொண்ட வைத்தியர், நல்லானுக்கு வைத்தியம் செய்தார். குரங்கு அவரை மீண்டும் அவரது வீட்டில் கொண்டு விட்டது. அடுத்த நாள் அவரே வந்து கவனித்தார். ஒரு வாரத்தில் நல்லான் குணமடைந்தார்.

யானை ஆட்டைத் தன் முதுகில் ஏற்றிக் கொண்டது. குரங்கு அதன் துதிக்கையில் தொங்கிக் கரணம் போட்டது! அப்படியே ஊருக்குள் போயின! காசு கிடைத்தது! வேண்டியதைவாங்கிக் கொண்டு நல்லானிடம் வந்தன! ஒரு மாதத்தில் நல்லான் மேலும் குணமடைந்தான். இப்பொழுது அவனே அவைகளை வைத்து வேடிக்கை காட்டி, சம்பாதித்து, மூன்றையும் அன்புடன் காப்பாற்றினான்!

- என். கமலக்கண்ணன்,
செய்யார்.



கழுதை விழா!

பொங்கல் விழா, பிறந்த நாள் விழா, திருவிழா எல்லாம் நமக்குப் பழக்கமானவை. ஆனால், கழுதை விழா கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

கழுதை விழாவைக் காண வெளி நாடு போக வேண்டாம். ந ம து இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்திற் குப் போனால் போதும். அங்கு ஜெய்ப்பூர் மாவட்டத்தில் பவ்கர் பண்டியா எனும் சிற்றூரில் இந்த அதிசயமான கழுதை விழா நடை பெறுகிறது. ஆண்டுதோறும் தசரா பண்டிகை சமயத்தில் இது ஒரு வாரம் நடைபெறுகிறது. இதைக் கழுதை விழா என்பதை விட, கழுதைக் கண் காட்சி என்பதே பொருத்தமாக இருக் கும்.

இந்த விழாவில் பங்குகொள்ள இந்தியாவின் எல்லா மாநிலங்களில் இருந்தும், குறிப்பாக வ ட ப கு தி மாநிலங்களில் இருந்து ஏராளமான உயர் ஜாதி வகைக் கழுதைகள் வரு கின்றன.


கழுதை என்றதுமே நமக்கு அதன் அழுக்கான வெளிர் சாம்பல் நிறத் தோற்றம்தான் நினைவுக்கு வரும். ஆனால், இங்கு காட்சியில் பங்கு கொள்ள அ பூ ர் வ இனங்களான பழுப்பு, ரோஸ் வண்ணக் கழுதைகள் கூட வருகின்றன.

மலைச் சரிவுகளிலும், பள்ளத் தாக்குகளிலும் கனமான பொதிகளை எளிதில் சுமந்து செல்லக்கூடிய கழு தைகள், ராஜஸ்தான், குஜராத், மத்தியப் பிரதேச மக்களுக்குப் பெரிய செல்வம். மருந்துக்காகவும் கழுதைகள் வளர்க்கப் படுகின்றன. சலவைத் தொழிலாளர் களும், மண்பாண்டம் செய்யும் தொழி லாளர்களும் கழுதைகளைப் பெருமள வில் தொழில்களுக்குப் பயன்படுத்து கிறார்கள். இந்தக் காரணங்களால் குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் கழுதைகளுக்கு நல்ல கிராக்கி இருக் கிறது.

விழா நடக்க ஒரு வாரம் இருக்கும் போதே, கழுதை விழா நடைபெறும் பவ்கர் பண்டியா சிற்றூர், விழாக்களை கட்டி விடுகிறது. இங்குள்ள கிராம தேவதை கல்களி அம்மன் நம்மூர் மாரியம்மனைப் போன்ற புகழுடைய

தெய்வம். கால்நடைகளைக், குறிப்பாகக் கழுதைகளைக் காத்து நலம் பெற அருளுபவள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது. அதனால், விழாவின் சகல காரியங்களும் இந்த அம்மனின் பெயராலேயே நடத்தப்படுகின்றன.

கழுதையை வாங்க வருபவர்களும்





''என்ன எருமையாரே! இப்படிக் குட்டை குட்டையா நின்னு நின்னு சேத்துல புரண்டுக்கிட்டே போனால் நாங்க எப்ப ஊர் போய்ச் சேர்றது?''

- ச. காளிக்கைராஜ்

விற்க வருபவர்களும் இந்த ஊரில் ஒன்று கூடுகிறார்கள். கழுதை பிடித்திருந்தால் வாங்குபவரும், விற்பவரும் ஒரு புதிய பானைக்குள் கையை விடுகிறார்கள். விரல்களை அசைத்துத் தொட்டு பானைக்குள்ளேயே சங்கேத மொழியில் பேரம் பேசுகிறார்கள். பேரம் குதிர்ந்தால், விற்பவர் கழுதையின் தலைக் கயிறை எடுத்து, வாங்குபவரிடம் கொடுத்து விட்டு, கழுதையின் வாலை ஒருமுறை உருவி விடுவார்! கிராமப் பஞ்சாயத்துக்கும், அம்மனுக்கும் கட்டணம் செலுத்தி விடுகிறார்கள்.

கழுதைகளுக்கு ஜாதகம் கணிக்க வல்ல சோதிடர்கள், விழாக் காலத்தில் இங்கு வருகிறார்கள். கழுதை பிறந்த நாள், நேரம், பிறந்த இடத்தைக் கேட்டு ஜாதகம் வரைந்து, பலன் சொல்லி, கணிசமான தக்ஷிணை வாங்கிக் கொள்கிறார்கள். நல்ல நேரத்தில் பிறந்த ஆரோக்கியமான கழுதைகளுக்கு நல்ல கிராக்கி. அங்கேயே பணம் கொடுத்து ஜோடி சேர்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறார்கள். இரண்டு நாள் குடும்பம் நடத்தி விட்டு இருவரும் பிரிந்து தங்கள் முதலாளிகளிடம் வந்து விடுவார்கள்! மாப்பிள்ளை சீர் என்று கோதுமைத் தவிட்டையும் கருப்பட்டியையும் சேர்த்துச் செய்த அதிரசங்களை வைத்து, வழியனுப்புகிறார்கள்!

குழந்தை இல்லாதவர்கள், இங்கே வந்து கழுதைகளுக்குக் கல்யாணம் நடத்தி வைக்கிறார்கள். இப்படிச் செய்தால் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையாம்! இதற்கும் அம்மன் கோவிலுக்குக் கட்டணம் கட்ட வேண்டும்.


கண்காட்சியில் பங்குகொள்ளும் சிறந்த ஆண் கழுதைக்கு 'கழுதை அழகன்' பட்டம் கொடுத்து கிரீடம் அணிவிக்கிறார்கள்! இதே போல் பெண் கழுதைக்கு 'கழுதை அழகி' பட்டம் தருகிறார்கள்.

ரேஸ் பிரியர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்த கழுதை ரேஸ் நடத்தப்படுகிறது. வெற்றி பெற்று முதலாவதாக வரும் கழுதைகளுக்கு கணிசமான ரொக்கம் பரிசாகத் தருகிறார்கள். பணம் கட்டியவர்களுக்கும் அதிருஷ்டம் இருந்தால் நல்ல தொகை கிடைக்கிறது. இதில் பங்குகொள்ளும் கழுதைகள் நம்ம ஊர்க் கழுதைகளைப் போல் 'முக்கி முக்கி' நடப்பதில்லை. நன்கு , வரிசையாக; வேகமாக ஓடுகின்றன! பழக்கப்படுத்தினால் பகவும் படமெடுக்கும் என்பது சரிதான்! குழந்தைகளைக் கவர கழுதைகளுக்கென 'மியூசிகல் சேர்' கூட நடத்துகிறார்கள்! சளி, இழுப்பு, குரல் அடைப்பு ஆகிய நோய்களுக்கு கழுதைப் பால் நல்ல மருந்து என்கிறார்கள். கழுதைப் பாலைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இலேகியங்கள் சூரணங்கள் கூட இந்த சீசனில் இங்கு விற்கப்படுகின்றன. கழுதையின் தோல் வழுக்கையைப் போக்கும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. அதனால், கழுதையின் தோலால் தயாரிக்கப்பட்ட குல்லாக்களுக்கு இங்கு எக்கச்சக்க விலை. தரமான குல்லாக்களும் கிடைக்கிறது!

குஜராத் மாநிலத்தில் காட்டுக் கழுதைகளுக்கென ஒரு சரணாலயம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இங்கே இவைகளைப் புகைப்படமெடுக்கக் கூட அனுமதி வாங்க வேண்டும்!

விழா நாட்களில் கழுதைகளுக்கு பலமான மரியாதை தரப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளைக் கவர என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனை புதுமைகளையும் அரசும் சுற்றுலாத் துறையும் செய்து வருகிறது.


இனிமேல் யாரையாவது மதிப்புக் குறைவாகத் திட்ட வேண்டியிருந்தால் ''கழுதை'' என்று திட்டி விடாதீர்கள்! சற்றுக் கவனமாகவே இருங்கள்!



ஆழி


பறவைகள் மட்டுமல்ல, புழு, பூச்சிகள், முதலை, ஆமை, தவளை, பல்லி முதலியவையும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன.

பறவை முட்டையின் உள் அமைப்பு:



1. வெள்ளைக் கரு, 2. மஞ்சள் கரு, 3. முட்டைக் கரு, 4. காற்றறை, 5. கருத்திரி, 6. மேல் ஓடு, 7. சவ்வு.

முட்டைகள், ஒருபக்கம் அகன்றும், மறுபக்கம் குவிந்தும் இருக்கும் காரணம், காற்றினால், அல்லது அசைவினால், கீழே உருண்டு ஓடிவிடாமல் இருப்பதற்குத்தான்.



சில சமயம், மிக அரிதாக ஒரே முட்டைக்குள் இரண்டு கருக்கள் இருப்பதுண்டு. ஆனால், அதிலிருந்து இரண்டு குஞ்சுகள் வெளிவருவதில்லை; மாறாக, அந்த முட்டை குஞ்சு பொரிக்கப்படுவதேயில்லை. அந்த வித முட்டை வழக்கத்தைவிட, பெரிதாக நீளமாக இருக்கும்!





பறவைகளில் உருண்டையான முட்டை இடுவது ஆந்தைதான்!



'கில்மோட்' என்னும் பறவையின் முட்டை ஒரு பக்கம் அகன்றும், மறுபக்கம் மிகக் குறுகியும் கூம்பு வடிவில் இருக்கும்!

உயிரினங்களில் 'தார்ன் மாத்' என்னும் விட்டில் பூச்சியின் முட்டை மிகவும் மாறுபட்டது. அதன் முட்டை கன செவ்வக வடிவில் இருக்கும்!






பாம்பின் முட்டை ஒரு தோல் போன்று வளையக் கூடியது; உடையாது. பாம்பின் முட்டை, இடப்பட்ட பிறகும் வளர்ந்து கொண்டிருக்கும்! ஒரு மலைப்பாம்பு, ஒரு தடவைக்கு 100 முட்டைகளுக்கு மேல் இட்டு அடை காக்கும்!


முட்டைக்குள் இருக்கும் குஞ்சுக்கே ஒலியை உணரும் சக்தி உண்டு! சோவியத் விஞ்ஞானி 'மன்தேய் பெல்' என்பவர், குஞ்சு வெளிவரு வதற்கு இரண்டு நாட்கள் இருக்கும்போது, ஈமூ பறவை முட்டைகளின் அருகில் இருந்து அந்தப் பறவையைப்போல் குரல் கொடுத்தார். உடனே அந்த முட்டைகள் அங்கும் இங்கும் உருண்டு ஓடின!







ஒரு கோழிமுட்டையிலிருந்து குஞ்சு வெளிவருவதற்கு ௨௧ நாட்கள் ஆகும். செயற்கையாக அடை காக்கும் எந்திரத்தில் வைத்தாலும் அப்படித்தான்!

கோழிக்குஞ்சுக்கு ஊசி போடுவது தெரியும். ஆனால், இப்போது முட்டைக்குள் இருக்கும் குஞ்சுக்கும், ஓட்டின் வழியே நோய்த் தடுப்பு ஊசி போடுகிறார்கள் விஞ்ஞானிகள்!






மிகச் சிறிய கறையான், நாள் ஒன்றுக்கு 80,000 முட்டைகள் வீதம் ஒரு மாத காலம் வரை, முட்டையிட்டுக் கொண்டே இருக்கும்!



மீன்களில் அதிகமான முட்டையிடுவது காட். அது ஒரு தடவைக்கு 70 லட்சம் முட்டைகள் இடுகிறது.



கொசு எவ்வளவு சிறியது. ஆனால், அது ஒரு தடவைக்குச் சுமார் 300 முட்டைகளுக்குமேல் இடுகிறது!



மிகச் சிறிய முட்டையிடும் பறவை 'ஹம்மிங் சிட்டு'. கட்டை விரலின் அளவே உள்ள அந்தப் பறவையின் முட்டை, ஒரு பட்டாணியின் அளவில்தான் இருக்கும்!


மிகப்பெரிய முட்டையிடும் பறவை நெருப்புக் கோழி. முட்டையின் எடை சுமார் 1½ கிலோ. ௨௪ கோழிமுட்டைகளின் அளவு இருக்கும். ஒரு மனிதனின் தலை அளவில் இருக்கும். முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சு ஒரு வீட்டுக்கோழியின் அளவில் இருக்கும்!








உலகிலேயே பெரிய முட்டை மேற்கு ஜெர்மனியில், டஸ்சல்டார்ப் பொருட்காட்சியில் இருக்கிறது. சாதாரண கோழிமுட்டையை விட 144 மடங்கு பெரியது! 6 நெருப்புக் கோழிமுட்டைகளின் அளவு பெரியது! இந்த முட்டையின் நீளம் 26 செ.மீ. குறுக்களவு 5.5 செ.மீ. பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு, மடகாஸ்கர் தீவில் வாழ்ந்த பிரம்மாண்டமான 'டயாட்ரிமா' என்னும் பறவையின் இந்த முட்டையின் மதிப்பு சுமார் 10,000 பவுன்கள்!




நியூஜிலாந்தில் உள்ள 'கிவி' பறவை, ஒரு வீட்டுக்கோழியின் அளவு இருக்கும். ஆனால் அதன் முட்டை 13 செ.மீ. நீளம். உடலையும் முட்டையையும் ஒப்பிடும்போது, மிகப் பெரிய முட்டையிடும் பறவை 'கிவி' தான்!


பொதுவாக, முட்டைகள் வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. ஆனாலும், சில பறவைகளுக்கு முட்டையின் நிறம் வேறு படுவதுண்டு. வார்ப்லர் பறவையின் முட்டை சிவப்பு நிறம். கூட் பறவையின் முட்டை பச்சை நிறம். த்ரஷ் பறவையின் முட்டை நீல நிறம். காக்கைதான் கறுப்பு; ஆனால், அதன் முட்டை நீலமும் பச்சையும் கலந்த மிக அழகான நிறம்!



ஆஸ்திரேலியாவிலுள்ள 'புஷ் டர்க்கி' என்னும் பறவையின் முட்டையின் உள்ளே குஞ்சுக்கு இறக்கைகளும் முழுவது மாக வளர்ந்திருக்கின் றன. எனவே, புஷ் டர்க்கியின் குஞ்சு, முட்டையைவிட்டு வெளியே வந்தவுடனே பறக்க முடியும்!



முதலை, கரையோரத்தில் குழிபறித்து, அதில் முட்டையிட்டு மணலால் மூடிவிடும். குறிப்பிட்ட சில நாட்களுக்குப் பிறகு, அந்த இடத்திலிருந்து, முட்டைகளிலிருந்து 'ங்...ங்...' என்று சத்தம் கேட்கும். சத்தத்தைக் கேட்ட முதலை, குழியைத் தோண்டி, தான் புதைத்த முட்டைகளை வெளியே எடுக்கும். உடனே முட்டைகளுக்குள் இருந்து குஞ்சுகள் வெளியே வருகின்றன!



பறவைகள் மாதிரி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து, ஆனால், பாலூட்டி வளர்க்கும் விலங்கு ஆஸ்திரேலியாவில் உள்ள பிளாடிபஸ் என்னும் வாத்தலகி!




பிருந்தாவனம்



விவசாயப் பெருமை

★ விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் சீனாவில்தான் அதிகம்! 80 சதவீதம். இந்தியாவில் 68%. பிரிட்டனில் 5%. அமெரிக்காவில் 12%. உலகிலேயே பிரிட்டனில்தான் விவசாயம் செய்பவர்கள் குறைவு!

- க.இரா. விஜயகுமார், செஞ்சி - 2.



மண்ணுக்குள் மலரும் பூ

★ மண்ணுக்குள் இருந்து கிழங்குகள், நிலக்கடலை இவைகளை எடுக்கிறோமே, அதே போல் மண்ணுக்குள் மலரும் பூக்கள் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 'ரீசன் டோலிய கார்டனர்' என்ற செடி தான், மண்ணுக்குள் மணம் தரும் பூக்களைப் பூக்கச் செய்கிறது! ஆஸ்திரேலியக் காடுகளில் இதைக் காணலாம்.

- எஸ். முரளி ராஜ், செஞ்சி - 2.




சித்திரம் வரையும் யானை

★ ஒரு ஆச்சரியமான செய்தி. 17 வயதான 'பிரின்சஸ் ரூபி' என்ற பெயர் கொண்ட யானை, சித்திரம் வரைகிறதாம்! இதற்கு நல்ல மூட் இருக்கும் போது பிரஷ்ஷை வர்ணத்தில் தோய்த்து அதன் தும்பிக்கையில் வைத்துவிட்டால் போதுமாம்! சித்திரத்தை வரைந்து விடுகிறதாம்! இதுவரை சுமார் 200 சித்திரங்களை இது வரைந்துள்ளதாம்!

- தா. ஷேக் உசேன், செஞ்சி.

நீர்மூழ்கிக் கப்பல்



★ கடலின் மேற்பரப்பின் உள்ளே மூழ்கிச் சென்று தாக்கவல்ல நீர் மூழ்கிக் கப்பல் (Submarine) இங்கிலாந்து நாட்டவரான கோர்னலிஸ் டிரிபெல் (Cornelis Drebbel) என்பவரால் கி.பி. 1624 ல் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த நீர்மூழ்கிக் கப்பல் முதன் முதலாக தேம்ஸ் நதியில் வெள்ளோட்டம் விடப்பட்டது. பல மணி நேரம் இந்த நீர்மூழ்கிக் கப்பல், நீரினுள்ளே வெற்றிகரமாகப் பயணம் செய்து. புதுமை நிகழ்த்திக் காட்டியது!

- எஸ். ரவி, ஆற்காடு.



நாய்க்கும் சிலை!

★ அயர்லாந்து நாட்டில் அன்ட்ரிம் அரண்மனை மீது நாய் ஒன்றிற்கு நினைவுச் சின்னம் வைக்கப்பட்டுள்ளது. கற்சிலையாக அமைந்துள்ள இந்த வேட்டைநாய், 1660 ஆம் ஆண்டு லேடி மாரியோன் க்னோட் வொர்த்தி என்ற அரசியை இன்னொரு வேட்டை நாயிடமிருந்து காப்பாற்றியது. அத்துடன், எதிரிகளின் வரவை அறிந்து விடாது குரைத்து கோட்டைக் காவலர்களுக்கு உணர்த்தியது. இந்த இரு வீரச்செயல்களுக்காகத்தான் சிலை!


- அ. நவ்சாத், மொரப்பூர்.

சிலந்தி இழையும் புல்லட் புரூஃப்பும்!

★ பட்டுப் பூச்சியில் இருந்து பட்டு நூல் எடுப்பது போல ''ஆர்ப்வீவர்ஸ்'' என்ற சிலந்தி சுரக்கும் திரவத்தில் இருந்தும் ஒரு வகைப் பட்டு இழை தயாரிக்கப் படுகிறது. இந்த இழை, இரும்பை விட வலிமையானது! பலவகையான துணிகளைத் தயாரிக்க இந்தப் பட்டு இழை பயன்படுகிறது.

அமெரிக்க இராணுவ ஆராய்ச்சி நிலையம் இந்த இழையைப் பயன்படுத்தி குண்டு துளைக்காத (புல்லட்-புரூப்) இராணுவ உடைகளை தயாரிக்கின்றது!

- க.இரா. விஜயகுமார், செஞ்சி - 2.



பிளாஸ்டிக் விமானம்!

★ இக்காலத்தில் பிளாஸ்டிக் எப்படியெல்லாம் பயன்படுகிறது என்பது எல்லோரும் அறிந்ததே.

அமெரிக்காவில் இப்போது பிளாஸ்டிக்கில் விமானத்தைத் தயாரிக்கிறார்கள். இந்த விமானம் லிட்டருக்கு நாலு கிலோ மீட்டர் பறக்கும்!

மற்ற விமானங்கள் லிட்டருக்கு இரண்டு கிலோ மீட்டரே பறக்குமாம்.

இவ்விமானம் எடையில் மிகக் குறைவு. பிளாஸ்டிக், ரசாயனப் பொருள்கள், கரிநார்கள் இவற்றைக் கொண்டு இந்த விமானங்கள் செய்யப்படுகின்றன.

ந. நவமணி, நல்லாலம்.



★ உங்கள் கையெழுத்து 'மிகவும் கிறுக்கலாக இருக்கிறதா? அப்படியானால் நீங்கள் கிறுக்கி எழுதுவதை விட்டு விட்டு நன்றாக எழுதப் பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் அதன் பின்விளைவு மோசமாக இருக்கும்! அறிஞர்கள் வாழ்வில் நடந்த சில நிகழ்ச்சிகளே ஆதாரம்.

ஜேம்ஸ் ஜாய்ஸ் என்கிற பிரபல நாவலாசிரியர் தம்முடைய அற்புதப் படைப்பான 'யூலிஸஸ்'ஸைத் தபால் மூலம் அச்சுக்கு அனுப்பினார். அதைத் தற்செயலாகக் கண்ட பிரிட்டிஷ் போலீஸ் அதிகாரிகள். இது சங்கேத மொழியாக

இருக்குமோ என்று தலையைப் பிய்த்துக் கொண்டனர்.

நதானியல் ஹாதர்ன் எழுதிய பல அற்புதக் கதைகள் இன்னும் அச்சாகவில்லை. காரணம். அவருடைய கையெழுத்தை இன்னும் எவராலும் படித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை.

நெப்போலியன் கடிதம் எழுதினால். அது யுத்த களத்தின் வரைபடமா அல்லது கடிதமா என்று இனம் கண்டுபிடிக்கவே பலநாட்களாகுமாம்!

இனிமேலாவது அழகாக எழுதுவீர்கள் அல்லவா!

தா. ஷேக் உசேன், செஞ்சி.




கழுதை வரைந்த சித்திரம்!

★ 1920 ஆம் ஆண்டு பாரிஸில் ஓர் ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. அதில் வைக்கப்பட்டிருந்த (And the Sun Went to Sleep) சூரியன் தூங்கச் சென்றது எனும் தலைப்பிலான மாடர்ன் ஆர்ட் எல்லோரது கவனத்தையும் கவர்ந்தது. அதற்குப் பரிசும் கிடைத்தது.

ஆனால், அதை யார் வரைந்தது எனும் விஷயம் மட்டும் மர்மமாகவே வைக்கப் பட்டிருந்தது. உண்மையில் அது எப்படி வரையப்பட்டது தெரியுமா? ஒரு கழுதையின் வாலில் பிரஷ்ஷைக் கட்டிவிட்டு விட அது வாலை ஆட்ட ஆட்ட விழுந்த ஓவியமே அது!

- தா. ஷேக் உசேன், செஞ்சி.

'ஹேப்பி பர்த்டே' பாடல்



★ பிறந்த நாள் கொண்டாடும் போது ஹேப்பி பர்த்டே டு யூ என்று வாழ்த்துகிறோம் அல்லவா? இந்த வழக்கம் எப்படி ஏற்பட்டது தெரியுமா?

1893 ஆம் ஆண்டு சிறு குழந்தைகளுக்குப் பாடல் வேண்டும் என்பதற்காக, மைல்ட்ரெட், பெட்டிஹில் என்ற இரு சகோதரிகள் "ஹேப்பி பர்த்டே டு யூ" என்ற பாடலை இயற்றிப் பாடினார்கள். இந்தப் பாடல் அக்கால சிறுவர், சிறுமியர்களிடையே பிரபலமடைந்தது. சிறுவர், சிறுமியர்களின் பிறந்த நாளின் போது பெரியவர்கள் பாடினார்கள். இப்படிப் பாடப்பட்ட பாடல் நாளடைவில் எல்லா வயதினருக்கும் பாடப்பட்டது. இன்று உலகின் எல்லாராலும், எல்லா வயதினராலும் ஹேப்பி பர்த்டே டு யூ பாடப்படுகிறது.

- தா. ஷேக் உசேன், செஞ்சி - 2.



மாத்திரைக் காப்பி!

★ அமெரிக்க விஞ்ஞானிகள் ஒரு புது மாத்திரையைக் கண்டுபிடித்து உள்ளார்கள். இது காய்ச்சல் தலைவலிக்குப் பயன்படாது. சாதாரணத் தண்ணீரை வெந்நீராக்கவே இது உபயோகமாகிறது!

இந்த மாத்திரையை 'ஜில்'லென்று இருக்கும் தண்ணீரில் போட்டதும் அது வெப்பம் மிகுந்த வெந்நீராகிறது.

அடுப்பு இல்லாத ஒரு பகுதியில் இருக்க நேரும்போது இம்மாத்திரையைப் போட்டு வெந்நீராக்கி, அதில் காப்பித் தூளையும், சர்க்கரையும் கலந்தால் திடீர் காப்பியைத் தயாரித்து விடலாம்.

ந. நவமணி, நல்லாலம்.



மஃப்டி தோன்றியது இப்படித்தான்!

★ பதவிக்குரிய சீருடையை அணியாமல் சாதாரண உடையிலிருக்கும் போது, மஃப்டியில் இருப்பதாக ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள். மஃப்டி என்னும் சொல் அரபு மொழியிலிருந்து வந்ததாகும். இஸ்லாமிய சட்ட திட்டங்களை அறிந்து குரான் ஓதுகின்ற தகுதியுள்ளோரை மஃப்டி என்று அழைப்பார்கள். அவர்கள் சாதாரண எளிய வகை உடைகளை அணிவதே வழக்கம். மஃப்டி என்பதற்கு ஆங்கிலத்தில் எளிய வகை உடை என்று அர்த்தம். இந்த அடிப்படையில் ஏற்பட்டதுதான் மஃப்டி என்ற சொல்.

- தா. ஷேக் உசேன், செஞ்சி.

மாட்டிவிட வந்தவரும் மாட்டிக் கொண்டவரும்!

குழந்தைகளின் மனம் கவர்ந்த அந்தக் கவிஞர் காரைக்குடிக்கு மாற்ற லாகி வந்திருந்தார். கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு அல்லவா? ஏற்கெனவே சென்னையில் இருந்த போது அவருடன் கடித வாயிலாக நட்பையும் அன்பையும் வளர்த்திருந்த தென்பகுதி மாவட்ட அறிஞர் பெருமக்களுக்கும் அன்பர்களுக்கும் கவிஞரின் காரைக்குடி மாற்றல் பெரிய வாய்ப்பாக இருந்தது. அலுவலகப் பணி நேரம் தவிர மீதி நேரமெல்லாம் கவிஞர் தமது அன்பர் நண்பர் குழாத்தில் சிக்குண்டிருந்தார்.

கவிஞர் குழந்தைகளுக்காக எழுதும் பாடல்களைப் பார்த்து மனம் பறிகொடுத்து, அவரது வழியிலேயே, அவரைக் குருவாக வைத்துக் கொண்டு, குழந்தைப் பாடல்களை எழுதியவர்கள் ஏராளம். அப்படிப்பட்ட சீடர் ஒருவர் முத்துராமலிங்கபுரத்தில் இருந்தார். கவிஞர் சென்னையில் இருந்து காரைக்குடிக்கு மாற்றலாகி வந்ததைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிய எண்ணற்ற அன்பர்களுள் இவர் குறிப்பிடத்தக்கவர். வாரம் இருமுறையாவது கடிதம் எழுதுவார். மாதத்திற்கு ஒருமுறையாவது காரைக்குடிக்கு வந்து கவிஞரைச் சந்திப்பார். அப்படி அவர் சந்திக்க வராத போது கவிஞரே அலுவலகப் பணிகளுக்காக வரும் போது அவரை வந்து சந்திப்பார். கவிஞர் பங்கு கொள்ளும் பல நிகழ்ச்சிகளிலும் பெரும்பாலும் அந்த ஆசிரியரும் பங்கு கொள்வார். அத்தகைய ஒரு நட்புப் பிணைப்பு இருவருக்கும் இடையே இருந்தது.

கவிஞரைத் தமது "குருநாதர்", என்று கூறிக் கொள்வதில் பெருமை பெற்றிருந்த அந்த ஆசிரியர் தமது வீட்டில் அவரது புகைப்படம் ஒன்று இருந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணினார். அடுத்த முறை காரைக்குடிக்கு வந்த போது தமது விருப்பத்தை வெளியிட்டார்.

"ஐயா, உங்கள் போட்டோ ஒன்று எனக்கு வேண்டும்."

"எதற்காக? என்னை உங்கள் வீட்டில் மாட்டி வைக்கப் போகிறீர்களா?" என்று தனது புகழ்பெற்ற புன்னகையுடன் பதில் கேள்வி கேட்டார் கவிஞர்.

கேள்வியில் இழைந்திருந்த நகைச் சுவை நயத்தை ரசித்த நண்பர், "ஆமாம் ஐயா, உங்களை ரொம்ப நாளாக எங்கள் வீட்டில், மாட்டி வைக்க வேண்டும் என்ற ஆசை!" என்றார்.

புகைப்படம் கேட்டு வரும் நண்பர்களுக்கு உடனே தந்து விடும் கவிஞர், ஆசிரிய நண்பர் கேட்டதும் மட்டும் ஏனோ உடனே தரவில்லை. அதைப் பற்றிப் பேசவும் இல்லை! நண்பருக்குச் சிறிது ஏமாற்றம்தான்.

இருவரும் வெளியே கிளம்பினர். வழக்கப்படி ஏதோ நிகழ்ச்சிக்குத்தான் தன்னை அழைத்துப் போகிறார் என்று எண்ணிய நண்பர் அவரோடு சென்றார். நண்பரை அழைத்துச் சென்ற கவிஞர், அவருடன் கூட்டம் எதற்கும் செல்லவில்லை. நேராக புகைப்படம் எடுக்கும் ஸ்டூடியோவுக்கு அவரை அழைத்துச் சென்றார். நண்பரைத் தம் அருகே நிற்க வைத்துக் கொண்டு ஒரு புகைப் படம் எடுக்க வைத்தார்.


"என்னை மட்டும் மாட்டி வைக்கத் திட்டம் போட்டது இனி நடக்காது. என்னோடு உங்களையும் மாட்டி வைத்தாக வேண்டும்" என்றார் கவிஞர்



● மாட்டி விட வந்த பொன்ராசனும், அவரையும் மாட்ட வைத்த குழந்தைக் கவிஞரும்!

சிரித்தபடி.

நண்பர் மனம் நெகிழ்ந்து போனார். அந்த அதிசயக் கவிஞர் தமிழ் அறிந்த பல்லாயிரக்கணக்கான குழந் தைகளைத் தமது இனிய எளிய பாடல் களால் மகிழ்வித்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாதான். அந்த முத்து ராமலிங்கபுரம் நண்பர் குழந்தைக் கவி ஞரின் மனம் கவர்ந்த அன்பர் கவிஞர் ரா. பொன்ராசன்தான்! வள்ளியப்பா வெறும் கவிஞர் மட்டுமல்ல. மனித நேயப் பண்புகளுக்கு உறைவிடமாக வும் திகழ்ந்து நண்பர்களை நெகிழ வைத்த பண்பாளரும் கூட!



ஐந்தாவது உலகக் கோப்பையை யார் வெல்வார்கள்?

ஆஸ்திரேலியா - நியூசிலாந்தில் ஐந்தாம் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் பிப்ரவரி 22 முதல் மார்ச் 25 வரை நடைபெற உள்ளன.

இதுவரை நடந்துள்ள நான்கு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளை விட இந்த ஐந்தாவது போட்டி மூன்று விதத்தில் மாறுபட்டது. இது வரை நான்கு போட்டிகளிலும் எட்டு நாடுகளே பங்குகொண்டன. இம் முறை ஒன்பது நாடுகள் பங்கேற் கின்றன. இதுவரை பங்கேற்ற எட்டு நாடுகளும் இரண்டு பிரிவாக - பிரி வுக்கு நான்கு நாடுகள் அரை இறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்று ஆடின. ஆனால், இம்முறை இவ்வாறு பிரிக் கப்படாமல் ஒன்பது நாடுகளும் ஒன்றையொன்று ஒருமுறை மோத இருக்கின்றன. (Round Robin League) இம்முறை பகலில் மட்டு மில்லாமல் இரவிலும் சில போட்டிகள் நடக்க விருக்கின்றன.

இந்த முறை பங்கேற்கும் நாடுகள் : ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கி லாந்து, இந்தியா, இலங்கை, பாகிஸ் தான், வெஸ்ட் இண்டிஸ், ஜிம் பாப்வே, தென் ஆப்பிரிக்கா (முதன் முறையாக).

முதற் சுற்றில் அதிகப் புள்ளிகள் பெற்று முதல் நான்கு இடங்களை வகிக்கும் நாடுகள், அரை இறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெறும். முதல் இடத்தைப் பெற்ற நாடு நான்காவது இடம்பெற்ற நாடுடனும், இரண்டா வது இடத்தைப் பெற்ற நாடு மூன்றா வது இடம்பெற்ற நாடுடனும் மோதும். இறுதிப் போட்டி மார்ச் 25 ஆம் தேதி ஆஸ்திரேலியாவின் 'மெல்

நீ. சூர்யப்பிரகாஷ்



பிஷன்சிங் பேடி

போர்ன்'ல் நடைபெறும். கிரிக்கெட் மைதானங்களிலேயே மிகப் பெரியது 'மெல்போர்ன்' மைதானம்தான். இறுதிப் போட்டியை சுமார் 1,25,000 ரசிகர்கள் நேரில் கண்டு மகிழ்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களைத் தவிர வானொலியிலும் டீ.வி.யிலும் கேட்டும் பார்த்தும் ரசிக்கப் போகிறவர்களின் எண்ணிக்கை பல இலட்சங்கள்!

முதல் மூன்று உலகக் கோப்பைப் போட்டிகள் இங்கிலாந்தில் நடைபெற்றன. இவற்றை 'புருடென்ஷியல்' என்ற இங்கிலாந்து 'இன்சூரன்ஸ்' நிறுவனம் நடத்தியதால் 'புருடென்ஷியல்' கோப்பை என்றழைக்கப்பட்டன. நான்காவது உலகக் கோப்பைப் போட்டி இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளால் இணைந்து நடத்தப்பட்டது. இதை இந்தியாவின் 'ரிலையன்ஸ்' நிறுவனம் நடத்தியதால் 'ரிலையன்ஸ்' கோப்பை என்றழைக்கப்பட்டது. தற்போது ஐந்தாவதாக 'பென்ஸன் அண்ட் எட்ஜஸ்' உலகக் கோப்பைப் போட்டி.

1975-இல் நடைபெற்ற முதல் போட்டிகளில், A- பிரிவில் இங்கிலாந்து, இந்தியா, நியூசிலாந்து மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளும், B- பிரிவில் வெஸ்ட் இண்டீஸ், ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளும் இடம் பெற்று ஆடின. அரை இறுதிப் போட்டிகளில் வெஸ்ட் இண்டீஸ் நியூசிலாந்தையும் மற்றும் ஆஸ்திரேலியா இங்கிலாந்தையும் வென்றன. ஜூன் மாதம் 21 ஆம் தேதி 'லார்ட்ஸ்' மைதானத்தில் நடைபெற்ற பரபரப்பான இறுதிப்

மோகிந்தர் அமர்நாத்



வெற்றிக் களிப்பில் கபில், கவாஸ்கர்...





"கடவுள் தோன்றினால் என்ன கேட்பாய்?"
"என் அப்பாவின் பிராக்ரஸ் ரிப்போர்ட்டைத்தான்!"
- சி. அருள்மணி

போட்டியில் வெஸ்ட் இண்டிஸ் ஆஸ்திரேலியாவை 17 ரன்கள் வித்தியாசத்தில் வென்று கோப்பையைப் பெற்றது.

1979-இல் நடைபெற்ற இரண்டாவது போட்டிகளில் A பிரிவில் வெஸ்ட் இண்டிஸ், இந்தியா, நியூசிலாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளும் B பிரிவில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான் மற்றும் கனடா ஆகிய நாடுகளும் இடம்பெற்று ஆடின. அரை இறுதிப் போட்டிகளில் வெஸ்ட் இண்டிஸ் பாகிஸ்தானையும் மற்றும் இங்கிலாந்து நியூசிலாந்தையும் வென்றன. ஜூன் மாதம் 23 ஆம் தேதி 'லார்ட்ஸ்' மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வெஸ்ட் இண்டிஸ் இங்கிலாந்தை 92 ரன்கள் வித்தியாசத்தில் வென்று தொடர்ந்து 2வது முறையாகக் கோப்பையைப் பெற்றது.

1983-இல் நடைபெற்ற மூன்றாவது போட்டிகளில் A- பிரிவில் வெஸ்ட் இண்டிஸ், இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜிம்பாப்வே ஆகிய நாடுகளும், B- பிரிவில் இங்கிலாந்து, பாகிஸ்தான், நியூசிலாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளும் இடம் பெற்று ஆடின. அரை இறுதிப் போட்டிகளில் வெஸ்ட் இண்டிஸ் பாகிஸ்தானையும் மற்றும் இந்தியா இங்கிலாந்தையும் வென்றன. ஜூன் மாதம் 25 ஆம் தேதி நடைபெற்ற பரப்பரப்பான இறுதிப் போட்டியில் வெஸ்ட் இண்டிஸ்தான் மூன்றாவது முறையும் கோப்பையை வெல்லும் என்று பலரும் எதிர்பார்த்திருந்த போது, இந்தியா மிகவும் அபாரமாக ஆடி வெஸ்ட் இண்டிஸை 43 ரன்கள் வித்தியாசத்தில் வென்று கோப்பையைப் பெற்றது. சென்ற இரு போட்டிகள் போலில்லாமல் இப் போட்டிகளில் முதற்சுற்றில் ஒரு பிரிவிலிருந்த நாடு தன் பிரிவில் இருந்த மற்ற மூன்று நாடுகளுடன் இருமுறை மோதின.

1987-இல் நான்காவது போட்டிகள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளால் இணைந்து நடத்தப்பட்டன. A- பிரிவில் இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஜிம்பாப்வே ஆகிய நாடுகளும், B பிரிவில் வெஸ்ட் இண்டிஸ், பாகிஸ்தான் , இங்கிலாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளும் இடம்பெற்று ஆடின. பாகிஸ்தானில் உள்ள லாஹூரில் நடைபெற்ற முதல் அரை இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா, பாகிஸ்தானையும், இந்தியாவில் உள்ள 'பம்பாயில்' நடைபெற்ற இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் இங்கிலாந்து இந்தியாவையும் வென்றன. நவம்பர் மாதம் 8 ஆம் தேதி கல்கத்தாவின் 'ஈடன் கார்டன்ஸ்' மைதானத்தில் நடைபெற்ற பரபரப்பான இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா இங்கிலாந்தை 7 ரன்கள் வித்தியாசத்தில் வென்று கோப்பையைப் பெற்றது.

நடக்க இருக்கும் ஐந்தாவது போட்டியில் உலகக் கோப்பையை யார் வெல்லப் போகிறார்கள் என்பது பற்றி கிரிக்கெட் ரசிகர்களிடையே மாறுபட்ட கருத்துகள் உள்ளன. ஆஸ்திரேலியாதான் கோப்பையைத் தட்டிச் செல்லும் என்றே பலரும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை அது ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்திலுள்ள மைதானங்களில் ஏற்கெனவே நன்கு விளையாடியுள்ளது. மேலும், இந்தப் போட்டிகள் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெறுவதால் அப்போது அங்கு நிலவும் சீதோஷ்ண நிலை நம் 'ஸ்விங்' பௌலர்களின் திறமைக்கு மிகவும் துணை புரிவதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம்முடைய 'பேட்டிங்கும்' சிறப்பாக அமைந்து விட்டால் கோப்பை நமக்குத்தான். ஆனால் அதிர்ஷ்ட தேவதை என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாளோ!

சார் தபால்!

சிரித்து சிரித்து...

★ பிருந்தாவனக் கவியரங்கத்தில் பூத்த பத்துப் பாடல்களும் முத்து.
மதுக்கூர், தா. சரவணன்.

★ 'கல்கள்ளைப் பற்றி ஆழி கூறியதைப் படித்த எங்கள் மனம் அதிசயித்தது! இரு பக்கங்களை கண் இமைக்காமல் படித்தேன். மற்றும் 'மலைக்கோட்டை மர்மம்' தொடர்கதை மர்மமாகவே உள்ளது. என்னுடைய மனமார்ந்த பாராட்டு.
செஞ்சி - 2, கே. சான்பாஷா.

★ ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் பற்றி, தெரியாத பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். கட்டுரை மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.
செஞ்சி, அ. திருமுருகன்.

★ 'காட்டில் நடந்த தேர்தல்' கதை சுவாரஸ்யமாக, சூப்பராக இருந்தது.
சேலம், எம். கே. வேங்கவேல்.

★ உண்மையிலேயே பொய் மணி சொல்பவர்களுக்குச் சாட்டை அடி கொடுத்தது 'பொய் மணி' சித்திர கதை.
சேலம், எம். கே. வேங்கவேல்.

★ 'பாவம் மருது' கதை படு சூப்பர்.
பள்ளிகொண்டா, என். ப்ரமிளா.

★ ஓவியத் துறையில் சிறந்து விளங்கும் மாணவர் சுபாஷ்குமார், செஸ் போட்டியில் சிறந்து விளங்கும் மாணவி ஆர்த்தி ஆகியோரின் திறமைகளை வெளியுலகுக்கு உணர்த்திய கோகுலத்துக்குப் பாராட்டுக்கள்.
விசலூர் - 1, ஜி. ஜி. கிருஷ்ணன்.

★ 'பட்டத்துக் கழுதை' சிறுகதை சிரித்து, சிரித்து வயிறெல்லாம் நோகடிச்சிடுச்சி.
தக்கோலம், பி. அ. முஸ்தபா கமால்.

★ ஆர்த்தியின் சாதனை வியக்க வைத்தது. தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது.
மதுக்கூர், மதுக்கூர் ரமேஷ்.

★ மின்மினியைப் பற்றிய பல அறிவியல் உண்மைகளை எழுதிய ஆசிரியருக்குப் பாராட்டுகள்!
நல்லாலம், ச. சிவா.

★ 'பட்டாம்பூச்சிப் பண்ணை!' பற்றிய தகவல்களைப் படித்து அதிசயித்துப் போனேன்!
சேலம் - 5, என். சுரேஷ்.

★ 'தம்பித்துரையும் கடல் சர்ப்பமும்' படக்கதை ஏ ஒன்.
தருமபுரி - 4, எம். சோமசுந்தரம்.

★ தாமஸ் ஆல்வா எடிசன் பற்றிய கட்டுரை சிறப்பாகவும், படிப்பினையாகவும் இருந்தது.
புன்செய்புளியம்பட்டி, பி. எல். கிரிஜா.

★ பட்டிக்காட்டான் என்றால் முட்டாள் அல்ல என்பதைக் கூறியது 'நானா பட்டிக் காட்டான்' சிறுகதை.
மதுக்கூர், மதுக்கூர் ரமேஷ்.

★ மாதமிருமுறை மலராயோ?
ஏதும் அறியா எங்களுக்கு
எல்லாம் தெரிய வைத்திட்டோய்!
போதும் போதும் எனும்படிக்கு
புதிது புதிதாய்த் தந்திடவே
மாத இதழ் 'கோகுலமே!'
மாத மிருமுறை மலராயோ?
பாதம் பணிந்து கேட்கின்றோம்!
பரிசீலனைதான் செய்வீரே!
செட்டிகுறிச்சி, அ. சுப்பையன்.

★ உலகிலேயே சிறிய நாடு TULAU (துவாலு) எனக் குறிப்பிட்டுள்ளார். அது தவறு. சிறிய நாடு வாடிகன் சிட்டி ஸ்டேட் ஆகும்.
பரப்பளவு - 0.44 KM^2 மக்கள் தொகை - 1,000
துவாலின் பரப்பளவு - 26 KM^2 மக்கள் தொகை - 8,229
நாகூர், எஸ். அமீர் அலி.

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா : 2344157; டைரக்டர் : 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-.
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-.



ஆம். சரியாக சாப்பிடாமல் இருப்பது குழந்தையின் வளர்ச்சியை பாதிக்கலாம்.

சரியாக சாப்பிடாமலிருக்கும் குழந்தை தனது உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தையும் முழுமையாகப் பெறுவதில்லை. இப்பற்றாக்குறை அவனது வளர்ச்சியை பாதிக்கக் கூடும். அவனுக்கு அளிப்பீர் காம்ப்ளான். அவன் இழந்த ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய காம்ப்ளான் உதவுகிறது. குழந்தையின் வளர்ச்சிக்குத் தலைசிறந்த புரதமாகிய பால் புரதம் 20% மற்றும் உடலுக்குத் தேவையான 22 அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் அடங்கியதாகும் காம்ப்ளான்.

காம்ப்ளான் நாவிற்கினிய
5 சுவைகளிலே கிடைக்கிறது.



காம்ப்ளான்®

திட்டமிட்ட பரிபூரண உணவு.

GX/27/203 TAM R 1

REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka